بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் 1924-ம் ஆண்டு மேற்கொண்ட முதல் ஐரோப்பிய பயணமும் அதன் அருட்களும்

ولقد نصركم الله ببدر وأنتم أذلة

தொகுதி 9

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

# பதர்
# வார இதழ்
# காதியான்

Weekly BADAR Qadian

இதழ் 51- 52

வருடாந்திர சந்தா ரூபாய் 600

www.akhbarbadr.in

Postal Reg.No.GDP/39/2023-2025 • ஹிஜ்ரி கமரி 1446 ஜமாதிஸ் ஸானி 16-23 • ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஃபத்ஹ் 19 - 26 • 19 - 26 டிசம்பர் 2024

## இறைவா! உனது கம்பீரம் உலகில் வெளிப்படட்டுமாக! மேலும் இந்த மஸ்ஜித் உனது பெயரைப் பரப்புவதற்கான ஒரு பெரும் தலைமையகமாக ஆகட்டுமாக! ஆமீன்

அக்டோபர் 03 1926 அன்று லண்டன் மஸ்ஜித் ஃபஸ்ல் பெரும் பொலிவுடனும் அழகுடனும் திறக்கப்பட்டது
அந்த சந்தர்ப்பத்தில் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் அகப்பார்வையை வலுவூட்டக் கூடிய தூதுச் செய்தியை அனுப்பினார்கள்
திறப்புவிழா சந்தர்ப்பத்தின் போது பார்வையாளர்களுக்கு அது வாசித்துக் காட்டப்பட்டது
அதன் ஒரு பகுதி கீழே சமர்ப்பிக்கப்படுகின்றது

**ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**


சகோதரர்களே! உலகம் இணை வைத்தல், மார்க்கமற்றத் தன்மை, இறைவனிடமிருந்து கவனமற்று இருத்தல், தேசியவாதம், இன வெறி மற்றும் கட்சிகளுக்கிடையிலான மோதல் ஆகியவற்றின் கூடாரமாக ஆகிக் கொண்டிருக்கின்றது. எனவே இறைவனின் மீது நேசம் கொண்டுள்ள ஒவ்வொரு நபரின் மீதும் இது கடமையாகும். அதாவது அவர் தனது கவனக் குறைவிலிருந்து விழித்துக் கொள்ள வேண்டும். மேலும் இறைவனின் பெயரால் கட்டப்பட்டுள்ள இல்லத்தை மார்க்கமற்றத் தன்மை மற்றும் தீமையின் தலைமையகமாக ஆக்குவதற்கு பகரமாக ஏகத்துவம் மற்றும் ஒருமைப்பாட்டிற்கான தலைமையகமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். வாருங்கள்! நாம் அனைவரும் இணைந்து நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ள ஏகத்துவத்தை நிலை நாட்டுவோம்! காழ்ப்புணர்ச்சி என்ற மாபெரும் சிலையிலிருந்து விலகி ஏக இறைவனை நேர்மையுடன் தேட வேண்டும் என்ற ஆன்மாவை மக்களிடத்தில் நாம் உருவாக்குவோம்! ஒருவர் எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி! அவர் இதனை ஒப்புக் கொள்ளட்டும்! நமது மூளைகள் உருவாக்கி வைத்துள்ள அந்த இறைவனின் பக்கம் நாம் குனியக் கூடாது. ஏனெனில், நாம் அதற்கு என்ன பெயர் வைத்தாலும் அது ஒரு சிலை ஆகும். மாறாக முழு உலகையும் படைத்த அந்த இறைவனின் பக்கம் குனிய வேண்டும். அவனது வெளிப்பாடு உலகின் ஒவ்வொரு துகளிலும் தென்படுகின்றது. அவன் தனது உயிருள்ள ஆற்றல்களை தனது பரிசுத்தவான்களின் மூலமாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றான். மேலும், அந்த கிழக்கு மற்றும் மேற்கின் இறைவன் மீது நம்பிக்கை கொண்டவாறு உலகில் அமைதியும் பாதுகாப்பும் நிலைபெறுவதற்காக முயற்சி செய்ய வேண்டும். ஒரு நாட்டின் உள்ளார்ந்த அமைப்பிலும் பல்வேறு நாடுகளுக்கு மத்தியிலும் இந்த நிலை உருவாக வேண்டும். நமது செல்வம் மற்றும் ஆற்றல்கள் மூலமாக மக்களை வீழ்த்துவதில் நாம் பெருமிதம் கொள்ளக் கூடாது. அதேபோன்று நாம் நமது கூட்டத்தின் மூலம் மக்களை அவர்களுக்குரிய உரிமைகளிலிருந்து இழப்பிற்குரியவர்களாக ஆக்க முயற்சி செய்வதிலும் பெருமிதம் கொள்ளக் கூடாது. மாறாக, நாம் பலவீனமானவர்களின் மீது கருணை காட்டுவதிலும், உரிமை படைத்தவருக்கு அவருக்குரிய உரிமையை கொடுப்பதிலுமேயே நாம் பெருமிதம் கொள்ள வேண்டும்.

இறைவா! உனது கம்பீரம் உலகில் வெளிப்படட்டுமாக! மேலும் இந்த மஸ்ஜித் உனது பெயரை பரப்புவதற்கான ஒரு பெரும் தலைமையகமாக ஆகட்டுமாக! ஆமீன்.

(அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், அக்டோபர் 26, 1926, பக்கம் 3)



ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மற்றும் அன்னாருடன் ஐரோப்பியப் பயணத்தில் சென்ற தோழர்கள்நாற்காலியில் வலமிருந்து இடம் : (1) மவ்லவி அப்துர் ரஹ்மான் ஸாஹிப் மிஸ்ர் (2) ஹஸ்ரத் சவ்தரி ஃபத்ஹ் முஹம்மது ஸாஹிப் ஸியால்
(3) ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள்
(4) ஹஸ்ரத் கான் ஸுல்ஃபிகார் அலீ கான் ஸாஹிப் கோஹர்(5) ஹஸ்ரத் ஹாஃபிழ் ரோஷன் அலீ ஸாஹிப் நிற்பவர்களில் வலமிருந்து இடம்
(1) மியான் ரஹ்ம் தீன் ஸாஹிப் பாவர்சி (2) ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (3) ஹஸ்ரத் டாக்டர் ஹஷ்மத்துல்லாஹ் ஸாஹிப் (4) ஹஸ்ரத் பாயி அப்துர் ரஹ்மான் ஸாஹிப் காதியானி
(5) ஹஸ்ரத் சவ்தரி முஹம்மது ஷரீஃப் ஸாஹிப் வக்கீல் ஸாஹிவால் (6) ஹஸ்ரத் மவ்லவி அப்துர் ரஹீம் ஸாஹிப் தர்த்
(7) ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது ஸாஹிப்




இங்கிலாந்திற்கு புறப்படுவதற்கு முன் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் காதியான் ஜமாஅத் உறுப்பினர்களுடன் (ஜுலை 11, 1924)




இங்கிலாந்து பயணத்தின் போது எடுக்கப்பட்ட நினைவு கூறத்தக்க நிழற்படம்




ரயில்வே ஸ்டேஷனில் ஹுஸூர் (ரலி) அவர்களை அஹ்மதி சகோதரர்கள் சந்தித்த போது



வாக்களிக்கப்பட்ட மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஸீஹ்
ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை)
அவர்களின் அருளுக்குரிய நிழற்படம் (1835 - 1908)




ஸய்யிதுனா ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்)

**இந்த அருளுக்குரிய பயணத்தின்போது அன்னார் பல்வேறு இடங்களில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்**
**அன்னார் தங்கியிருந்த ஒவ்வோர் இடத்திலும் உள்ளூர் மக்களுடன் தொடர்புகளை அதிகரித்தார்கள்**
**மார்க்கத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் அறிஞர்களும் பத்திரிகையாளர்களும்**
**பொதுமக்களும் அன்னாரை சந்தித்தார்கள்**

---

**அன்னார் இந்த அனைத்துப் பயணங்களின் போதும் தனிப்பட்ட முறையிலும், ஜமாஅத்தாகவும் துஆக்களில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். பகல் முழுவதும் மற்றும் இரவில் நீண்ட நேரம் வரையிலும் பணி செய்து கொண்டிருந்தார்கள்**
**அன்னார் தமது அனைத்து நேரத்தையும் கடுமையான உழைப்புடன் கூடிய மிகவும் மும்முரமான பணிகளில் கழித்தார்கள்**

---

**இந்தப் பயணம் மிகவும் வெற்றிகரமானதாகவும் அருளுக்குரிய பயணமாகவும் இருந்தது**
**இதில் அல்லாஹ்வின் உதவி மற்றும் ஒத்தாசைக்கான காட்சிகள் எல்லா இடங்களிலும் தென்பட்டன**

---

**பத்ர் வாசகர்கள் இந்த சிறப்பிதழை படிக்க வேண்டும். அதனால் உங்களது அறிவும் ஞானமும் அதிகரிக்கும்**

---

**பதர் வாசகர்களுக்காக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
**(அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அன்பு நிறைந்த ஆன்மாவிற்கு அகப்பார்வை வழங்கக் கூடிய தூதுச் செய்தி**

இஸ்லாமாபாத் யூ.கே
MA 17-11-2024

அன்பிற்குரிய காதியான் பத்ர் வாரப் பத்திரிகை வாசகர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதஹு !

1924-ம் ஆண்டு ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மேற்கொண்ட முதல் ஐரோப்பிய பயணம் மற்றும் அதன் அருட்களும், கனிகளும் என்ற தலைப்பில் ஒரு சிறப்பிதழை வெளியிடுவதற்கான நற்பேறு பதர் பத்திரிகைக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ்! அதற்காக தூதுச் செய்தி அனுப்பும்படி என்னிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சில முக்கியமான விஷயங்களை நான் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

1924-ம் ஆண்டில் (லண்டன்) வேம்பளேயில் ஒரு சர்வ சமய மாநாடு நடத்தப்பட்டது. அதில் பிரிட்டன் ஆட்சியின் கீழ் வசிக்கும் பல்வேறு மார்க்கங்களின் பிரதிநிதிகளுக்கு அழைப்புக் கொடுக்கப்பட்டது. அவர்கள் தத்தமது மார்க்கப் போதனைகளின் மீது ஒளிபாய்ச்சுமாறு அவர்களுக்கு அழைப்புக் கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கும் மாநாட்டின் நிர்வாகத்தின் தரப்பிலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பிதழ் கிடைத்தது. அன்னார் அந்த மாநாட்டில் சுயமே கலந்து கொண்டார்கள். அந்நேரத்தில் அன்னார் தம்முடன் 11 நபர்களைக் கொண்டக் குழுவை அழைத்துக் கொண்டு சென்றிருந்தார்கள். இது கலீஃபத்துல் மஸீஹுடைய முதல் ஐரோப்பிய பயணமாக இருந்தது. மேலும் அந்தப் பயணத்தில் அரபு நாடுகளும் இடம் பெற்றிருந்தன. சிரியா, பாலஸ்தீனம் போன்ற அரபு நாடுகளிலோ ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைத் தவிர வேறு எந்த கலீஃபாவின் சுற்றுப் பயணமும் நிகழ்ந்ததில்லை. ஹுஸூர் (ரலி) அவர்கள் தமது இந்தப் பயணத்தைக் குறித்து கூறுகின்றார்கள்:

இந்தப் பயணம் இரண்டு முன்னறிவிப்புகளை நிறைவேற்றுவதற்காக அமைந்திருந்தது. ஒன்று, டமாஸ்கஸ் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்திருந்த முன்னறிவிப்பு. மற்றொன்று இங்கிலாந்து தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்திருந்த முன்னறிவிப்பாக இருந்தது. (அன்வாருல் உலூம், தொகுதி 8, பக்கம் 465)

டமாஸ்கஸ் தொடர்பான முன்னறிவிப்பு நிறைவடைவது தொடர்பாக குறிப்பிட்டவாறு அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

அடுத்து, منارۃُ الْبَيْضَاء என்பதன் விநோதமான விவகாரமும் நிகழ்ந்தது. அது எந்த மினாரா? என்பதை பார்த்து விட வேண்டுமே என்ற வியப்பு எமக்கு இருந்தது. நான் ஹோட்டலில் ஸுப்ஹ் தொழுகையை தொழ வைத்தேன். அப்போது நானும், ஸுல்ஃபிகார் அலீ கான் ஸாஹிபும், டாக்டர் ஹஷ்மத்துல்லாஹ் ஸாஹிபும் இருந்தோம். அதாவது எனக்குப் பின்னால் இரண்டு தொழுகையாளிகள் இருந்தனர். நான் (தொழுகையை முடித்து) ஸலாம் கொடுத்தபோது பார்த்தேன்; முன்னால் மினாரா இருக்கின்றது; மேலும் எங்களுக்கும் அதற்கும் இடையில் வெறும் ஒரு சாலை மட்டுமே இடைவெளி இருந்தது. இதுதான் அந்த மினார ஆகும் என்று நான் கூறினேன். மேலும் நாங்கள் அதன் கிழக்குப் பகுதியில் இருந்தோம். அங்கு இந்த வெள்ளை மினாரா மட்டுமே இருந்தது; வேறு எதுவும் இருக்கவில்லை. மஸ்ஜித் மோயாக்களின் மினாராக்கள் நீல நிறத்தைக் கொண்டிருந்தது. நான் அந்த வெள்ளை நிற மினாராவைக் கண்டபோது, எனக்குப் பின்னால் இரண்டு தொழுகையாளிகள் இருந்தனர். அந்த ஹதீஸும் நிறைவேறிவிட்டது என்று நான் கூறினேன். (அன்வாருல் உலூம், தொகுதி 8, பக்கம் 614)

ஐரோப்பிய பயணம் தொடர்பாக அன்னார் (ரலி) கூறினார்கள்:

நான் எந்த நோக்கத்துடன் பயணம் மேற்கொண்டிருந்தேனோ அந்த நோக்கத்துக்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அல்லது அன்னாருடைய கலீஃபா ஐரோப்பாவை நோக்கிப் பயணம் மேற்கொள்வது தொடர்பாக திருக்குர்ஆனிலும் குறிப்பு இடம் பெற்றுள்ளது. .......இந்தக் குறிப்பு சூரா அஸ்ஸஃப் -ல் உள்ளது. ......எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்களுக்கேற்ப துல்கர்னைன் அன்னார் (அலை) ஆவார்கள். மேலும் மேற்கத்திய நாடுகள் என்பது கிறிஸ்தவ நீரூற்றில் முகாமிட்டு இருக்கின்ற ஐரோப்பா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த மக்கள் ஆவர். எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அல்லது அன்னாருடைய ஒரு பிரதிநிதிக்கு மேற்கத்திய நாடுகளில் பயணம் மேற்கொள்ள நேரிடும் என்று தெளிவாக தெரிகின்றது. ......எனவே இந்தப் பயணம் என்பது உண்மையில் ஒரு முன்னறிவிப்பின் கீழ் நிகழ்ந்துள்ளதாகும். அது எப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தது என்றால், திருக்குர்ஆனில் அது எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த விஷயமும் தெரிய வருகின்றது. அதாவது, இந்தப் பயணம் என்பது தப்லீஃக்கிற்காக அல்ல. மாறாக, தப்லீஃக் தொடர்பான விதிமுறைகளை தீர்மானிப்பதற்காகவும், அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காகவும் மேற்கொள்ளப்படும். (அன்வாருல் உலூம், தொகுதி 6, பக்கம் 434 - 435)

இந்தப் பயணத்தின் மூலம் சில கனவுகளும் முழுமையடைந்தன. அவற்றில் ஒன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்தக் கனவு ஆகும். கூறுகின்றார்கள்:

நான் பார்த்தேன்; நான் லண்டனில் ஒரு சொற்பொழிவு மேடையில் நிற்கின்றேன். மேலும் ஆங்கில மொழியில் மிகவும் ஆதாரப்பூர்வமான ஓர் உரையின் மூலமாக இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றேன். (இஸாலா அவ்ஹாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 3, பக்கம் 377)

இது மட்டுமின்றி ஹுஸூர் (ரலி) அவர்கள் சுயமே இரண்டு கனவுகளைக் கண்டார்கள். அவற்றில் ஒன்றைக் குறித்து அன்னார் (ரலி) இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்:

எந்த அரசனின் கட்டுப்பாட்டில் முழு உலகத்தின் கடிவாளமும் இருக்கின்றதோ அவன் என்னிடம் கனவில் கூறினான்: நான் இங்கிலாந்திற்கு சென்றுள்ளேன். மேலும் ஒரு வெற்றி பெற்ற தளபதியைப் போன்று அதில் நுழைகின்றேன். மேலும் அப்போது எனது பெயர் வில்லியம் வெற்றியாளர் என்று வைக்கப்பட்டது. (அன்வாருல் உலூம், தொகுதி 8, பக்கம் 463)

எவ்வாறு இருப்பினும், அன்னார் (ரலி) இத்தாலி, சுவிட்சர்லாந்து மற்றும் ஃபிரான்சு சென்றவாறு ஆகஸ்ட் 22-ம் தேதி 1924-ம் ஆண்டு இங்கிலாந்து வந்தடைந்தார்கள். லண்டனில் தங்கியிருந்த காலங்களில் அன்னாருடைய ஏராளமான நிகழ்ச்சிகளும், மும்முரமான பணிகளும் இருந்தன. அவற்றில் ஒன்று சர்வ சமய மாநாட்டில் அன்னார் (ரலி) ஆற்றிய உரை ஆகும், மேலும் லண்டன் மஸ்ஜித் ஃபஸ்ல் அடிக்கல் நாட்டு விழா தொடர்பாக நான் சுருக்கமாக சிலவற்றை இங்கு கூறிவிடுகின்றேன்:

சர்வ சமய மாநாட்டில் அன்னாருடைய சொற்பொழிவிற்கான நேரம் செப்டம்பர் 23-ம் தேதி மாலை 5 மணி என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் கூட்டத்தின் தலைவரான சர் தியூடோர் மாரீஸன் ஹுஸூர் (ரலி) அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார். பின்னர் மிகவும் பணிவுடனும், கண்ணியமான உணர்வுகளுடனும் அன்னாரிடம் உரையாற்ற வருமாறு வேண்டினார். முதலில் அன்னார் (ரலி) ஆங்கிலத்தில் சுருக்கமான உரை ஒன்றை நிகழ்த்தினார்கள். பின்னர், "இதன் பிறகு எனது சீடர் சவ்த்ரி ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் பாரீஸ்டர் ஆஃப் லா அவர்களிடம் எனது உரையை வாசித்துக் காட்டுமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன்" என்று அன்னார் (ரலி) கூறினார்கள். ஆக, சவ்த்ரி ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்கள் அந்தக் கட்டுரையின் ஆங்கில மொழியாக்கத்தை

மிகவும் கம்பீரமான குரலிலும் மிகவும் உயர்தரமான வடிவிலும் வாசித்துக் காட்டினார்கள். அந்தக் கட்டுரையில் இஸ்லாம் தொடர்பாக தங்களுக்கு புதியதொரு விஷயம் எடுத்துரைக்கப்படும்போது பல மக்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார்கள். இந்த சொற்பொழிவு எப்படிப்பட்ட தனித்துவம் வாய்ந்ததாகவும், சிறப்பு மிக்கதாகவும் இருந்தது என்றால், கிறிஸ்தவத்தின் பெரும், பெரும் தலைவர்களும் கூட, சந்தேகத்திற்கு இடமின்றி இந்தக் கட்டுரையில் என்னென்ன சிந்தனைகள் எடுத்துரைக்கப்பட்டனவோ அவை தர்பிய்யத், சான்றுகள் மற்றும் தமது சிறப்பு மற்றும் அழகின் அடிப்படையில் தனித்துவம் வாய்ந்ததும், சிறப்பானதும் ஆகும் என்று மெய்மறந்து கூறினர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவனின் அருளினால் இந்த சொற்பொழிவு மிகவும் வெற்றிகரமாக அமைந்திருந்தது. எமது சொற்பொழிவின்போது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் அத்தனை நபர்கள் வேறு ஒருவரின் சொற்பொழிவில் இருக்கவில்லை;(நிற்பதற்கு கூட) இடமே எஞ்சியிருக்கவில்லை. மேலும் மக்கள் எனது உரையை மிகவும் கவனமாக செவியுற்றனர். மேலும், பிறகு, சர் தியூடோர் மாரீஸன் மற்றும் மற்ற நபர்கள் வாழ்த்துகள் கூறினர். மேலும் அரை மணிநேரம் வரை பல்வேறு நண்பர்கள் சூழ நின்று இருந்தார்கள். மேலும் உரையாடிக் கொண்டிருந்தனர். அல்லாஹ்வின் அருளினால் இஸ்லாத்திற்கு மாபெரும் பிரபல்யம் கிடைத்து விட்டது. மேலும் அஹ்மதிய்யத்தின் பெயர் எந்த அளவிற்கு பிரபல்யம் அடைந்து விட்டது என்றால், எதிர்வரும் நாட்களில் கடின உழைப்புடன் பணி செய்தால் பின்னர் மாபெரும் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. ( அன்வாருல் உலூம், தொகுதி 8, பக்கம் 519)

மஸ்ஜித் ஃபஸ்ல் நிகழ்ச்சியை பொருத்த வரை அக்டோபர் 19, 1924 அன்று இந்தப் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள், அரசியல்வாதிகள், தூதரக அதிகாரிகள் உட்பட ஏராளமான நபர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்தது. குறுகிய காலமே இருந்த காரணத்தால் குறைவான மக்களே வருவார்கள் என்ற எண்ணம் இருந்தது. ஆனால், விருந்தினர்கள் பெரும் எண்ணிக்கையில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மேலும் இந்த நிகழ்ச்சி பெரும் வெற்றியடைந்தது. ஹுஸுர் (ரலி) அவர்கள் இந்த நிகழ்ச்சியின் நேரத்தில் தமது உள்ளத்தின் நிலைகளை குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

எனக்கு நினைவிருக்கின்றது. 1924-ம் ஆண்டு நான் லண்டன் சென்றிருந்தபோதும், நான் அங்கு பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டியபோதும் அந்நேரத்தில் எனது நிலை இவ்வாறாக இருந்தது. அதாவது என்னால் எனது கண்ணீரை கட்டுப்படுத்தவே முடியவில்லை. ஏனெனில், அப்போது, அந்தக் காட்சி எனது கண்களுக்கு முன்னால் வந்து விட்டது. அதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து இல்ஹாம் பெற்று இந்த அறிவிப்பை செய்தார்கள்:

உலகில் ஒரு சீர்திருத்தவாதி தோன்றினார் ; உலகம் அவரை ஒப்புக் கொள்ளவில்லை; ஆனால் இறைவன் அவரை ஒப்புக் கொள்வான். மேலும் வலுவான தாக்குதல்களின் மூலமாக அவரது உண்மையை வெளிப்படுத்தி விடுவான்...... மேலும் இறைவன் கூறினான்: எழுவீராக ; மேலும் உலகில் எனது பெயரை அறிவிப்பீராக ; மேலும்,

حَانَ أَنْ تُعَانَ وَتُعْرَفَ

என்று அவரிடம் கூறுவீராக. பொருள்: அந்த நேரம் வந்து விட்டது; இறைவன் உமக்கு உதவி செய்வான் ; மேலும் உலகில் முற்றுப் பெறாத பிரபல்யத்தை உமக்கு வழங்குவான். (அன்வாருல் உலூம், தொகுதி 26, பக்கம் 529)

எவ்வாறு இருப்பினும், ஹுஸுர் (ரலி) அவர்கள் உருக்கமான துஆக்களுடன் இந்தப் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டினார்கள். பின்னர் இந்த பள்ளிவாசலில் அன்னாரும், அன்னாருக்குப் பிறகு நான் உட்பட எல்லா கலீஃபாக்களும் தொழுகைகளை நடத்தியுள்ளோம். மேலும் இங்கு தங்கியும் இருக்கின்றோம்.ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் ஹிஜ்ரத்திற்குப் பிறகோ இந்த மஸ்ஜித் காலத்தின் கலீஃபா இங்கு தங்கியிருப்பதன் காரணத்தால் தலைமையக அந்தஸ்தை பெற்றுவிட்டது. இங்கிருந்தே உலகம் முழுவதும் MTA ஒளிபரப்பு துவங்கியது. ஐந்தாவது கிலாஃபத்திற்கான தேர்தலும் இந்த மஸ்ஜிதில் வைத்து தான் நிகழ்ந்தது. மேலும் இஸ்லாமாபாத் (யூ.கே) உடைய புதிய கட்டுமானத்திற்கு முன்பு வரை கூட நான் அங்கேயே தங்கியிருந்தேன்.

இந்த அருளுக்குரிய பயணத்தின்போது அன்னார் பல்வேறு இடங்களில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அன்னார் தங்கியிருந்த ஒவ்வோர் இடத்திலும் உள்ளூர் மக்களுடன் தொடர்புகளை அதிகரித்தார்கள். மார்க்கத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும், அறிஞர்களும், பத்திரிகையாளர்களும், பொதுமக்களும் அன்னாரை சந்தித்தார்கள்.சில நபர்களை சந்திப்பதற்காக அன்னார் தமது தோழர்களையும் அனுப்பி வைத்தார்கள். இத்தாலியில் அன்னார் தங்கியிருந்தபோது, போப் அவர்களுக்கு இஸ்லாமியப் போதனைகளின் அன்பளிப்புகளை வழங்குவதற்காக அவருடன் இருமுறை கடிதத்தின் மூலம் தொடர்பு கொண்டார்கள். ஆனால், அவர் தரப்பிலிருந்து மாளிகையில் பாராமரிப்புப் பணி நடைபெறுகிறது என்ற காரணம் முன்வைக்கப்பட்டது. மேலும் சந்திப்பு நடைபெறவில்லை. அன்னார் மார்க்கக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பார்வையிட்டார்கள். அவற்றில் பாலஸ்தீனம், டமாஸ்கஸுடைய அமோதியா மஸ்ஜித், ஃபிர்அவன் சடலம் வைக்கப்பட்டிருந்த எகிப்தின் அருங்காட்சியகம், அஸ்ஹாபே கஹ்ஃபுடைய குகைகள் (Catacombs) போன்றவை அடங்கும். அன்னார் இந்த அனைத்துப் பயணங்களின் போதும் தனிப்பட்ட முறையிலும், ஜமாஅத்தாகவும் துஆக்களில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். பகல் முழுவதும் மேலும் இரவில் நீண்ட நேரம் வரையிலும் பணி செய்து கொண்டிருந்தார்கள். அன்னார் தமது அனைத்து நேரத்தையும் கடுமையான உழைப்புடன் கூடிய மிகவும் மும்முரமான பணிகளில் கழித்தார்கள்.

அன்னார் தமது இந்தப் பயணத்தின் வெற்றியைக் குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

இந்தப் பயணத்தில் ஜமாஅத்தின் மகத்துவத்தின் மீது ஏற்பட்ட தாக்கத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. நாங்கள் எந்தவொரு பகுதியையும் கடந்து செல்லும்போதும், நாங்கள் உங்களை அறிவோம் என்ற குரலே அங்கிருந்து வந்தது. ஹாலந்திற்கு சவ்த்ரி ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் சென்றார்கள். மேலும், ஒரு நபருக்கு தப்லீஃக் செய்து கொண்டிருந்தார்கள். கலந்துரையாடிக் கொண்டிருந்தபோது எனது நிழற்படம் எடுத்துக் காட்டப்பட்டது. நான் இந்த நிழற்படத்தை பார்த்துள்ளேன் என்று அந்த நபர் கூறினார். பெர்லினில் இருந்து மாஸ்டர் முபாரக் அலி ஸாஹிப் அவர்கள் ஒரு பத்திரிகையை அனுப்பினார்கள். அதில் முழு பக்கத்திலும் எனது முழு உருவப் படம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. அமெரிக்காவிலும் எனது நிழற்படம் வெளியாகி வருகின்றது. இதேபோன்று இத்தாலியிலும், பாக்தாத் நகரத்திலும் மற்றும் ஏனைய நாடுகளிலும் நிழற்படங்களும், கட்டுரைகளும் வெளியாகியுள்ளன. மேலும் இந்த வழிமுறையில் பிரபல்யம் ஏற்பட்டுள்ளது. திரும்பி வரும்போது, கப்பலில் சுவிட்சர்லாந்து நாட்டின் தூதுவரின் மனைவியும் இருந்தார். நமது நண்பர்களுடன் அவர் உரையாடினார். நிழற்படம் காட்டப்பட்டபோது, இதனை நான் (முன்னரே) பார்த்திருக்கின்றேன் என்று அவர் கூறினார். எப்படி ?என்று கேட்கப்பட்டது. அதற்கு திரைப்படத்தில் என்று அவர் கூறினார். சுருக்கமாக, எந்த அளவிற்கு பிரபல்யம் ஏற்பட்டு விட்டது என்றால், தற்போது நமது குழந்தை சென்றாலும் கூட இவருக்குப் பின்னால் வலிமையான ஜமாஅத் இருக்கின்றது என்று அவர்கள் கருதுவார்கள்.

ஆக, இந்த விஷயம் இவ்வாறு தெரிய வந்தது. அதாவது காபூலுக்கு எதிரான போராட்டக் கூட்டத்தில் மூன்று பாதிரிகள் கலந்து கொண்டிருந்தனர். அவர்கள் மிகவும் செல்வாக்கு படைத்தவர்களாக இருந்தனர். ஒருவர் சொற்பொழிவு நிகழ்த்தியவாறு கூறினார்: தற்போது அந்த காலம் வந்து விட்டது. அதாவது அந்நேரத்தில் அரசாங்கம் அஹ்மதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும். தற்போது இந்த மக்கள் மனித குலத்திற்காக துன்பங்களை சுமந்து கொண்டிருக்கின்றனர். அவர்களின் சந்ததிகள் கண்டு கொள்ளும். மேலும், எங்களது முன்னோர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தனர் என்றால் மக்கள் அவர்களை பேசக் கூட விடவில்லை ; மேலும் அவர்களை கொலை செய்து வந்தனர்; மேலும் எல்லா வகையான துன்பங்களையும் இழைத்து வந்தனர் ; இன்று நாம் அவர்களின் தியாகங்களின் விளைவாக அரசர்களாக இருக்கின்றோம் என்று பெருமிதம் கொள்வர். (அன்வாருல் உலூம், தொகுதி 8, பக்கம் 615 - 616)

ஹஸ்ரத் பாயி அப்துர் ரஹ்மான் ஸாஹிப் காதியானி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

எமது இந்தப் பயணமும் ஜஹ்லமுடைய பயணத்தைப் போன்று இறைவனின் கருணை மற்றும் அருளினால் நிகழ்ந்தது. மேலும் இறை அருட்களால் வெற்றிகளும் கிடைத்தன. எவ்வாறு ஜஹ்லம் பயணத்தின் போது இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு சிறப்பான வழிவகைகளில் பயணத்திற்கான ஏற்பாட்டை உருவாக்கினானோ மேலும் வெற்றிகளை வழங்கினானோ முற்றிலும் அதே போன்று இந்தப் பயணத்திற்கான ஏற்பாடும் நிகழ்ந்தது. மேலும் முடிவில் இறைவன் ஒரு காற்றை உருவாக்கி விட்டான். ( ஸஃபரே யூரோப், பக்கம் 490 -491)

ஆக, இந்தப் பயணம் மிகவும் வெற்றிகரமானதாகவும், அருளுக்குரிய பயணமாகவும் இருந்தது. இதில் அல்லாஹ்வின் உதவி மற்றும் ஒத்தாசைக்கான காட்சிகள் எல்லா இடங்களிலும் தென்பட்டன. பதர் வாசகர்கள் இந்த சிறப்பிதழை படிக்க வேண்டும். அதனால் உங்களது அறிவும், ஞானமும் அதிகரிக்கும். அல்லாஹ் இதன் வெளியீட்டை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்

எளியவன்

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

பதர் வாரப் பத்திரிகை காதியான் - சிறப்பிதழ்


| | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 1 |
| 2. | 1924-ம்ஆண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மேற்கொண்ட முதல் ஐரோப்பிய பயணமும் அதன் அருட்களும் கனிகளும் | 4 |
| 3 | லண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசல் அடிக்கல் நாட்டுதல் & கட்டுமானப் பணி மற்றும் திறப்பு விழா | 12 |
| 4 | ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் லண்டனில் இருந்து எழுதிய நான்காவது கடிதம் | 19 |
| 5 | ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1924- ம் ஆண்டு ஐரோப்பிய சுற்றுப் பயணத்திலிருந்து தாயகம் திரும்புதல் & காதியானில் அன்னாருக்கு வழுங்கப்பட்ட வரவேற்பு | 23 |
| 6 | முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு ஃபஸ்லே உமர் என்ற பெயர் ஏன் வைக்கப்பட்டது? | 26 |


# தலையங்கம்

## ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் ஐரோப்பிய சுற்றுப் பயணம் சில நாட்கள் பயணமும் நூற்றாண்டுகளுக்கான அருட்களும்

2024-ம் ஆண்டு காதியான் ஜல்ஸா ஸாலானா சந்தர்ப்பத்தின்போது வெளியாகக் கூடிய பத்ர் பத்திரிகையின் சிறப்பிதழை, “ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 1924-ம் ஆண்டு மேற்கொண்ட முதலாவது ஐரோப்பிய சுற்றுப் பயணமும் அதன் அருட்கள் மற்றும் கனிகளும்” என்ற தலைப்பில் வெளியிடுவதற்கு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஒப்புதல் நல்கியுள்ளார்கள். எல்லையற்ற மும்முரமான பணிகளுக்கு மத்தியிலும் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த சிறப்பிதழிற்கு தமது அகப்பார்வை மிக்க தூதுச் செய்தியையும், தமது அருளுக்குரிய கையொப்பத்துடன் கூடிய நிழற்படத்தையும் பத்ர் பத்திரிகை வாசகர்களுக்காக அனுப்பி தந்துள்ளார்கள். அதற்கு நாங்கள் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு மிகவும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும்

اَللّٰهُمَّ اَيِّدْ اِمَامَنَا بِرُوحِ الْقُدُسِ وَبَارِكْ لَنَا فِيْ عُمُرِهٖ وَاَمْرِهٖ

என்று ஹுஸூர் அவர்களுக்காக துஆ செய்கின்றோம். எல்லையற்ற மும்முரமான பணிகள் என்ற சொற்கள் வெறும் சடங்கு சம்பிரதாயமாக கூறப்படவில்லை. மாறாக, இது உண்மையாகும். அதாவது, கிலாஃபத் என்பது மனிதனை மாய்த்து விடக் கூடிய ஒரு பதவியாகும். அதன் பணிகள் எந்த அளவிற்கு அதிகமாக இருக்கின்றன என்றால், வல்ல இறைவனின் அருள் அந்தப் பதவியில் அமருபவருடன் இல்லையென்றால் பின்னர் நிச்சயமாக ஒரு குறுகிய காலத்திலேயே அந்த மனிதர் அழிந்து போய்விடுவார். ஆனால் இறைவன் அந்தப் பதவியின் கண்காணிப்பாளனாக இருப்பதனால் அவன் தனது அருளினால் கலீஃபாவிற்கு உதவி புரிகின்றான். மேலும் அந்தப் பணியை நடத்துகின்றான். எனவே நமது கடமை என்னவென்றால், நாம் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை தொடர்ந்து நமது துஆக்களில் நினைவிற் கொள்ள வேண்டும். அதனால் முற்றிலும் நமக்கே நன்மை விளைகின்றது.

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 1924-ம் ஆண்டு ஜூலை மாதம் காதியானிலிருந்து ஐரோப்பாவிற்கு புறப்பட்டார்கள். இவ்வாறு அன்னாருடைய இந்தப் பயணத்திற்கு நூறு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அதனால் இந்த சிறப்பிதழை வெளியிடுவதற்கான நற்பேறு நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றது. அல்லாஹ் இதனை அருளுக்குரியதாக ஆக்குவானாக! மேலும் வாசகர்களின் அறிவை அதிகப்படுத்துவதற்கான காரணியாக இதனை ஆக்குவானாக! ஆமீன்.

காதியானிலிருந்து புறப்பட்டது முதல் காதியான் திரும்பி வரும் வரையிலான இந்தப் பயணம் என்பது மிகவும் பரந்துபட்டதும், மிகவும் சுவாரஸ்யமானதும் மற்றும் மிகவும் ஈமானை வலுவூட்டக் கூடியதும் ஆகும். புறப்படும் நேரத்தில் செய்யப்பட்ட துஆக்களும், ஹுஸூர் அவர்களை பிரிந்ததனால் உள்ளங்களில் நிலவிய துன்பத்தின் காட்சியும், காதியானிற்கு திரும்பி வந்த போது நிகழ்ந்த சந்திப்புகளின் இன்பமும், கொண்டாட்டத்தின் சூழலும் முற்றிலும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத விஷயங்களாகும். ஹுஸூர் அன்வர் (ரலி) அவர்கள் பயணத்தின் நோக்கங்களை எடுத்துரைத்துள்ளார்கள். மேலும் அதன் முக்கியத்துவத்தின் மீது ஒளிபாய்ச்சியுள்ளார்கள். மேலும், இந்தப் பயணத்தின் விளைவால் அஹ்மதிய்யத்தின் வெற்றிக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. மேலும் அஹ்மதிய்யத்திற்கு வெற்றி கிடைத்தது. மேலும் ஜமாஅத்திற்கு அதிக பிரபல்யம் கிடைத்தது. இன்னும் கூறப்போனால் சில நாட்களில் பற்பல ஆண்டுகளுக்கான தப்லீஃக் நிகழ்ந்தது. இவை எல்லாவற்றையும் ஹுஸூர் அன்வர் (ரலி) அவர்களின் அருளுக்குரிய சொற்களில் எடுத்துரைப்பது மிகவும் ஈமானை வலுவூட்டக் கூடியதாகும். இந்தப் பயணத்தின் விளைவால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு நிறைவடைந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் முன்னறிவிப்பும் கனவும் முழுமையடைந்தது. மேலும் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கனவும் கூட நிறைவடைந்தது. பல ஜல்ஸாக்கள் நடைபெற்றன. அதில் ஹுஸூர் (ரலி) அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். பல்வேறு சமுதாய சந்திப்புகள் நிகழ்ந்தன. அதில் ஹுஸூர் (ரலி) அவர்கள் இஸ்லாமியப் போதனைகளை எடுத்துரைத்தார்கள். லண்டன் வாசிகளுக்கும், லண்டனைச் சேர்ந்த புதிய முஸ்லிம்களுக்கும் ஆன்மிக மற்றும் வானத்தின் தூதுச் செய்தியை வழங்கினார்கள். மஸ்ஜித் ஃபஸ்ல் லண்டனுக்கான அடிக்கல்லை நாட்டினார்கள். பல நாடுகளின் சூழல்களை குறித்தும், தப்லீஃக்கிற்கான சந்தர்ப்பங்களைக் குறித்தும் அன்னார் (ரலி) ஆய்வு செய்தார்கள்.

இந்தப் பயணத்தினால் ஏற்பட்ட பரந்துபட்ட விளைவுகளின் ஓர் அம்சம் இதுவும் ஆகும். அதாவது ஹுஸூர் அன்வர் (ரலி) அவர்களின் இந்தப் பயணதின் மீது பைகாமிகள் எனும் லாஹூர் பிரிவினர் ஏராளமான ஆட்சேபனைகளை செய்தனர். அதற்குரிய ஏராளமான பதில்கள் அல்ஃபஸ்ல் பத்திரிகையில் வெளியாகி இருக்கின்றன. மேலும் மற்றொரு மிகவும் அழகிய மற்றும் இன்பம் நிறைந்த அம்சம் இதுவும் ஆகும். அதாவது, சுவாரஸ்யமான மற்றும் ஈமானை வலுவூட்டக் கூடிய கவிதைகள் இயற்றுதல் எனும் ஒரு தொடரும் நிகழ்ந்து கொண்டிருந்தது. ஹுஸூர் அன்வர் அவர்களின் பிரிவு அதாவது காதியானிலிருந்து ஐரோப்பிய பயணத்திற்காக புறப்பட்டு சென்ற போது பிரிவு உபச்சார கவிதைகள் இயற்றப்பட்டன. பின்னர் ஐரோப்பியப் பயணத்தை முடித்துக் கொண்டு அன்னார் (ரலி) மீண்டும் காதியானிற்கு திரும்பி வருகை தந்த மகிழ்ச்சியில் வரவேற்பு கவிதைகள் இயற்றப்பட்டன. மேலும் லண்டனில் பள்ளிவாசல் கட்டுமானத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்ட மகிழ்ச்சியிலும் கவிதைகள் இயற்றப்பட்டன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் காதியானையும், காதியான் வாசிகளையும்

பிரிதல் மற்றும் காதியானின் மகிமை தொடர்பாக பயணத்தின்போது ஒரு மிகச் சிறந்த கவிதையை இயற்றியிருந்தார்கள்.

காதியான் வந்தடைந்த பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் ஹுஸூர் அன்வர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

என்னைப் பொருத்த வரை இந்தப் பயணத்தில் பெரும் பெரும் பயன்கள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை மவ்லவி ஷேர் அலி ஸாஹிப் அவர்களும் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். சில சிறிய நன்மைகளும் இருக்கின்றன. அவற்றில் ஒன்று இதுவாகும். அதாவது, எனது இந்தப் பயணத்தையொட்டி பல புதுக் கவிதைகளும் இயற்றப்பட்டிருக்கின்றன. குறிப்பாக எமது சகோதரியும் கவிஞராகி இருக்கின்றார்.

சுருக்கமாக, இந்தப் பயணம் என்னவாக இருந்தது? காதியானிலிருந்து ஹுஸூர் (ரலி) அவர்கள் புறப்பட்டது முதல் காதியானிற்கு திரும்பி வருகை தந்தது வரை ஒவ்வொரு விஷயமும் உள்ளத்தில் இறங்கக் கூடியதாகவும், ஆன்மாவில் பதியக் கூடியதாகவும், ஈமானையும், அறிவையும், ஞானத்தையும் அதிகரிக்கக் கூடியதாகவும் இருந்தது. அவ்வாறு ஏன் இருக்கவும் முடியாது? இந்த அருளுக்குரிய இறைப் பயணமோ தொன்று தொட்டே நிச்சயிக்கப்பட்டிருந்தது.

இந்த ஐரோப்பியப் பயணத்தின் சில முக்கிய நோக்கங்களை ஹுஸூர் (ரலி) அவர்களின் சொற்களில் கீழே நாங்கள் சமர்ப்பிக்கின்றோம்:

**இந்தப் பயணத்தைக் குறித்து திருக்குர்ஆனில் குறிப்பு**

எந்த நோக்கத்துடன் நான் பயணம் செய்தேனோ அந்த நோக்கத்துடன் ஐரோப்பாவை நோக்கி மஸீஹே மவ்வூத் அல்லது அன்னாருடைய ஒரு கலீஃபா பயணம் செய்வது தொடர்பான குறிப்பு திருக்குர்ஆனிலும் கூட இடம் பெற்றிருக்கின்றது. எனவே இதுபோன்ற பயணங்கள் இன்றி இஸ்லாத்தின் பாதுகாப்பு என்பது முழுமையடைய முடியாது என்று தெரிய வருகின்றது. …….

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்களுக்கு ஏற்ப துல்கர்னைன் அன்னார் (அலை) ஆவார்கள். மேலும் மேற்கத்திய நாடுகள் என்பதன் பொருள் கிறிஸ்துவத்தின் நீரூற்றில் முகாமிட்டிருக்கின்ற ஐரோப்பா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த மக்கள் ஆவர்.

எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அல்லது அன்னாருடைய பிரதிநிதி மேற்கத்திய நாடுகளில் பயணம் செய்ய நேரிடும் என்று தெளிவாக தெரிகின்றது. (அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், ஆகஸ்ட் 16, 1924-ம் ஆண்டு பக்கம் 7)

**இந்தப் பயணத்தைக் குறித்து ஹதீஸில் குறிப்பு**

அல்லாஹ் கூறுகின்றான்: நான் தற்போது எப்படிப்பட்ட சில மக்களையும் படைத்துள்ளேன் என்றால் அவர்களுடன் போர் புரிவதற்கு எவருக்கும் ஆற்றல் கிடையாது ; எனவே நீர் எனது அடியார்களை மலையின் பக்கம் பாதுகாப்பான வழிமுறையில் அழைத்து செல்வீராக! என்று அல்லாஹ் ஈஸா (அலை) அவர்களுக்கு வஹீயின் மூலமாக அறிவிப்பான் என்று ஹதீஸில் வந்துள்ளது.

அதாவது இந்த சூழல்களில் வல்ல அல்லாஹ் யஃஜூஜ் மஃஜூஜை அனுப்புவான். பின்னர் அத்துடன் இவ்வாறு வந்துள்ளது:

يَهْبِطُ نَبِيُّ اللّٰهِ عِيسٰى وَاَصْحَابُهُ اِلَى الْاَرْضِ فَلَا يَجِدُوْنَ

فِي الْاَرْضِ مَوْضِعَ شِبْرٍ اِلَّا مَلَأَهُ زَهَمُهُمْ وَنَتْنُهُمْ

பொருள்: அல்லாஹ்வின் நபி ஈஸாவும் அன்னாருடைய தோழர்களும் யஃஜூஜ் மஃஜூஜுடைய பூமியில் இறங்குவார்கள். ஆனால் முழுப் பூமியிலும் ஓர் அடி நிலம் கூட யஃஜூஜ் மஃஜூஜுடைய சடலங்கள் மற்றும் அவற்றின் துர்நாற்றத்திலிருந்து வெறுமையாக இருக்காது.

அப்போது, வல்ல அல்லாஹ்வின் நபியும் அன்னாருடைய சீடர்களும் துஆ செய்வார்கள். அப்போது வல்ல அல்லாஹ் எப்படிப்பட்ட பறவைகளை அனுப்புவான் என்றால் அவற்றின் கழுத்துகள் வலிமையான ஒட்டகங்களைப் போன்று இருக்கும். மேலும் அந்த சடலங்களை எங்கு வீசுவதற்கு அல்லாஹ் அந்தப் பறவைகளுக்கு கட்டளை வழங்குவானோ அங்கு வீசிவிட்டு வரும். பின்னர் அல்லாஹ் மழையைப் பொழியச் செய்வான். எதுவரையென்றால் எந்த வீடும், எந்தக் கூடாரமும் எஞ்சியிருக்காது; அதாவது அவை அனைத்தும் மற்றும் முழு பூமியும் கழுவப்பட்டு விடும். மேலும் கண்ணாடியைப் போன்று தூய்மையாகி விடும்.

பின்னர் நீ உனது கனிகளை கொடு ; மேலும் உனது அருட்களை மீண்டும் வெளிப்படுத்து என்று பூமியிடம் கூறப்படும்!

ஈஸா என்பதன் பொருள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆவார்கள். யஃஜூஜ் மஃஜூஜ் பூமியில் அன்னார் (அலை) சென்று இறங்குவது என்பது அன்னாருடைய பிரதிநிதி சென்று இறங்குவது ஆகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் அன்னாருடைய பிரதிநிதிகளின் துஆக்களால் யஃஜூஜ் மஃஜூஜுடைய பூமி கழுவப்பட்டு கண்ணாடியைப் போன்று தூய்மையாகி விடும்.இன்ஷா அல்லாஹ்!

**இறைத் தூதர் (ஸல்) அவர்களின்**
**முன்னறிவிப்பு நிறைவேறுதல்**

ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தைக் குறித்து ஆகும் என்ற கருத்து இருக்கின்றது. இதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு விளக்கமளித்துள்ளார்கள்.


அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹோ அல்லது அவருடைய ஒரு கலீஃபாவோ டமாஸ்கஸிற்கு செல்வார். இந்தப் பயணத்தில் அந்த முன்னறிவிப்பை முழுமை செய்ய முயற்சி செய்ய வேண்டும். மேலும் வழியில் சில நாட்கள் டமாஸ்கஸிலும் தங்க வேண்டும். அதற்காக தமது வழிப்பாதையை விட்டு விலகிச் செல்ல நேரிடும். ஆயினும், அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் தினம் தினம் கிடைக்காது என்பதால் முடிந்தவரை இந்தப் பயணத்திலிருந்து பயனடைந்து கொள்வதற்கு முயற்சி செய்வது அவசியமாகும். மேலும் ஜமாஅத்தின் உண்மைத்துவத்திற்கான ஓர் அடையாளத்தை நிறுவுவதும் முற்றிலும் நற்பேறு ஆகும். (தவ்ரா ஐரோப்பா, அன்வாருல் உலூம், தொகுதி 8, பக்கம் 381)

**இரண்டு முன்னறிவிப்புகளை முழுமை செய்வது**

ஹுஸூர் (ரலி) அவர்களின் இந்தப் பயணத்தால் பைகாமிகள் அதாவது லாஹூரி பிரிவினரிடம் பெரும் பதற்றம் தொற்றிக் கொண்டது. ஹுஸூர் (ரலி) அவர்களின் இந்தப் பயணத்தை உல்லாசப் பயணம் என்று அவர்கள் குறிப்பிட்டனர். மேலும், ஜமாஅத் பணத்தை வீண்விரயம்


**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**

93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.

Somanur, Anuparpalayam, Karumathampatti.


**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த ***TOLL FREE*** எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

செய்தல் என்றும் குறிப்பிட்டனர். இந்த ஆட்சேபனைகளுக்கு அல்ஃபஸ்ல் பத்திரிகையின் ஆசிரியரும், மற்ற கட்டுரையாளர்களும் மற்றும் ஹுஸூர் (ரலி) அவர்களும் கூட பதில் வழங்கியுள்ளார்கள். அவற்றை அல்ஃபஸ்ல் பத்திரிகையில் படித்துக் கொள்ள முடியும். பைகாமிகளின் ஆட்சேபனைகளுக்குரிய பதில்கள் என்னென்ன தலைப்புகளின் கீழ் கொடுக்கப்பட்டதோ அந்த சுவாரஸ்யமான தலைப்புகளை மட்டும் நாம் பத்ர் வாசகர்களின் பார்வைக்கு கீழே சமர்ப்பிக்கின்றோம்:

(1) ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஐரோப்பிய பயணமும் பைஅத் செய்யாதவர்களின் பகைமையும், பொறாமையும் (2) ஐரோப்பிய பயணம் என்ற முள் மவ்லவி முஹம்மது அலி ஸாஹிப் அவர்களின் தொண்டையில் (3) டமாஸ்கஸில் பைஅத் செய்யாதவர்கள் தீமையில் (4) “மஹ்மூதோ பயணத்தில் பொறாமைக்காரனோ மயக்கத்தில்”.

இந்தக் கட்டுரைகளை எழுதக் கூடியவர் ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மத் இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஆவார்கள். பைகாமிகள் இந்தப் பயணத்தால் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருந்தனர் என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும். அதாவது ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கும் கூட கட்டுரை எழுத நேர்ந்தது.

ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஒருவேளை நாம் இந்தப் பயணத்தில் எந்தப் பணியும் செய்யவில்லை என்றாலும், மேலும் வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமே சென்று வந்தோம் என்றாலும் கூட அந்நிலையிலும் இந்தப் பயணம் ஆட்சேபனைக்குரியதாக இருக்காது. ஏனெனில், இது இரண்டு முன்னறிவிப்புகளை நிறைவேற்றுவதற்காக அமைந்திருந்தது.

ஒன்று,டமாஸ்கஸ் பயணம் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த முன்னறிவிப்பை நிறைவேற்றுவது. மற்றொன்று இங்கிலாந்து தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்திருந்த முன்னறிவிப்பை நிறைவேற்றுவது.

எனவே ஒருவேளை நாம் எமது பணத்தில் சில முன்னறிவிப்புகளை முழுமை செய்வதற்காக இந்தப் பயணத்தை மேற்கொண்டிருந்தால் அந்நிலையில் அவர்கள் என்ன ஆட்சேபனை செய்ய முடியும்? (அல்ஃபஸ்ல் காதியான், தாருல் அமான், அக்டோபர் 4, 1924, பக்கம் 4)

## ஒரு முழுமையான அமைப்பிற்கான ஆலோசனையை முன்வைத்தல்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் பயணத்தின் நோக்கங்களின் மீது ஒளிபாய்ச்சியவாறு கூறுகின்றார்கள்:

என்னைப் பொருத்த வரை எந்த நோக்கங்களுக்காக இந்தப் பயணத்திற்கான அவசியம் உள்ளதோ அவற்றில் ஒன்று, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கனவை நிறைவேற்றுதல் ஆகும். இரண்டாவது, இந்த மார்க்கத் தேவையை கருத்தில் கொண்டு அமைந்திருக்கின்றது. அதாவது,நமது ஜமாஅத்தின் பணி என்பது முழு உலகிலும் இஸ்லாத்தை பிரச்சாரம் செய்வது ஆகும். மேலும், முழு உலகையும் இஸ்லாத்தின் வட்டத்தின் கீழ் கொண்டு வருவதும் நமது கடமையாக இருக்கின்றது. எனவே அது தொடர்பான ஒரு முழுமையான அமைப்பை முன் வைப்பதும் அவசியமாகும். இந்த அமைப்பை நிறுவுவதற்கு இந்த விஷயம் அவசியமாகும். அதாவது, காலத்தின் கலீஃபா மேற்கத்திய நாடுகளின் நிலைமையை அங்கு சென்று நேரில் பார்வையிடுவது அவசியமாகும். ஐரோப்பா இஸ்லாத்தின் கொள்கைகளை ஒப்புக் கொள்வதற்கு இன்று தயாராக இருக்கின்றது. எனினும், அவர்கள் தங்களது பழக்கவழக்கங்களை விட்டு விடுவதற்கு முற்றிலும் தயாராக இல்லை. அவர்கள் சுயமே அந்தப் பணிக்கு தயாராக இல்லை என்பது மட்டுமில்லை. மாறாக அவர்கள் ஆசியா மற்றும் ஆஃப்ரிக்காவையும் தங்களது எண்ணங்களை ஏற்றுக் கொண்டவர்களாக ஆக்கி உலகிலிருந்து இஸ்லாத்தை முற்றிலும் வெளியேற்றி விட விரும்புகின்றனர். அந்த மக்களின் வழிமுறை மற்றும் அவர்களின் வசிப்பிடம் நம்மிடமிருந்து எந்த அளவிற்கு விலகியதாக இருக்கின்றது என்றால், நாம் வீட்டில் அமர்ந்து கொண்டே அவர்கள் தொடர்பாக எந்த தீர்மானமும் எடுக்க முடியாது. அவ்வாறு தீர்மானம் எடுத்தால் அது பூமியில் அமர்ந்து கொண்டு நிலவின் நிலைமைகளைக் குறித்து கருத்துக் கூறுவதைப் போன்றதாக அமையும். இன்னும் கூறப்போனால் அதை விட அதிகக் கடினமான பணியாகும். ஏனெனில், நிலவின் நிலைமைகளையோ நம்மால் தொலைநோக்கிக் கொண்டு காண முடியும். ஆனால், இங்கு ஓர் உயிருள்ள சமுதாயத்தின் சீர்திருத்தத்திற்கான கேள்வி எழுகின்றது. அதன் வெளிப்படையான உருவத்தின் மீது அல்ல. இன்னும் கூறப்போனால், நாம் அந்த சமுதாய மக்களின் உள்ளத்தின் எண்ணங்களின் மீதும், சந்தேகங்களின் மீதும் தீர்மானம் எடுக்க வேண்டும். (தவ்ரா ஐரோப்பா, அன்வாருல் உலூம், தொகுதி 8, பக்கம் 385)

## நூற்றாண்டுகளுக்கான திட்டம் வகுத்தல்

தமது இந்தப் பயணத்தின் ஒரு நோக்கம் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறிய இந்த சொற்களை படித்துப் பாருங்கள்!

ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்தப் பயணம் பல நூற்றாண்டுகளுக்கான பிரச்சாரத்திற்காக திட்டத்தை வகுப்பது தொடர்பான ஆலோசனைகளை செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. (அல்ஃபஸ்ல், காதியான் தாருல் அமான், ஆகஸ்ட் 16, 1924, பக்கம்3)

## இங்கிலாந்துடைய ஆன்மிக வெற்றி ஆரம்பமாகி விட்டது

ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

எதிரி சிரிப்பான்; எள்ளி நகையாடுவான். ஆனால், நான் அவனது ஏளனத்தை பொருட்படுத்தி இந்த விஷயத்தை வெளிப்படுத்துவதிலிருந்து விலகி நிற்க முடியாது. அதாவது, வல்ல இறைவனின் அருளால் இங்கிலாந்துடைய ஆன்மிக வெற்றி ஆரம்பமாகி விட்டது. நான் கூறுபவையெல்லாம் ஓர் ஆன்மிக விவகாரம் ஆகும். அதனை எவரால் காணமுடியும் என்றால், எவருக்கு ஆன்மிகக் கண்கள் இருக்குமோ அவரால் மட்டுமே காண முடியும்.

(அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், அக்டோபர் 4, 1924, பக்கம் 3)

எனவே இந்த இறைப் பயணம் என்பது உலகில் அஹ்மதிய்யத்தின் வெற்றிக்கான ஒரு விதையாக விதைக்கப்பட்டிருக்கின்றது. அது வளர்வதையும்,மலர்வதையும் கனிகளைக் கொடுப்பதையும் நாம் முழு உலகிலும் கண்டு கொண்டிருக்கின்றோம். நாம் இதில் நமது பங்களிப்பை வழங்கக் கூடியவர்களாக திகழ அல்லாஹ் நமக்கு நற்பேறு வழங்குவானாக! அல்லாஹ் நமக்கு ஒப்புக் கொள்ளப்படும் தொண்டுகளை ஆற்றுவதற்கு நற்பேறு வழங்குவானாக! ஆமீன்.


(எழுத்து :மவ்லவி. மன்ஸூர் அஹ்மத் மஸ்ரூர்)
(தமிழாக்கம்
மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

** * * *

O.A. NIJAM
99947 57172

O.A.N. Doors & Steels

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

# 1924-ம் ஆண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மேற்கொண்ட முதல் ஐரோப்பிய சுற்றுப் பயணமும் அதன் அருட்களும் கனிகளும்

(எழுத்து: மதிப்பிற்குரிய ஆரிஃப் அஹ்மது ரப்பானீ, முபல்லிக் - நஷ்ரோ இஷாஅத், காதியான்)

கிலாஃபத் அரியணையில் அமர்ந்த உடனேயே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எவ்வாறான நல்ல நோக்கத்தின் பக்கம் கவனமூட்டினார்கள் என்றால், ஜமாஅத்தில் தப்லீஃக்கை பரப்பும் ஒரு புதிய ஆன்மாவை அன்னார் (ரலி) ஊதினார்கள். இஸ்லாத்தை பரப்புவதற்காக துஆக்கள் மாநாடுகள், முனாஸிரா, முபாஹிலா, உரைகள், சவால்கள், போட்டிகள் மற்றும் சுற்றுப் பயணங்களின் அடிப்படையில் தம்முடைய கிலாஃபத்தில் அன்னார் (ரலி) அனைத்து வழிமுறைகளின் மூலமாகவும் இந்த நோக்கங்களில் வெற்றியின் பாதையை கடந்து சென்று கொண்டே இருந்தார்கள். இறைவன் புறமிருந்து உதவி ஒத்தாசையின் அற்புதங்கள் மற்றும் வெளிப்பாடுகள் ஒவ்வோர் அடியிலும் தென்பட்டுக் கொண்டே இருந்தன. இது தொடர்பாக இறைவன் தன்னுடைய அருள் மற்றும் ஆதிக்கத்தின் மூலம் பிரபலமான வேம்பளே மாநட்டின் ஏற்பாட்டாளர்களின் உள்ளங்களில் இந்த எண்ணங்களை ஏற்படுத்தினான். அதாவது, தாங்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரை நிகழ்த்த வேண்டும் என்று ஹுஸூர் (ரலி) அவர்களிடம் விண்ணப்பிக்குமாறு மாநாட்டின் ஏற்பாட்டாளர்களின் உள்ளங்களில் எண்ணங்களை இறைவன் உருவாக்கினான்.

இறைவனுடைய மற்றுமொரு ஏற்பாடு இவ்வாறாக இருந்தது. அதாவது, அன்னார் (ரலி) இஸ்லாத்தின் தப்லீஃக்கிற்காக வகுத்த இந்த திட்டங்கள் உலக அளவில் பரப்பப்பட வேண்டும் ; மேலும், காலத்தின் இமாமுடன் இறைவனுடைய அருட்கள் எவ்வாறு இறங்கின என்பதை மிகவும் விரிவாக பரப்ப வேண்டும் என்பதற்கான ஏற்பாடாக அமைந்தது.

எனவே 1924-ம் ஆண்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் தப்லீஃக் அடிப்படையில் மிகவும் ஓர் அருளுக்குரிய மேலும் புரட்சிகரமான ஆண்டு என்று கூறுவதற்கு தகுதியானதாக இருக்கின்றது. ஏனெனில், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இந்த ஆண்டில் ஐரோப்பாவின் முதல் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்கள். இதன் விளைவாக அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு புதிய மற்றும் அருளுக்குரியக் காலகட்டத்தில் நுழைந்தது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மே 14, 1924 அன்று இந்த சுற்றுப் பயணத்தின் பின்னணி, நோக்கம் மற்றும் அருள்களை ஜமாஅத் மக்களின் பெயரில் கடிதத்தில் எடுத்து ரைத்தவாறு இவ்வாறு எழுதுகின்றார்கள்;

உங்களுக்கு தெரிந்திருக்கக் கூடும்; அதாவது இங்கிலாந்தில் இரண்டு ஆண்டு காலமாக ஒரு வியாபாரக் கண்காட்சி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. அதில் ஆங்கிலேயே அரசாங்கத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள எல்லா விதமான உற்பத்திகள் மற்றும் வளங்கள் காட்சிக்காக வைக்கப்படும். இந்தக் கண்காட்சி தற்போது தொடங்கியும் விட்டது. மேலும் எவ்வளவு பெரியதாக இருக்கின்றது என்றால், கணிப்பவர்கள் கூறுகின்றார்கள்: வியாபாரத்தின் முன்னேற்றத்தை கவனத்தில் வைத்தவாறு மேலும் நாடுகளுடைய ஒற்றுமையை வலுப்படுத்துவதற்காக 2 கோடி மக்கள் இதை பார்ப்பதற்காக வருவார்கள். சுருக்கமாக, இந்த நாட்களில் உலகத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் படிப்பறிவு பெற்ற நபர்கள் இங்கிலாந்தில் ஒன்று கூடுகின்றார்கள் அல்லது முழு உலகமும் சிறிய அளவில் ஓர் இடத்தில் ஒன்று கூடுகின்றது. சீனர்கள், ஜப்பானியர்கள், அமெரிக்கர்கள், ரஷ்யர்கள், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள், ஜெர்மானியர்கள், துருக்கியர்கள், அரேபியர்கள், சிரியாகாரர்கள், ஈரானியர்கள், இந்தியர்கள் மற்றும் இதர சிறிய, பெரிய சமுதாயத்தின் கல்வியறிவு பெற்ற, புரியும் திறன் படைத்த மக்கள் அங்கு ஒன்று கூடுவார்கள். மேலும் ஆறு மாதம் வரை இவ்வாறு இந்த கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

இந்தக் கூட்டத்திலிருந்து பயனடைந்தவாறு ஆங்கிலேய மார்க்கத்தின் மீது ஆர்வம் கொண்ட மக்கள் ஓர் ஆலோசனையை முன் வைத்துள்ளார்கள். அதாவது, செப்டம்பர் மாதத்தின் இறுதியில் மேலும் அக்டோபர் மாதத்தின் தொடக்கத்தில் அங்கு ஒரு மார்க்க மாநாடு நடத்தலாம் என்று ஆலோசனை செய்தனர். மேலும் அதில் ஒவ்வொரு மார்க்கத்தைச் சேர்ந்த மக்களும் தங்களுடைய மார்க்கத்தின் உண்மைத்துவத்தை வெளிப்படையாகக் கூறலாம்; மேலும் இதன் மூலம் முழு உலகத்திற்கும் அவர்களுடைய அசல் கொள்கை மற்றும் நோக்கத்திற்கான தெளிவு கிடைத்துவிடும். இந்த அமைப்பு தங்களுடைய மாநாட்டில் உரை நிகழ்த்துவதற்காக எனக்கும் அழைப்பு விடுத்துள்ளது. மேலும் விண்ணப்பம் வைத்துள்ளார்கள்.அதாவது,நான் அங்கு சென்று நம்முடைய அமைப்பு தொடர்பாக அவர்களுக்கு கூற வேண்டும் என்று வேண்டினார்கள். இவ்வளவு பெரிய சந்தர்ப்பத்தை தப்லீஃக்கிற்காக பயன்படுத்துவது நம்முடைய கடமையாகும்.

ஏனெனில், இவ்வாறான சந்தர்ப்பம்; அதாவது அதில் முழு உலகத்தின் நாடுகளிலும் சுற்றித் திரிந்தவர்கள் ஒன்று இணையப் போகின்றார்கள். அதாவது முழு உலகமும் ஒரே நேரத்தில் ஒன்று கூடுகின்றது. இந்த சந்தர்ப்பம் அனைத்து நாட்களிலும் நமக்கு கிடைப்பதில்லை. எனவே இந்த கண்காட்சி தொடர்பாக கணிக்கப்படுவது என்னவென்றால், 100 ஆண்டுகள் வரை இவ்வாறான கண்காட்சியை ஆங்கிலேயர்கள் திரும்ப உருவாக்குவது கடினமாகும். இந்த தருணத்தில் இங்கிலாந்தில் அமர்ந்து கொண்டு நாம் முழு உலகத்திற்கும் இறைவனுடைய தூதுச் செய்தியை எட்ட வைக்கலாம். மேலும் கோடிக்கணக்கான மக்களுக்கு இந்த அமைப்பினுடைய உண்மைத்துவத்தை தெரியப்படுத்தலாம். மேலும் உலகத்துடைய எந்தவொரு மூலை முடுக்கும் இந்த அமைப்பைப் பற்றி அறியாமல் இருக்காது. (தாரீகே அஹ்மதிய்யத், பாகம் 4, பக்கம் 423, 424)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் எழுத்துக்களின் பக்கம் கவனம் செலுத்திய பொழுது அன்னார் (ரலி) மீது இந்த உண்மை வெளிப்பட்டது. அதாவது, திருக்குர்ஆனில் துல்கர்னைன் (அதாவது மஸீஹ் மவ்வூத்) அல்லது அவருடைய பிரதிநிதி ஐரோப்பாவிற்கு பயணம் மேற்கொள்வார் என்ற முன்னறிவிப்பு இடம்பெற்றுள்ளது. மேலும், டமாஸ்கஸ் பயணம் தொடர்பாக ஹதீஸிலும் தெளிவான முன்னறிவிப்புகள் இருக்கின்றன. துல்கர்னைன் பயணம் தொடர்பான சம்பவத்தை மேலும் ஆழ்ந்து சிந்தித்தவாறு ஹுஸூர் (ரலி) அவர்கள் இந்த விஷயத்தை அறிந்து கொண்டார்கள். அதாவது இந்தப் பயணம் (அடிப்படை நோக்கங்களின்

ரீதியில்) தப்லீஃக்கிற்காக மட்டும் இல்லை ; மாறாக மேற்கத்திய நாடுகளில் இஸ்லாமிய புரட்சிக்கான தப்லீஃக் திட்டங்களை தயார் செய்வதற்காக என்று அறிந்து கொண்டாரகள். இதன் அடிப்படையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இந்தக் கனவும் அன்னாருக்கு முன்னால் (நினைவக்கு) வந்தது. அந்தக் கனவு குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) கூறுகின்றார்கள்:

நான் லண்டன் நகரத்தில் ஒரு மேடையில் நின்று கொண்டிருக்கின்றேன்; மேலும் ஆங்கில மொழியில் மிகவும் நேர்த்தியாக இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றேன்.அதன் பிறகு நான் பல பறவைகளைப் பிடித்தேன். அவை சிறிய,சிறிய மரங்களில் அமர்ந்திருந்தன. மேலும் அவற்றின் நிறம் வெண்மையாக இருந்தது. இவ்வாறு நான் கனவில் கண்டேன். (தாரீக்கே அஹ்மதிய்யத், பாகம் 3, பக்கம் 427)

இது மட்டுமின்றி, ஹுஸுர் (ரலி) அவர்களுக்கும் ஒரு நீண்ட காலத்திற்கு முன்பு ஒரு கனவில் ஐரோப்பிய பயணத்தின் காட்சிகள் காட்டப்பட்டிருந்தன. ஆக, ஒரு கனவில் அன்னார் (ரலி) பார்த்தார்கள்.

அதாவது,அன்னார் (ரலி) லண்டனில் இருக்கின்றார்கள். மேலும் ஒரு மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார்கள். (முன்னாள் இங்கிலாந்து பிரதமர்) மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் அந்த மாநாட்டில் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார். உடனடியாக அவருடைய நிலை மாறிவிட்டது. மேலும் அவர் அச்சமடைந்தவாறு கூறினார்:

இப்பொழுது எனக்கு செய்தி வந்துள்ளது. அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் மிர்ஸா மஹ்மூத் அஹ்மத் அவர்களின் படை கிறிஸ்தவ படையின் மீது ஆதிக்கம் செலுத்தியவாறு (முன்னேறி)வந்து கொண்டிருக்கின்றது. மேலும் கிறிஸ்துவ படை தோல்வி அடைந்து கொண்டிருக்கின்றது.

மற்றொரு கனவில் அன்னார் (ரலி) இவ்வாறு பார்த்தார்கள். (இதனை அன்னார் (ரலி) மாநாட்டிற்கு இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னர் கண்டிருந்தார்கள்).

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

அதாவது இங்கிலாந்தின் கடற்கரையில், ஒரு புத்துணர்வு பெற்ற நபரைப் போன்று நின்று கொண்டிருக்கின்றேன்.மேலும் என்னுடைய உடை போர் உடையாக இருக்கின்றது. அதில் நான் ஒரு ஜெனரலாக இருக்கின்றேன்.. அப்பொழுது நான் இவ்வாறு எண்ணம் கொள்கின்றேன்; ஒரு போர் நடைபெற்றிருக்கின்றது மேலும் அதில் எனக்கு வெற்றி கிடைத்துள்ளது. மேலும் நான் ஒரு சிந்தனை மிக்க ஜெனரலைப் போன்று போர்க் களத்தை பார்வையிட்டுக் கொண்டிருக்கின்றேன்; அதாவது இந்த வெற்றியின் மூலமாக நான் எப்படி அதிக அதிகமாக பயனடைவது ? என்று எண்ணிக் கொண்டிருக்கின்றேன். அப்பொழுது வில்லியம் தீ கன்கரர் ( William the conqueror) பொருள்: வில்லியம் (உறுதிமிக்க) வெற்றியாளர்.

இந்த விஷயத்தின் பக்கம் கவனம் செலுத்தி மேலும் தொடர்ச்சியான துஆக்கள் மற்றும் இஸ்திகாராவிற்கு பிறகு ஹுஸுர் (ரலி) அவர்கள், வேம்பளே மாநாட்டில் கலந்து கொள்ளும்படி தமக்கு வந்த அழைப்பை இறைவனுடைய ஒரு நோக்கமாக கருதினார்கள். மேலும் இந்த நீண்ட பயணத்தை மேற்கொள்ளும் வழியில் அன்னாருக்கு சுயமே பல்வேறு கடினங்கள் இருந்தன. இந்த சுமையை சுமப்பது அன்னாருக்கு மிகவும் கடினமானதாக இருந்தது. இருப்பினும் தம்முடைய மார்க்க கடமையை முன் நிறுத்தியவாறு முழுமையான மனத் தெளிவுடன் ஐரோப்பிய பயணத்தை மேற்கொள்ள தீர்மானித்தார்கள். மேலும் புறப்படுவதற்கான தேதியாக 12 ஜுலை 1924-ஐ நிர்ணயித்தார்கள்.

ஹுஸுர் (ரலி) அவர்கள் 24 ஜுன் 2024 அன்று தம்முடைய தீர்மானம் தொடர்பாக அறிவிப்பு செய்தார்கள். கூறுகின்றார்கள்:

நம்முடைய ஜமாஅத்தினுடைய பணி என்பது முழு உலகிலும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதாகும். மேலும் முழு உலகத்தையும் இஸ்லாத்தின் வட்டத்தின் கீழ் கொண்டு வருவது நம்முடைய கடமையாகும். எனவே இதற்காக நாம் ஒரு முழுமையான திட்டத்தை முன் வைக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது.

இந்தத் திட்டத்தை நிர்ணயிப்பதற்கு கலீஃபா மேற்கத்திய நாடுகளை நேரில் சென்று பார்வையிடுவது அவசியமாகும்.

ஆகையால், மேற்கத்திய நாடுகளில் தப்லீஃக் பணியை நாம் தொடர்ச்சியாக செய்ய வேண்டும் .மேலும் அதற்காக செலவாகின்ற பணத்திற்கு இறைவனுக்கு பதில் சொல்ல வேண்டிய இடத்தில் நான் இருக்கின்றேன். எனவே காலத்தின் கலீஃபா சுயமே அந்த இடங்களுக்கு சென்று, அவர்களுடைய கடினங்களை காண வேண்டும். மேலும் அங்கு இருக்கின்ற எல்லா விதமான மக்களிடமும் ஆலோசனை பெற்று ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும்.

ஆகையால் இந்த தேவைகளைக் கருத்தில் கொண்டவாறு நான் என்ன தீர்மானம் எடுத்துள்ளேன் என்றால், இந்த மாநாட்டினுடைய அழைப்பை இறைவனுடைய ஒரு நோக்கமாக கருதி, தற்போது பல்வேறு பிரச்சனைகள் இருந்தபோதிலும் இந்தப் பயணத்தை மேற்கொள்ளப் போகின்றேன். வேம்பளே மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்பது நோக்கம் அல்ல ; மாறாக, மேற்கத்திய நாடுகளில் தப்லீஃக்கிற்காக ஓர் இடைவிடாத திட்டத்தை வகுக்க வேண்டும். மேலும் அங்குள்ள நிலைமைகளை விரிவாக அறிந்து கொள்ள வேண்டும் என்பதாகும். ஏனெனில், அந்த நாடுகள் இஸ்லாத்தின் வழிகளில் ஒரு மதில் சுவராக இருக்கின்றன. அந்த மதில் சுவரை உடைப்பது நம்முடைய முக்கியமான கடமையாகும். (தாரீகே அஹ்மதிய்யத், பாகம் 4, பக்கம் 427 - 428)

இந்த சுற்றுப் பயணத்தின் மூலமாக கிடைத்த மாபெரும் அருட்கள் மற்றும் கனிகள் தொடர்பாக ஒரு சிலவற்றை சுருக்கமாக முன்வைக்கின்றேன்.

### 1. வேம்பளே மாநாட்டிற்காக அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாம் என்ற கட்டுரையை எழுதுதல்

ஹுஸுர் (ரலி) அவர்கள் இந்த மாநாட்டிற்காக அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாம் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுத ஆரம்பித்தார்கள். இரவும், பகலும் ஹுஸுர் (ரலி) அவர்கள் மேற்கொண்ட முயற்சி மற்றும் உழைப்பிற்கு பிறகு பரிசுத்த ஆவியின் உதவியினால் அது முழுமை அடைந்தது. கட்டுரை மிகவும் விரிவானதாக இருந்தது. எனவே ஹுஸுர் (ரலி) அவர்கள் இந்த கட்டுரையின் சுருக்கத்தை தயார் செய்யும் அடிப்படையில் ஒரு புதிய கட்டுரையை எழுத விரும்பினார்கள். 9 ஜுலை 1924- இல் ஒரு புதிய கட்டுரை - ஸில்ஸிலா அஹ்மதிய்யா (அஹ்மதிய்யா இயக்கம்) என்ற தலைப்பில் எழுதினார்கள். பிறகு இதனுடைய சுருக்கம் ஹுஸுர் (ரலி) அவர்களுடைய வழிகாட்டலின்படி ஹஸ்ரத் சவ்த்ரி முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் (ரலி) அவர்கள் 23 செப்டம்பர் 1924-ல் ஹுஸுர் (ரலி) அவர்களின் சார்பாக இந்த மாநாட்டில் இந்தக் கட்டுரையை வாசித்தார்கள். ஹுஸுர் (ரலி) அவர்களும் தம்முடைய தோழர்களுடன் இந்த அமர்வில் அமர்ந்திருந்தார்கள். இந்தக் கட்டுரை மிகவும் ஆர்வமாக கேட்கக் கூடியதாக இருந்தது. கூறப்படுகின்றது: இந்த மாநாட்டின் பொழுது அனைத்து மார்க்கங்களுடைய அறிஞர்கள் கலந்து

கொண்டிருந்தார்கள். அதாவது கிறிஸ்தவர்கள், யூதர்கள், புத்தர்கள், இந்துக்கள், சீக்கியர்கள் மற்றும் அஹ்மதி அல்லாத முஸ்லிம்களும் இதில் கலந்து கொண்டார்கள். ஆனால், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கட்டுரை மிகவும் மேலானதாக இருந்தது. மேலும், இந்த விஷயம் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்பட்டது. அதாவது மாநாட்டினுடைய வெற்றிக்கு மிகப் பெரிய காரணம் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும், அன்னாருடைய ஜமாஅத்தும் ஆகும் என்று வெளிப்படுத்தப்பட்டது.
(தும்ஹீத் ரிப்போர்ட் கான்ஃபிரன்ஸ் மஸாஹிப், லண்டன் பதிப்பு 1925)

**2. அஹ்மதிய்யா அமைப்பின் பிரபல்யம் - உலகளாவிய பிரச்சாரம் மற்றும் பல்வேறு சமுதாயங்கள் அருட்களைப் பெறுதல்**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில கனவுகள் மற்றும் ஆன்மிகக் காட்சிகளில் குறிப்பாக முஸ்லிஹ்: மவ்வூத் தொடர்பான முன்னறிவிப்பில் உலகளாவிய பிரச்சாரம் மற்றும் சமுதாயங்கள் அருட்களைப் பெறுதல் தொடர்பான குறிப்பு இடம்பெற்றிருந்தது. அதுவும் இந்த மகத்தான பயணத்தின் பக்கம் சுட்டிக் காட்டுகின்றது. மேலும் இந்தப் பயணம் பல ரீதியில் பழைய முன்னறிவிப்புகளை முழுமை செய்யக் கூடியதாகவும், அருளுக்குரியதாகவும் இருக்கும் என்ற காட்சியை ஜமாஅத் உறுப்பினர்களும், ஜமாஅத் அல்லாத சில நபர்களும் கண்டிருந்தனர்.ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கும் இந்தப் பயணத்தின் விளைவாக வெற்றி கிடைப்பது தொடர்பான முன்னறிவிப்புகள் கிடைத்திருந்தன. அதனை எடுத்துரைத்தவாறு அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

அல்லாஹ் எனக்கு முன்னரே நற்செய்தி வழங்கியிருந்தான். அதாவது, என்னுடைய இங்கிலாந்து பயணத்தினால் இஸ்லாத்திற்கு வெற்றிகள் ஆரம்பம் ஆகும்.

நான் அங்கு சென்ற உடனேயே அவர்கள் அஹ்மதிகள் ஆக ஆரம்பித்து விடுவார்கள் என்று ஒருபோதும் ஜமாஅத் கருத வேண்டாம்; நான் அங்கு தப்லீக்கிற்கான நிலைமையை பார்ப்பதற்காக செல்கிறேன் என்று நான் முன்னரே கூறியிருந்தேன். அடுத்து, பின்னர் வெளிப்பட்ட நிலைமைகளில் இருந்து இந்த விஷயம் தெரிய வந்தது. அதாவது நான் அங்கு சென்றதில் அல்லாஹ்வின் இந்த நுட்பமான ஞானம் பொதிந்திருந்தது. அதாவது, நான் அங்கு சென்றதன் விளைவாக இப்பொழுது கிடைக்க துவங்கியுள்ள அந்த வெற்றிகளை வேறு ஒரு நபர் பக்கம் ஒருபோதும் சுட்டிக் காட்டப்படக் கூடாது என்பதும் மேலும் இஸ்லாத்தின் மீது வேறு எந்தவொரு நபருடைய சிறப்பான உபகாரமும் இல்லை; மாறாக, நேரடியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பக்கம் அவை சுட்டிக் காட்டப்பட வேண்டும் என்பதும் இறைவனின் ஞானமாக இருந்தது.

பிறகு நான் கூறுகின்றேன்: அதாவது ஒரு நாளில் வெற்றியடைந்த எந்த நபியும் இல்லாதபோது ஒரு கலீஃபாவுக்கு எவ்வாறு ஒரே நாளில் வெற்றி கிடைத்து விடும்? இருப்பினும் எப்பொழுதும் இறை அருளின் தொடர் எவ்வாறு முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கின்றது என்றால் ஓர் ஆங்கிலேயர் இவ்வாறு எழுதுகின்றார்:

இந்த அமைப்பினுடைய முன்னேற்றத்திற்கான சான்றை முந்தைய நூற்றாண்டுகளில் எந்த அமைப்பிலும் காண முடியாது.
(உரை ஜல்ஸா ஸாலானா, 27 டிசம்பர் 1926)

பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் இந்தப் பயணத்தில் அருட்களை வழங்கி இருக்கின்றான். மேலும் அஹ்மதிய்யா அமைப்பிற்கு நிரந்தரமான பிரபல்யத்தை வழங்கியிருக்கின்றான். மேலும் இதன் மூலமாக உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும் அதனுடைய பெயர் எழுந்திருக்கின்றது. மேலும், ஆயிரக்கணக்கான உள்ளங்களில் இந்த அமைப்பினுடைய கம்பீரம் மற்றும் உயர்வு குடி கொண்டு விட்டது என்பதை இங்கு கூறுவது அவசியம் இல்லை. ஏனெனில் இந்த விஷயம் அனைத்து நண்பர்களும் அறிந்தது தான்! இந்தப் பணி காதியானில் அமர்ந்து கொண்டு பத்து பதினைந்து ஆண்டுகள் லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழித்தாலும் நடைபெற்றிருக்காது. இருப்பினும் என்ன நடந்ததோ அது ஒரு விதை விதைத்தலுக்கான பணியே ஆகும். 1300 ஆண்டுகளுக்கான முன்னறிவிப்புகள் இந்த அளவில் மட்டும் பிரபல்யத்திற்கான காரணிகளை உருவாக்கி விட்டு முற்று பெற்றுவிட முடியாது. இந்தப் பயணத்தின் விளைவானது தற்போது ஏற்பட்ட விளைவைக் காட்டிலும் மிக அதிகமாக வெளிப்படும். இன்ஷா அல்லாஹ்!
(மன் அன்ஸாரி இலல்லாஹ், அன்வாருல் உலூம், தொகுதி 9, பக்கம் 32,33)

பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

நம்முடைய வருகையுடன் அல்லாஹ் எவ்வாறான அசாதாரணமான ஏற்பாடுகளை செய்துள்ளான் என்றால், அறிமுகமான சில நபர்களைத் தவிர ஜமாஅத்தை வேறு எவரும் அறிந்திருக்கவில்லை. தற்போது இதற்கு எந்த அளவுக்கு பிரபல்யம் மற்றும் உயர்வு கிடைத்துள்ளது என்றால் அந்நியர்கள் கூட இவ்வாறு கூற ஆரம்பித்துள்ளனர். அதாவது எங்கு சென்றாலும் அஹ்மதிய்யத்தைக் குறித்த பேச்சாகவே இருக்கின்றது. எங்கு சென்றாலும் அல்லது படித்தாலும் விவாதத்திற்கான தலைப்பு அஹ்மதிய்யத் ஆக இருக்கின்றது. மேலும் சபைகளில் இதை குறித்து தான் பேச்சுகள் எழுகின்றன. எந்த அளவிற்கு என்றால், மக்கள் இந்த மாநாட்டையும் அஹ்மதிய்யா மாநாடு என்று கூறுகின்றார்கள். மவ்லவி நிஃமத்துல்லாஹ் கான் ஸாஹிப் அவர்களுடைய ஷஹாதத் விஷயம் மிகப் பெரிய காரணியாக இருக்கின்றது. இருப்பினும் நம்முடைய வருகை மேலும் அன்னார் (ரலி) ஷஹீது ஆகுவது இந்த இரண்டு நிகழ்வுகளையும் ஒன்றாக யார் ஆக்கியது? இந்த விஷயங்களின் பக்கம் நன்கு சிந்திப்பவர்கள் மீதும், கவனம் செலுத்துபவர்கள் மீதும் இறைவனுடைய நோக்கம் மற்றும் இறைவனுடைய எண்ணம் என்ன? என்பது புரிந்து விடும். மேலும் இறைஞானம் பெறுவதற்கான இடம் அருகில் இருக்கின்றது. ஒருவேளை நாம் வந்திருந்து, இந்த சம்பவம் நடக்காமல் போயிருந்தால் அல்லது ஒருவேளை நாம் வராமல் இருந்து, இந்த சம்பவம் நிகழ்ந்திருக்கலாம். ஆகையால் இவை அனைத்தும் இறைவனுடைய பணி ஆகும். அதாவது அவன் இவ்வாறான காரணிகளை ஒன்று திரட்டியுள்ளான். இதன் மூலமாக நம்முடைய அமைப்பிற்கு பிரபல்யம் கிடைத்திருக்கின்றது. எவ்வாறு இருப்பினும், இதற்கு முன்பும் இரண்டு ஷஹாதத்துகள் நிகழ்ந்திருக்கின்றன. அவை சில சூழ்நிலைகளில் இதை விட மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை தான். இருப்பினும் அதன் மூலமாக நம்முடைய முன்னேற்றம் அல்லது பிரபல்யத்தின் மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தியது? நோக்கம் என்னவென்றால், நம்முடைய இந்த பயணத்துடன் ஒரு பகுதி வெளிப்படையில் தொடர்புடையதாக இருக்கின்றது. இறைவனுடைய அருளினால் முழுமை அடைந்துள்ளது. மற்றவை முழுமை அடைவது தொடர்பாக நமக்கு முழுமையான நம்பிக்கையும் உறுதியான ஈமானும் இருக்கின்றது. மேலும் இறைவனுடைய மறைவான நியதி நிச்சயமாக இப்பொழுது வெளிப்பட ஆரம்பித்து இருக்கின்றது.
(ஐரோப்பிய சுற்றுப் பயணம் பக்கம் 305 -307)

### 3. மூன்றாவது பெரிய அருள் ஐரோப்பிய மக்களுடைய கவனம் அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் பக்கம் திரும்பி இருக்கின்றது

ஜஹ்லமிலிருந்து மவ்லவி புர்ஹானுத்தீன் ஸாஹிப் அவர்களுக்கு பதில் எழுதும்போது ஹுஸூர் (ரலி) அவர்கள் மும்பையில் இருந்தவாறு ஐரோப்பாவின் சுற்றுப் பயணத்தின் மாபெரும் அருட்கள், கனிகள் மற்றும் வெற்றிகள் தொடர்பாக எழுதுகின்றார்கள்.

புகழுக்கும் நன்றிக்கும் உண்மையில் உரித்தானது இறைவனின் இருப்பேயாகும். ஏனெனில், எல்லாவிதமான அருட்கள் மற்றும் பரக்கத்துகள் அவனிடமிருந்து கிடைக்கின்றன. மேலும் வருகின்றன. மேலும் அவனே ஒளிகளின் ஆரம்பமும், மேலும் நன்மையின் ஊற்றாகவும் இருக்கின்றான். எனவே உண்மையான நன்றி அந்த இறைவனுக்கே உரியதாகும். எந்த நாடுகளில் எல்லாம் நாம் சென்றோமோ அங்குள்ள மக்களில் (சிலர்) அந்த நாட்டினுடைய அதிகாரிகளாக இருப்பதன் காரணத்தினால் ஒரு விதமான ஆணவமும், கர்வமும் கொண்டிருக்கின்றார்கள். ஆங்கிலேயர்கள் மட்டுமின்றி மற்ற சமுதாயங்களும் இந்தியர்களை இழிவாகவும், ஏளனமாகவும் எண்ணுகின்றனர். இவ்வாறான சூழலில் தன்னுடைய ஆட்சியின் கீழ் இருக்கக் கூடிய ஒரு நபருடைய பேச்சுக்கு கவனம் செலுத்துவது மிகவும் வியப்பான விஷயமாகும். இருப்பினும், என்ன நடந்ததோ அது இறைவனுடைய அருளின் விளைவாகும். அடுத்தது அந்த மக்கள் தம்முடைய அறிவியல் அறிவு மற்றும் நாகரீகத்தின் அடிப்படையில் எந்த அளவிற்கு முன்னேற்றமடைந்து வளர்ந்து இருக்கின்றனர் என்றால் மற்ற முழு உலகத்தையும் ஒன்றுமற்றதாக கருதுகின்றார்கள். மார்க்கத்தின் பெயர்களில் அவர்களிடம் ஏதாவது கூறப்பட்டது என்றால் செவிமடுத்துக் கொள்கின்றார்கள். ஆனால், அவர்களுடைய நாகரீகத்திற்கு எதிராக ஏதாவது ஒரு விஷயம் பேசப்பட்டது என்றால் அவர்களுடைய கண்கள் மின்ன ஆரம்பித்து விடுகின்றன. மேலும் முகம் நிறம் மாறி விடுகின்றது. மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்: நூற்றுக்கணக்கான வருடங்களில் அனுபவம், உழைப்பு மற்றும் முயற்சியினால் நாங்கள் இவ்வாறான விஷயங்களை உருவாக்கி இருக்கின்றோம். இதற்கு எதிராக எவருக்கும் எதுவும் பேசுவதற்கு உரிமை கிடையாது என்று கருதுகின்றனர். மேலும் அவ்வாறு பேசும் நபர்களை பைத்தியம் மற்றும் அறிவீனர்கள் என்றும் கருதுகின்றார்கள். இருப்பினும், இஸ்லாம் விரிவான ஞானத்தை கொண்டதாகவும், மேலும் முழுமையான சட்டத் திட்டங்களை கொண்டதாகவும் இருக்கின்றது. மேலும் அதனுடைய ஒவ்வொரு பகுதியும் மனித வாழ்வில் அங்கம் வகிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதன் காரணத்தினால் நமக்கு இவ்வாறு விஷயங்களையும் கூற வேண்டியது வந்தது. அது அந்த மக்களுடைய நாகரீகத்திற்கு எதிரானதாக இருந்தது. இருப்பினும், அவர்கள் இந்த விஷயத்தினால் கொந்தளித்தனர். என்னென்ன விஷயங்கள் எல்லாம் அவர்களுடைய நாகரீகத்திற்கு எதிரானதாக இருந்ததோ அதை கேட்பதற்கு கூட அவர்களிடம் சகிப்புத்தன்மை இல்லை.

ஆனால் நாம் இறைவனுடைய அருளினால் அந்த விஷயங்களையும் முன் வைத்தோம். மேலும் எவ்வாறான முறையில் முன்வைத்தோம் என்றால் அந்த மக்களுடைய தலை குனிந்து விட்டது. மேலும் இப்பொழுது நாங்கள் அறிவின் அடிப்படையில் புரிந்து கொண்டோம். அதாவது தாங்கள் கூறுகின்ற விஷயம் சரியானதுதான் என்று ஒப்புக் கொண்டார்கள். இருப்பினும் நாங்கள் எங்களுடைய நாட்டினுடைய சடங்கு சம்பிரதாயங்களுக்கு எதிராக நிற்க முடியாது என்றார்கள். ஒரு பெண்மணி உரையைக் கேட்டதற்கு பிறகு வந்தார். மேலும் கூறினார்:

என்னை நம்பிக்கையாளராக ஆக்குங்கள்; ஆனால் நாம் அவருக்கு மறுப்பு தெரிவித்தோம். மேலும் கூறினோம். இப்பொழுது நீங்கள் நூல்களை படியுங்கள். மேலும் அதிகமாக ஆழ்ந்து சிந்தியுங்கள் என்று கூறினோம்.

சிலர் பத்திரிகைகளில் கூறப்பட்டிருந்த விஷயங்களை படித்த உடனேயே இஸ்லாத்தின் பக்கம் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டார்கள். ஆனால், நம் புறமிருந்து அந்த மக்களுக்கு நீங்கள் மேலும் ஆராய்ச்சியை மேற்கொள்ளுங்கள் என்றே பதில் கொடுக்கப்பட்டது. நாம் எவ்வாறான நம்பிக்கையாளர்களை எதிர்பார்க்கின்றோம் என்றால், அவர்கள் செயல் ரீதியான நம்பிக்கையாளர்களாக இருக்க வேண்டும். வெறும் பெயர் அளவில் இருப்பது எவ்விதமான உண்மைத்துவத்தையும் கொண்டிருப்பதில்லை. அதனால் நமக்கு எந்த விதமான பயனும் அளிக்காது. பெரும்பாலான மக்கள் நம்முடைய வீட்டிற்கு வந்தார்கள். நம்முடைய சபைகளில் அமர்ந்தார்கள். அவர்களை யார் கொண்டு வந்தார்? இறைவன் தான் அவர்களை கொண்டு வந்தான். இறைவன் ஓர் ஈர்ப்பை உருவாக்கியிருக்கின்றான். அது அவர்களுடைய உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும் அவர்கள் இஸ்லாத்தின் அன்பர்களாக ஆகிவிட்டார்கள்.

உண்மையில், இதுதான் முன்னேற்றத்தின் சரியான முதல் படியாகும். அதாவது இறைவன் உலகத்தினுடைய கவனத்தை நம் பக்கம் திருப்பி விட்டான். மேலும் அவர்களுடைய உள்ளத்தில் இதன் பக்கம் சிந்தியுங்கள்; கவனம் செலுத்துங்கள் என்ற விஷயத்தை உருவாக்கி விட்டான். ஒரு கல்லூரியின் மேலாளர் மற்றும் செயலாளர் வந்தார்கள். உங்களுக்கு இந்த பயணத்தின் மூலமாக என்ன வெற்றி கிடைத்தது? என்று அவர்கள் கேள்வி கேட்டார்கள். நான் அவர்களிடம் கூறினேன்; கவனத்தை திருப்பக் கூடிய விஷயம் மனிதனுடைய கட்டுப்பாட்டில் இல்லை. மாறாக, இது இறைவனுடைய செயலாகும். அதாவது மக்கள் ஏதாவது ஒரு விஷயத்தின் பக்கம் கவனம் செலுத்துவதும், மேலும் அவர்களுடைய உள்ளம் இதன் பக்கம் திரும்புவதும், இந்த பக்கம் இருப்பவர்களுடைய பேச்சைக் கேட்க வேண்டும் என்று விரும்புவதும் இறைவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றது. மக்கள் அவ்வாறு செய்தால் பின்னர் அவர்களுக்கு ஒப்புக் கொள்வதற்கான நற்பேறு கிடைத்து விடுகின்றது. நம்முடைய புகைப்படத்தைப் பார்த்து, மேலும் பத்திரிகைகளில் கட்டுரைகளை படித்ததன் காரணத்தினால் இப்பொழுது லண்டனுடைய சிறு, சிறு குழந்தைகள் வரை நம்மை அறிந்து கொண்டார்கள். மேலும் இந்த அமைப்பினுடைய எவ்வாறான அறிமுகம் கிடைத்திருக்கின்றது? என்றால் ஒரு 12 வயது சிறுவன் கூட இங்கிலாந்தில் தப்லீஃக்கிற்காக சென்றார் என்றால் மக்கள் அவருடைய பேச்சைக் கேட்பார்கள். மேலும் இவன் ஒரு பைத்தியம் என்று ஒருபோதும் கூறமாட்டார்கள். ஏனெனில், அவர்கள் அறிந்து கொண்டார்கள். இந்த அமைப்பு உண்மை மற்றும் நுட்பமான ஞானம் மேலும் உயர்வான கண்ணியங்களை கொண்டதாகும். மேலும் இதன் பக்கம் கவனம் செலுத்துவது தகுதியானதாக இருக்கின்றது என்று சிந்தித்து செயல்படுவார்கள். மேலும் இது ஒன்றும் சிறிய விஷயம் இல்லை. மாறாக இறைவன் உருவாக்கியதாகும்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

என்னுடைய இந்த பேச்சுக்களை கேட்டு அவர்கள் இருவரும் கூற ஆரம்பித்தார்கள். உண்மையில் இது நிகரற்ற வெற்றியாகும்.

இது இறைவனுடைய செயலாக மேலும் அவனுடைய முன்னறிவிப்பின் அடிப்படையில் ஏற்பட்டதாகும். 10 நபர்கள்,20 நபர்கள், 50 நபர்கள்,100 நபர்கள் ஒப்புக் கொண்டார்கள் என்றாலும் அது குறுகியதாகவே இருக்கும். ஆனால், ஒரு லட்சம் அல்லது ஒரு கோடி நபர்களுக்கு கவனம் ஏற்பட்டு விட்டது என்றால், அது மிகப் பெரிய வெற்றியாகும். மேலும் அது முன்னேற்றத்திற்கான அடையாளமாகும். அதேநேரம் வெறும் பெயரளவிலான நம்பிக்கையாளர் 50 நபர்கள் அல்ல ; 50 கோடி உருவானாலும் அதனால் எந்தப் பயனும் இல்லை. இப்பொழுது அல்லாஹ் நமக்காக மைதானத்தை உருவாக்கித் தந்திருக்கின்றான். நம்முடைய இந்தப் பயணம் ஜெஹ்லம் பயணத்தை போன்று இறைவனுடைய கருணை மற்றும் அருளின் மூலமாக உருவானதாகும். மேலும் வெற்றிகளும் இறை அருளினால் உருவாகின்றது. எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய ஜஹ்லம் சுற்றுப் பயணம் இறைவனுடைய சிறப்பான நோக்கத்தினால் பயணத்தின் காரணிகள் உருவானதோ மேலும் வெற்றிகள் வெளிப்பட்டனவோ அதேபோன்று இந்தப் பயணமும் அதற்கான காரணிகளும் மேலும் நல்விளைவுகளும் இறைவனால் வெளிப்படும்.

(தவ்ரா யூரோப் - பக்கம் 480 - 491)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இல்ஹாம் மற்றும் கஷ்ஃப்கள் உதாரணமாக, நாம் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை கண்ணியத்துடன் பரப்புவோம்.

يَدْعُوْنَ لَكَ اَبْدَالُ الشَّامِ
وَعِبَادُ اللهِ مِنَ الْعَرَبِ

என்ற இல்ஹாம் மற்றும் லண்டன் நகரில் வெள்ளை நிறத்தில் பறவைகளை பிடிப்பது போன்ற ஆன்மிகக் காட்சிகள் சுயமே இலக்கை அடைவதற்கான பாதையை முன்னரே வகுத்திருந்தன. அந்தப் பாதையில் பயணத்தை தொடங்குவதற்கான காலம் மட்டுமே மீதமிருந்தது. நிறைவேற்றிக் கொள்கின்றன. ஆக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தமது கிலாஃபத் காலத்தின் துவக்கத்தில் அந்த நோக்கங்களின் பக்கம் பயணத்தை தொடங்கி விட்டார்கள்.

**5. ஐந்தாவது அருள் - துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுதல் எனும் நற்பேறு கிடைத்தல்**

ஹுஸூர் (ரலி) அவர்கள் இந்த ஐரோப்பிய பயணத்திற்கு முன்பு இதனுடைய வெற்றி அருட்கள் மற்றும் நல்ல கனிகள் வெளிப்படுவதற்காக துஆக்கள் செய்தார்கள். மேலும் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு மீண்டும், மீண்டும் இதன் பக்கம் கவனமூட்டினார்கள். மேலும் இந்த பயணத்திற்காக தாமும் இஸ்திகாரா செய்தார்கள்; மேலும் சில ஜமாஅத் உறுப்பினர்களைக் கொண்டும் இஸ்திகாரா செய்ய வைத்தார்கள். அதேபோன்று பயணத்தின் தருணத்திலும், ஒவ்வொரு நொடிப்பொழுதிலும், ஒவ்வோர் அடியிலும் அன்னார் (ரலி) தம்முடைய பயணத் தோழர்களுடனும், ஜமாஅத் உறுப்பினர்களுடனும் துஆ செய்தார்கள். ஹதீஸ் அடிப்படையில் மூன்று துஆக்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அது ஒப்புக் கொள்ளப்படுவதில் எந்த சந்தேகமும் இல்லை. ஒன்று, அநீதி இழைக்கப்பட்டவருடைய துஆ மற்றொன்று பயணியின் துஆ. மேலும் மூன்றாவது தந்தையுடைய துஆ. அதாவது தந்தை தம் பிள்ளைகளுக்காக செய்யும் துஆ ஆகியவற்றுக்கு ஏற்ப துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கான நற்பேறு பெற்றார்கள். இதன் விளைவினால் இந்தப் பயணத்தில் அல்லாஹ் அசாதாரணமான மேலும் எதிர்பார்ப்புகளுக்கு அதிகமாக வெற்றிகளை வழங்குகின்றான். எதிர்காலத்திற்காகவும் ஒப்புக்கொள்ளப்படக் கூடிய அந்த துஆக்களின் தொடர் மாபெரும் முன்னேற்றங்களின் வித்தாக நிரூபணமாகின்றது.

காதியானிலிருந்து புறப்பட்ட அந்த நாளன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மண்ணறையில் சென்று உருக்கமாக துஆ செய்தார்கள். புறப்படும் அந்த நேரத்தில் ஜமாஅத் உறுப்பினர்களுடன் இணைந்து நீண்ட மற்றும் மிகவும் உருக்கமான துஆ செய்தார்கள். கப்பல் மக்கா மற்றும் ஜித்தா ஷரீஃபிற்கு அருகில் கடந்து சென்றபோது ஹுஸூர் (ரலி) அவர்கள் இரண்டு ரக்அத் தொழுகையை ஜமாஅத்தாக தொழ வைத்தார்கள். அதில் மிகவும் உருக்கமாக துஆ செய்தார்கள். பிறகு டமாஸ்களில் துஆ செய்தார்கள். அதாவது அல்லாஹ்வே! டமாஸ்கஸ் குறித்த முன்னறிவிப்புகளை நிறைவேற்றுவாயாக! மேலும் மிக அதிகமான வெற்றிகளை வழங்குவாயாக.

பிறகு விக்டோரியா ஸ்டேஷனில் குழுவினருடன் இணைந்து துஆ செய்தார்கள்.

லண்டனில் இருந்து திரும்பி வரும் தருணத்திலும் ஹுஸூர் (ரலி) அவர்கள் மற்றும் ஜமாஅத் உறுப்பினர்கள் தொடர்ந்து துஆ செய்து கொண்டே இருந்தார்கள். எதுவரை என்றால் மும்பை வந்தடைந்த பிறகும் ஹுஸூர் (ரலி) அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பெயரில் தன்னுடைய தூதுச் செய்தியில் இந்த துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டது குறித்து கூறுகின்றார்கள்.

நான் என் சார்பாகவும், என்னுடைய பயணத் தோழர்கள் சார்பாகவும் ஜமாஅத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில், அவர்கள் நம்முடைய நோக்கத்தின் வெற்றிக்காக துஆ செய்தார்கள். வியப்பில் ஆழ்த்தக் கூடிய வெற்றிகள் இந்த பயணத்தின் தருணத்தில் நமக்கு கிடைத்திருக்கின்றன என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். இது இறைவனுடைய அருள் மற்றும், கருணையின் விளைவினாலேயே கிடைத்திருக்கின்றன. அவன் ஒவ்வோர் அடியிலும் நமக்கு உதவி செய்தான். எவ்வாறான நேரங்களில் கதவுகளை திறந்து தந்தான் என்றால் நமக்கு எந்த வழியும் தென்படாமல் இருந்தது. நான் ஜமாஅத் சகோதரர்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்வது என்னவென்றால், நீங்கள் உங்களுடைய வல்லமை மிக்க இறைவனுடைய சிறப்பான அருட்களை நினைவில் கொள்ளுங்கள்! மேலும் உங்களை நீங்களே அந்த மிகப் பெரிய தியாகத்திற்காக தயார்படுத்திக் கொள்ளுங்கள். அதாவது கடந்த நான்கு மாதங்களின் பணியின் விளைவினால் அல்லாஹ்வின் புறமிருந்து வெளிப்பட இருக்கின்ற அந்தக் கனிகளைப் பெறுவதற்காக உங்களை தியாகங்கள் செய்வதற்கு ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். அல்லாஹ் நம் அனைவர் மீதும் தன்னுடைய அருட்களை பொழிவானாக!

(தாரீகே அஹ்மதிய்யத், பாகம் 4, பக்கம் 462)

காதியான் வந்தடைந்ததும் ஹுஸூர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மண்ணறையில் தனியாக துஆ செய்வதற்காக சென்றார்கள். சிறிது நேரத்திற்கு பிறகு அனைவரும் இணைந்து துஆ செய்தார்கள். பஹிஷ்தீ மக்பராவில் இருந்து ஊருக்குள் நுழையும் பொழுது ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஹாஃபிழ் ரோஷன் அலி ஸாஹிப் (ரலி) அவர்கள் நகரத்தின் உள்ளே நுழையும் துஆவை ஓதுவார்கள். அனைத்து நண்பர்களும் உரத்தக் குரலில் அன்னாரை பின்தொடர்ந்து கூறவேண்டும். அதன்படி,

اٰئِبُوْنَ تَائِبُوْنَ عَابِدُوْنَ لِرَبِّنَا
حَامِدُوْنَ صَدَقَ اللهُ وَعْدَهٗ وَ نَصَرَ عَبْدَهٗ
وَهَزَمَ الْاَحْزَابَ وَحْدَهٗ

என்ற இந்த துஆவின் சொற்களை ஹாஃபிழ் ஸாஹிப் அவர்கள் உரத்தக் குரலில் ஓதினார்கள். மேலும் அங்கு

கூடியிருந்த அனைவரும் பின்னால் ஓதினார்கள். அஹ்மதிய்யா வீதியை அடைந்ததும், ஹுஸுர் (ரலி) அவர்கள் முழு கூட்டத்துடன் இணைந்து திரும்பி செல்வதற்கான துஆவை ஓதினார்கள். அந்த தருணம் மிகவும் உருக்கத்தையும், தாக்கத்தையும் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. ஹுஸுர் (ரலி) அவர்களுடைய குரலில் உருக்கமும், கண்களில் கண்ணீரும் நிறைந்திருந்தது. அங்கு குழுமியிருந்த அனைத்து மக்களும் மகிழ்ச்சியில் அழ ஆரம்பித்தார்கள். மேலும் இந்த உருக்கமான நிலையில் ஹுஸுர் (ரலி) அவர்கள் கலங்கிய கண்களுடன் துக்கம் நிறைந்த குரலில் கூறினார்கள்.

பாருங்கள்! ரஸுலே கரீம் (ஸல்) அவர்களின் இந்த துஆ எவ்வாறான நுட்பத்தை கொண்டு இருக்கின்றது! அதனுடைய விஷயத்தை இன்று நாம் பார்க்கின்றோம். இதே இடத்தில் இதே மண்ணில் மேலும் இதே வீட்டில் எங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் துஆ செய்தார்களோ - அப்பொழுது அன்னார் (அலை) தனியாக இருந்தார்கள். எந்தவிதமான உதவியாளரும், தோழரும் இருக்கவில்லை. அப்பொழுது நாலாப்புறத்தில் இருந்தும் இவர் ஏமாற்றுக்காரர்; பொய்யர் என்ற குரல்கள் எழுந்து கொண்டிருந்தன. நவூதுபில்லாஹ்!

மேலும், இவரை நாங்கள் பூச்சியை போன்று நசுக்கி விடுவோம் என்று எதிரிகள் கூறினார்கள். ஆனால், இறைவன் தன்னுடைய வாக்குறுதிக்கு ஏற்ப அன்னாருக்கு உதவி மற்றும் ஒத்தாசைகளை வழங்கினான். ஒரே கயிற்றில் நாம் கட்டப்பட்டுள்ளோம். நாம் இந்த அளவிற்கு மக்கள் ஒரே இடத்தில் ஒன்று கூடி இருக்கின்றோம். அன்னாரின் மூலமாகவே நமக்கு இறைவன் எல்லா மைதானத்திலும் வெற்றியை வழங்கினான். அன்னார் மூலமாக அன்னாருக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு ஏற்றவாறு இறைவன் நமக்கு கண்ணியத்தை வழங்கினான். அது உண்மையில் அன்னாருக்காக வந்தது தான். எது தொடர்பாக அன்னாருக்கு வாக்குறுதி வழங்கப்பட்டிருந்ததோ அந்த வாக்குறுதிகளுக்கு வாரிசாக இறைவன் நம்மை ஆக்கி இருக்கின்றான். உண்மை மற்றும் சத்தியத்தை கருத்தில் கொண்டவாறு பார்த்தோமேயானால், உண்மை இதுவாகும். அதாவது எல்லாப் பெருமையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு உரியதாகும்; முஹம்மது (ஸல்) அவர்களுக்கு உரியதாகும்; அல்லாஹ்விற்கு உரியதாகும். (தாரீகே அஹ்மதிய்யத், பாகம் 4, பக்கம் 465 - 466)

**6. திரித்துவத்தின் கோட்டையில் ஏக இறைவனை வணங்க - மஸ்ஜித் ஃபஸ்ல் அடிக்கல் நாட்டுதல்**

பள்ளிவாசல் திறப்பு மற்றும் மாபெரும் பிரபல்யமடைந்த இந்த நிகழ்ச்சியில் இருந்து முடிந்த வரை பயன் பெறுவது தொடர்பாக ஜமாஅத்திற்கு கவனமூட்டியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த நிகழ்ச்சி மற்றும் இந்த சிறப்பான திறப்பு விழாவின் மூலம் அல்லாஹ் உலகத்தில் ஒரு புரட்சியையும் அதிர்வையும் உருவாக்கிவிட்டான். மேலும் ஒரு பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தி விட்டான். மேலும் தன் புறமிருந்து முழு உலகத்தின் பார்வையையும் அதன் பக்கம் திருப்பிவிட்டான். இதற்கு முன்பு இவ்வாறான சிறப்பான நிகழ்ச்சி இங்கிலாந்தின் வரலாற்றில் தென்படவில்லை. ஆகையால் ஐரோப்பாவின் பெரும், பெரும் பத்திரிகைகள் கூட இந்த விஷயத்தை ஒப்புக் கொண்டிருக்கின்றன. அதாவது இங்கிலாந்தில் இவ்வாறான மிகப் பெரிய நிகழ்வு கிறிஸ்துவ மதத்தின் நிகழ்ச்சியில் கூட இதற்கு முன்னர் ஒருபோதும் காணக் கிடைக்கவில்லை. இது அந்த மக்களுடைய கூற்றாகும். அவர்கள் இங்கிலாந்தினுடைய கிறிஸ்துவர்கள் ஆவர். ஒன்று அந்த மக்கள் இங்கிலாந்தில் வசிக்கக் கூடியவர்களாவார்கள். மேலும் கிறிஸ்துவத்தில் உறுதியானவர்கள் ஆவர். மேலும் அத்துடன் அவர்கள் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களும், சமுதாய காழ்ப்புணர்ச்சியில் உலகின் அனைத்து கிறிஸ்துவர்களை விடவும் உயர்வாக இருக்கக் கூடியவர்களும் ஆவர். மேலும் இந்த காழ்ப்புணர்ச்சியின் காரணத்தினால் அவர்கள் ஒருபோதும் வேறொரு சமுதாயத்தை புகழ்வதை விரும்புவதில்லை. இவ்வாறான நிலையிலும் இந்த அனைத்து விஷயங்களுக்குப் பிறகும் இங்கிலாந்தின் பெரும், பெரும் பத்திரிகையாளர்கள் இந்த விஷயத்தை ஒப்புக் கொண்டு இருக்கின்றார்கள். அதாவது இதற்கு முன்னர் இவ்வாறான ஒரு கூட்டம் மேலும் இந்த அளவிற்கு கவனத்தை ஈர்க்கக் கூடிய நிகழ்ச்சி இங்கிலாந்தில் நாம் ஒருபோதும் கண்டதில்லை. பிறகு இங்கிலாந்தில் மட்டும் இந்த நிகழ்ச்சி தொடர்பான பேச்சுகள் எழவில்லை. மாறாக, அனைத்து நாடுகளிலும் மேலும் அனைத்து மொழிகளிலும் இந்த சம்பவம் தொடர்பாக பேசப்பட்டுள்ளது. சில பத்திரிகைகள் மூன்று, மூன்று நாட்கள் வரை திறப்பு விழாவின் செய்திகளை வெளியிட்டுக் கொண்டே இருந்தார்கள். ஐரோப்பாவின் பத்திரிகைகளுடைய சக்தி எந்த அளவிற்கு பெரிதாக இருக்கின்றது என்றால், ஒவ்வொரு செய்தியையும் முன் பக்கத்தில் வெளியிடுவதற்கு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்ய வேண்டியது இருக்கின்றது. மேலும் ஒருமுறை வெளியிடப்பட்டு விட்டது என்றால், பிறகு மறுமுறை ஒருபோதும் வெளியிட மாட்டார்கள். ஆனால், பள்ளிவாசலின் திறப்பு விழா தொடர்பாக இங்கிலாந்தின் ஒவ்வொரு செய்தித்தாளும் செய்தி வெளியிட்டன. உதாரணமாக இங்கிலாந்தின் டைம்ஸ் போன்ற பத்திரிகைகள் மூன்று நாட்கள் வரை தொடர்ச்சியாக செய்திகள் வெளியிட்டன. மேலும் இந்த செய்தி பழையதாக ஆகிவிட்டது என்று ஒருபோதும் அவர்கள் எண்ணவில்லை. மாறாக அவர்கள் அறிந்து வைத்திருந்தார்கள். இங்கிலாந்தின் ஒவ்வொரு வீட்டிலும் பள்ளிவாசல் தொடர்பான பேச்சு உருவாகியிருக்கின்றது . மேலும் எழுந்து கொண்டிருக்கின்றது என்பதை அவர்கள் அறிந்து வைத்திருந்தனர். (ஸவானிஹ் ஃபஸ்லே உமர், பாகம் 3, பக்கம் 90 -91)

ஹஸ்ரத் மவ்லானா ஷேர் அலீ ஸாஹிப் (ரலி) இந்த பள்ளிவாசலின் பயன் மற்றும் அருட்கள் தொடர்பாக எழுதுகின்றார்கள்:

இறைவனுடைய அருளினால் லண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசல் உருவானது. தப்லீஃக்கிற்கான ஒரு வலுவான வழிமுறையாக ஆகிவிட்டது. வெளிநாடுகளில் இருந்து வரக் கூடியவர்கள் உதாரணமாக, ஐரோப்பா, ஆஃப்ரிக்கா, ஆசியா, அமெரிக்கா மற்றும் தீவுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் லண்டன் வரும்போது அதில் பலர் பள்ளிவாசலை பார்வையிடுவதற்காக வருகின்றார்கள். மேலும் அவர்களில் சிலர் மிகப் பெரிய அளவில் கல்வியறிவு படைத்தவர்களாக இருக்கின்றார்கள். மேலும் புரியும் திறன் படைத்தவர்களாக இருக்கின்றார்கள். வெளிநாடுகள் மட்டுமல்லாமல் இங்கிலாந்தின் பல்வேறு நகரங்களுடைய மக்களும் லண்டன் வரும்பொழுது அவர்களில் சிலர் இந்த பள்ளிவாசலை பார்ப்பதற்காக வருகை தருகின்றார்கள். ஆகையால் நம்முடைய பள்ளிவாசல் இப்பொழுது லண்டனுடைய பார்வைக்கு தகுதியுடைய இடங்களில் ஒன்றாகி விட்டது. மேலும் லண்டனுடைய சுற்றுலாத் தளங்களின் புத்தகங்களில் நம்முடைய பள்ளிவாசல் இணைக்கப்பட்டுள்ளது. பள்ளிவாசலின் பிரபல்யத்திற்கு ஒரு காரணம் மாநாடாகும். அது அவ்வப்பொழுது பள்ளிவாசலில் மிகவும் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றது. அதில் லண்டனுடைய பல்வேறு தரப்பினர்கள், பிரபலங்கள் கலந்து கொள்கின்றார்கள். மேலும் இது தொடர்பாக லண்டனுடைய பல்வேறு பத்திரிகைகளில் செய்திகள் வெளி

வருகின்றன. லண்டன் பள்ளிவாசல் மக்களின் கவனத்தை ஈர்க்கக் கூடிய ஒரு விஷயம் மட்டுமல்ல ; மாறாக தப்லீக்கிற்கான ஒரு மாபெரும் வழியாக இருக்கின்றது. நமது முபல்லிஃக் நாவினால் இஸ்லாமிய போதனைகளை மக்கள் முன்பு எடுத்து வைக்கின்றார். மேலும் பள்ளிவாசல் தன்னுடைய உருவத்தினால் ஒரு முன்மாதிரியை வெளிப்படுத்துகின்றது. ஆகையால் தப்லீஃக்கின் நோக்கத்தில் லண்டன் பள்ளிவாசல் மிகப் பெரிய உதவி ஒத்தாசை செய்யக் கூடியதாக உள்ளது. அது சுயமே ஒரு நிரந்தர முபல்லிஃக் ஆக இருக்கின்றது. அதனுடைய இருப்பு மிகவும் அருளுக்குரியதாகும்.

(அல்ஃபஸ்ல் 28 ஆகஸ்ட், 1937)

இவை அனைத்தும் அந்த முயற்சியின் விளைவினால் ஏற்பட்டதாகும். அதாவது 1924 -ம் ஆண்டு இந்த பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டியபோது இறைவனுடைய ஒரு நெருங்கிய அடியாரான ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான சிறப்பான தருணத்தில் செய்த துஆ கீழ்வருமாறு:

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அனைத்து ஆண்கள் மற்றும் பெண்களின் இந்த தூய முயற்சியை இறைவன் ஒப்புக் கொள்வானாக! என்றும், மேலும் இந்த பள்ளிவாசலை நிரப்புவதற்கான காரணிகளை உருவாக்குவானாக! என்றும், மேலும் எப்பொழுதும் இந்த பள்ளிவாசல் நன்மை, இறையச்சம், நீதி, அன்பு ஆகியவற்றின் சிந்தனைகளை பரப்புவதற்கான தலைமையகமாக ஆக்குவானாக! என்றும், மேலும் இந்த இடம் ஹஸ்ரத் காத்தமுன் நபிய்யீன் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத், நபியுல்லாஹ் மற்றும் முஹம்மது (ஸல்) அவர்களின் பிரதிநிதியின் ஒளியின் கதிர்களை இந்த நாட்டிலும், மற்ற நாடுகளிலும் பரப்புவதற்கான ஆன்மிக சூரியனின் பணியை செய்யட்டுமாக! என்றும் நான் இறைவனிடம் துஆ செய்கின்றேன்.

(தஃவ்ரா யூரப், பக்கம் 391 - 392)

**7. முக்கிய பிரமுகர்களுடன் சந்திப்பு மற்றும் அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு**

சிரியா நாட்டின் கவர்னரை சந்ததித்தல்

ஹஸ்ரத் பாயி அப்துர் ரஹ்மான் ஸாஹிப் காதியானி (ரலி) அவர்கள் தம்முடைய நாட்குறிப்பில் எழுதுகின்றார்கள்:

சிரியா நாட்டுடைய கவர்னரை சந்திப்பதற்காக அன்னார் (ரலி) சென்றார்கள். அவருடைய பெயர் சுஜா பேக் ஆகும். அரபு வம்சாவளியைச் சார்ந்த முஸ்லிமாவார். மேலும் மிகவும் புரியும் திறன் கொண்ட நல்ல மனிதர் ஆவார். ஜமாஅத் தொடர்பாகவும் ஹஸ்ரத் அக்தஸ் (ரலி) அவரிடம் இவ்வாறு கூறினார்கள்:

நாங்கள் இங்கு முபஷ்ஷிரீன்கள் எனும் நற்செய்தியை வழங்குபவர்களை அனுப்ப விரும்புகிறோம். உங்களுக்கு அது தொடர்பாக எந்த ஆட்சேபனையும் இல்லை தானே? சட்ட ரீதியாக ஏதும் தடை இருக்கின்றதா? எந்த தடையும் இல்லை என்றால் தாங்கள் எங்களுக்கு உதவி செய்ய முடியுமா? வெறும் தார்மீக ரீதியிலான உதவி மட்டுமே! கவர்னர் ஸாஹிப் ஹஸ்ரத் ஸாஹிப் (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினார்:

நீங்கள் இஸ்லாமிய முபல்லிஃக்மார்கள் மற்றும் முபஷ்ஷிரீன்களை இங்கு அனுப்புங்கள். நாங்கள் அவர்களுக்கு இயன்ற அளவுக்கு உதவிகளை செய்வோம். மேலும் மக்கள் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தாலும் நாங்கள் அவர்களை பாதுகாப்போம். உதவிகள் செய்வோம். எந்த அளவிற்கு என்றால், மக்களுடைய கட்டாயம், ஆதிக்கம் மற்றும் குழப்பம் எந்த அளவிற்கு உயர்ந்தாலும் சரி; ஆயினும், ஒருவேளை அது எம்முடைய சக்திக்கு அப்பால் தடுக்கவோ நிறுத்தவோ முடியவில்லை என்றால் பின்னர் நாங்கள் உங்களிடம் கூறிவிடுவோம். நீங்கள் உங்களுக்கான ஏற்பாடுகளை செய்து கொள்ளுங்கள் என்று கூறிவிடுவோம். அவ்வாறான சூழல் உருவாகாத வரை நாங்கள் உங்களுக்கு உதவி செய்வதற்காக எப்போதும் தயாராக இருப்போம்.

கவர்னரை சந்தித்தது அல்லாஹ்வின் அருளினால் மிகவும் வெற்றிகரமாக இருந்தது. தப்லீக்கும் செய்யப்பட்டது. எதிர்காலத்திற்கான வழிகளும் திறந்தன.

சிறிய கவர்னர் அவர்கள் ஹஸ்ரத் ஸாஹிப் (ரலி) அவர்களிடம் சுயமே நூல்களை வேண்டினார். ஆனால், நூல்கள் அன்னாரிடம் அப்போது கைவசம் இருந்திருக்கவில்லை. மேலும் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற நூலின் அரபி பிரதி மட்டுமே கைவசம் இருந்தது. எனவே அந்த ஒரு புத்தகமும் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இருப்பினும், அவர் வேல்ஸ் அரசருக்கு அன்பளிப்பு என்ற நூலைக் குறித்து செவியுற்று அதில் தமது விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார். ஏனெனில், அன்னாருடைய வேல்ஸ் அரசருக்கு அன்பளிப்பு என்ற நூல் தொடர்பாக ஹஸ்ரத் அக்தஸ் (ரலி) அவர்களிடமிருந்து கேட்டறிந்திருந்தார். இதன் காரணமாக அதை படிக்க வேண்டும் என்று அவருக்கு அதிக ஆர்வம் ஏற்பட்டிருந்தது.

ஆனால், அது ஆங்கில மொழியில் உள்ளது என்று ஹுஸூர் (ரலி) கூறியபோது அவருக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டது. எனினும், அவர் உடனடியாக கூறினார்:

இல்லை ; அதனை எனக்கு கண்டிப்பாக அனுப்பி வையுங்கள் ; நான் என்னுடைய மகளுக்கு கொடுப்பேன். அவர் ஆங்கிலம் அறிந்திருக்கின்றார். எனவே வேல்ஸ் அரசருக்கு அன்பளிப்பு என்ற நூலும் வழங்கப்பட்டு விட்டது. ஒரே நேரத்தில் இரண்டு அற்புதம் என்ற கூற்றிற்கு ஏற்ப மகளுக்கும் ஒரு சந்தர்ப்பத்தை அல்லாஹ் வழங்கியுள்ளான். சிறிய கவர்னர் உடைய பெயர் ஹக்கி பே அல்லது ஹக்கீ பேக் ஆகும்.

அவரும் முபல்லிஃக் மார்களை அனுப்புவது மற்றும் இஸ்லாமியப் பிரச்சாரத்தை தொடர்வது குறித்தும் மகிழ்ச்சியுடன் அனுமதி நல்கிவிட்டார். மேலும் உதவி செய்வதற்கான வாக்குறுதியையும் வழங்கியிருந்தார். இது தவிர, ஹுஸூர் (ரலி) அவர்கள் பிரெஞ்சு அதிகாரிகளையும் சந்தித்தார்கள். அவருடன் சந்திப்பு இறைவனின் அருளினால் மிகவும் வெற்றிகரமாக நிகழ்ந்தது.

(தஃவ்ரா யூரப், பக்கம் 74 -76)

ஹுஸூர் (ரலி) அவர்கள் இத்தாலியின் பிரதமர் முசோலினியை சந்தித்தார்கள். அவரிடம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நோக்கம் மற்றும் காரணத்தை முன்வைத்தார்கள். முசோலினி அன்னாரிடம் மிகவும் கண்ணியத்துடன் நடந்து கொண்டார்.

**போப் உடன் நிகழ்ந்த சந்திப்பு பற்றி கூறுகின்றார்கள்:**

1924-ம் ஆண்டு ஐரோப்பா சென்றபோது ரோமிலும் நான் தங்கினேன். அங்கு நான் போப் அவர்களுக்கு இவ்வாறு எழுதினேன்: நீங்கள் கிறிஸ்துவத்தின் வீரர் ஆவீர்கள்; நான் இஸ்லாத்தினுடைய வீரர் ஆவேன். ஆகையால் எனக்கு சந்திப்பதற்கான வாய்ப்பை வழங்குங்கள். இதன் மூலமாக இஸ்லாம் மற்றும் கிறிஸ்துவம் தொடர்பாக நாம் நேருக்கு நேர் உரையாட முடியும்.

இதற்கு பதிலாக போப் அவர்களுடைய செகரட்டரி தரப்பலிருந்து ஒரு கடிதம் எனக்கு கிடைத்தது. அதில் போப் அவர்களின் உடல்நிலை சரியில்லை; ஆகையால் அவரை சந்திக்க முடியாது என்று கூறப்பட்டிருந்தது.

அந்த நாட்களில் இத்தாலியுடைய ஒரு பத்திரிகையின்

---

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

---

ஆசிரியர்; அவர் சோஸியலிஸ்ட் ஆக இருந்தார். என்னை சந்திப்பதற்காக வந்தார். அது எவ்வாறான பத்திரிகையாக இருந்தது என்றால், அது தினமும் 12 மில்லியன் பிரதிகளை வெளியிடுகின்றது. அவர் என்னிடம் கூறினார்:

நீங்கள் இங்கு முதன்முறை வந்திருக்கின்றீர்கள்; இது மிகவும் நல்ல சந்தர்ப்பமாகும். நீங்கள் போப் அவர்களை சந்திப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளுங்கள். இதன் மூலம் எங்களுக்கு முஸ்லிம்களுடைய தலைவரின் சிந்தனைகளை கேட்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்து விடும். மேலும் அதற்கு எதிராக கிறிஸ்துவர்களுடைய தலைவருடைய சிந்தனைகளை கேட்பதற்கான சந்தர்ப்பமும் கிடைத்து விடும்.

அதற்கு நான் கூறினேன்; நான் அவரை சந்திப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு விட்டேன். ஆனால், அவருடைய செகரட்டரியிடம் இருந்து பதில் வந்துள்ளது. அதாவது போப் அவர்களுடைய உடல்நிலை சரியில்லை என்று பதில் வந்துள்ளது.

அதற்கு அவர் கூறினார்: நீங்கள் மேலும் ஒருமுறை எனக்காக எழுதுங்கள் என்றார். நான் கூறினேன். இதற்கு அர்த்தம் என்னவென்றால், நீங்கள் என்னை இழிவுபடுத்த விரும்புகின்றீர்கள் என்பதாகும். ஏனெனில், அவர் சந்திப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்கவில்லை. அப்போது, அவர் கூறினார்: எங்களுடைய பார்வையில் இதனால் உங்களுடைய கண்ணியம் உயருமே தவிர குறையாது; நான் அவர் கூறிய காரணத்தினால் பிறகு மீண்டும் கடிதம் எழுதினேன். இதற்கு பதிலாக அவருடைய சீஃப் செகரட்டரி சார்பாக கடிதம் கிடைத்தது. போப் அவர்களின் மாளிகையில் இன்றைய நாட்களில் பராமரிப்புப் பணி நடைபெற்று வருகின்றது. ஆகையால் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், அவரை சந்திக்க முடியாது. இரண்டு நாட்களுக்குப் பிறகு அதே எடிட்டர் சந்திப்பதற்காக வந்தார். அவர் வினவினார்; போப் சார்பாக ஏதாவது பதில் வந்ததா? என்று என்னிடம் கேட்டார். நான் ஆம்! மேலும் அவர் இந்த பதிலை வழங்கியிருக்கின்றார் என்று கூறி அதனைப் படிக்கச் சொன்னேன். அதை படித்த உடன் அவருக்கு மிகவும் கோபம் வந்தது. மேலும் ,என்னுடைய பத்திரிகையில் இது தொடர்பாக செய்தி வெளியிடுவேன் என்று கூறினார்.

ஆக, மறுநாள் பத்திரிகையில் அச்சிடப்பட்டிருந்தது. அதில் அவர் ஒரு மிக நீண்ட கட்டுரையை இவ்வாறு எழுதியிருந்தார்;

அதாவது இங்கு இன்றைய நாட்களில் முஸ்லிம்களுடைய ஒரு மிகப் பெரிய தலைவர் வந்திருக்கின்றார். அவர் போப் அவர்களுக்கு கடிதம் இவ்வாறு எழுதியுள்ளார்: நான் தங்களை சந்திக்க விரும்புகிறேன் ; எனக்கு சந்திப்பிற்கான வாய்ப்பு வழங்குங்கள்; இதன் மூலமாக இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் தொடர்பாக நாம் இருவரும் கலந்துரையாட முடியும்.

மேலும் ஒருவேளை சந்திப்பு நிகழ்ந்திருந்தது என்றால் நம்முடைய தலைவர் நம்முடைய மார்க்கம் தொடர்பாக எந்த அளவிற்கு தெரிந்து இருக்கிறார்? ; மேலும் முஸ்லிம்களுடைய தலைவர் அவரது மார்க்கத்தைக் குறித்து எந்த அளவிற்கு அறிந்து இருக்கின்றார்? என்று அறிந்து கொள்வதற்கு இந்த சந்தர்ப்பம் மிக நல்ல சந்தர்ப்பமாக இருந்தது என்று நாம் கருதுகின்றாம். ஆனால், போப் அவர்களுடைய சீஃப் செகரட்டரி இதற்கு பதில் அளிக்கும்போது, போப் அவர்களின் மாளிகை இன்றைய நாட்களில் பராமரிப்பு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகையால் சந்திக்க முடியாது என்று கூறியுள்ளார். இதற்கு பிறகு, "இனி போப் அவர்களின் மாளிகையில் மறுமை வரை பராமரிப்பு பணி நடைபெற்று வரும் என்று நாங்கள் நம்புகிறோம்'' என்று வஞ்சப் புகழ்ச்சியாக அவர் எழுதினார்.

(குத்பா பேருரை 23 ஆகஸ்ட், 1957)

**8. இஸ்லாம் அஹ்மதிய்யத் மிகப் பெரும் அளவில் பரவுதல்**

"நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன்'' என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஓர் இல்ஹாம் ஆகும்.ஐரோப்பா சுற்றுப் பயணத்தின் தருணத்தில் இந்த அருளுக்குரிய இறை வெளிப்பாடு முழுமை அடைந்ததன் காட்சிகளை அல்லாஹ் பத்திரிகை மற்றும் மீடியாக்கள் மூலமாக காண்பித்தான். டமாஸ்கஸின் பத்திரிகை மூலமாக இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் பரப்புரை அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

டமாஸ்கஸில் எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் மிகப் பெரிய அளவில் வெற்றி கிடைத்தது. பத்திரிகைகள் மிக நீண்ட நெடிய அறிமுகக் கட்டுரைகளை வெளியிட்டன. டமாஸ்கஸின் கல்வியறிவு படைத்த மக்கள் மிகவும் ஆர்வம் காட்டினார்கள். நம்முடைய கொள்கை தொடர்பாக எந்த பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தனவோ அவை வேகமாக விற்பனையானது. (தாரீகே அஹ்மதிய்யத், பாகம் 4, பக்கம் 443)

**பிரிட்டானியா பிரஸ்ஸில் சர்ச்சை**

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஐரோப்பா பயணத்திற்காக புறப்பட்ட நாளன்றே இங்கிலாந்து பத்திரிகைகளில் அன்னாருடைய வருகை தொடர்பான செய்திகள் வெளி வர ஆரம்பித்து விட்டன. இருப்பினும், லண்டன் வந்தடைந்த உடன் புகைப்படங்களுடன் செய்திகளை வெளியிடும் பத்திரிகைகளும் எந்த அளவிற்கு அன்னாருடைய புகைப்படங்களையும், செய்திகளையும் வெளியிட்டன என்றால் ஒரு காழ்ப்புணர்ச்சி கொண்ட ரோமன் கத்தோலிக்க பத்திரிகைக்கு இவ்வாறு எழுத வேண்டியது வந்தது.

அதாவது அனைத்து இங்கிலாந்து பத்திரிகைகளும் ஒரு சூழ்ச்சிக்கு இரையாகி இருக்கின்றன. மேலும் பல மக்கள் வெளிப்படையாக கூற ஆரம்பித்தார்கள். பத்திரிகைகள் இவருக்கு தந்த இந்த அளவிலான முக்கியத்துவத்தையும் பிரபல்யத்தையும், லண்டன் வருகின்ற எந்த பெரிய லார்ட்டுக்கும் வழங்கியதில்லை. பத்திரிகைகள் மட்டுமல்லாமல் திரைப்படங்களிலும் அன்னார் மற்றும் அன்னாருடைய தோழர்களுடைய புகைப்படங்கள் காட்டப்பட்டன. இவ்வாறு இறைவன் இங்கிலாந்தில் ஒரு புறம் இருந்து மறுபுறம் வரை அன்னாருடைய பிரபல்யத்தை ஏற்படுத்துவதற்கான காரணிகளை உருவாக்கினான்.

(தாரீகே அஹ்மதிய்யத், பாகம் 4, பக்கம் 446)

ஹஸ்ரத் பாயி அப்துர் ரஹ்மான் ஸாஹிப் காதியானி (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

பத்திரிகைகளும் எழுதுகின்றன. மேலும் நிறைய புகழாரச் சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த காழ்ப்புணர்ச்சி கொண்ட கிறிஸ்துவ பத்திரிகைகளின் எழுதுகோல்களிலிருந்து இஸ்லாத்தின் புகழாரம் போன்ற ஒரு சொல் வெளிப்படுவது என்பது மிகப் பெரிய விஷயமாகும். இதற்கு அர்த்தம் என்னவென்றால், அவர்கள் தங்களுடைய சிந்தனைகள் மற்றும் தங்களுடைய மார்க்கத்திற்கு எதிராக வேறு ஒரு மார்க்கத்தின் உண்மைத்துவத்தின் தாக்கத்தால் நிர்பந்தத்திற்குள்ளாகியும், மேலும் அதற்கு முன்பு தமது தலைகளை தாழ்த்தியே இதனை எழுதியுள்ளனர். இல்லையென்றால் எவர் தான் தன்னுடைய மார்க்கத்திற்கு எதிராக மற்ற மார்க்கத்தை புகழ்ந்து உயர்வாக கூறுவார்?

இவ்வாறு ஹுஸுர் (ரலி) அவர்களின் இந்த அருளுக்குரிய மற்றும் வரலாற்று சிறப்பு மிக்க பயணம் 12 ஜுலை 1924-ம் ஆண்டில் ஆரம்பமானது. மேலும் 24 நவம்பர் 1924-ல் நல்ல முறையில் நிறைவு பெற்றது.இது இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் உண்மைக்கு சான்றாகும். தமிழாக்கம்

மவ்லவி ஷஹாபுதீன்

* * * * *

**“இது எப்படிப்பட்ட ஒரு மகத்துவமான பணி என்றால் அதன் நற்கனிகள் தலைமுறை தலைமுறையாக உருவாகிக் கொண்டே இருக்கும். மேலும் வரலாறுகள் அதன் நினைவுகளை எப்போதும் உயிர்ப்பித்துக் கொண்டே இருக்கும். அந்த பள்ளிவாசல் எப்படிப்பட்ட ஒரு மையப் புள்ளியாக இருக்கும் என்றால் அதிலிருந்து ஒளியின் கதிர்கள் வெளிவந்து முழு இங்கிலாந்தையும் ஒளிமயமாக்கி விடும்”**

## லண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசல் அடிக்கல் நாட்டுதல் & கட்டுமானப் பணி மற்றும் திறப்பு விழா

**(எழுத்து: மவ்லவி மன்ஸூர் அஹ்மத் மஸ்ரூர்)**

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஜனவரி 6, 1920-ம் ஆண்டு திங்கட்கிழமை அன்று ஜமாஅத் சகோதரர்களின் பெயரில் ஒரு தூதுச் செய்தியை ஒரு கடிதம் மூலமாக வழங்கினார்கள். அதில் அன்னார்(ரலி) லண்டனில் ஒரு பள்ளிவாசல் கட்டப்படுவதன் முக்கியத்துவம் மற்றும் அவசியத்தை முன்னிலைப்படுத்தியவாறு அதற்காக 30,000 ரூபாய்த் திரட்டுவதற்கான திட்டத்தை அறிவித்தார்கள். இதற்காக காதியான் ஜமாஅத் சார்பாக மட்டும் 12 ஆயிரம் ரூபாய் சந்தாவாக வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறாக குர்தாஸ்பூர் அமிர்தசரஸ் லாஹூர் போன்ற ஜமாஅத்துகளிலிருந்து 30 ஆயிரம் ரூபாய் ஒன்று திரண்டு விடும் என்பதை கருத்தில் கொண்டவாறு ஏனைய ஜமாஅத்துகள் இதன் நன்மையிலிருந்து விலகி விடக் கூடாது என்பதற்காக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் முப்பதாயிரத்திற்கு பகரமாக ஒரு லட்சம் ரூபாயை திரட்டுவதற்கான அறிவிப்பை செய்தார்கள். அல்லாஹ்வின் செயல் எவ்வாறாக இருந்தது என்றால், அவன் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு 1924-ம் ஆண்டு ஐரோப்பாவில் குறிப்பாக லண்டனுக்கு பயணத்தை மேற்கொள்வதற்கான பாக்கியத்தை வழங்கினான். இது தொன்று தொட்டு விதிக்கப்பட்ட ஒன்றுதான். அதாவது மஸீஹூனுடைய கலீஃபா மஸீஹின் பிரதிநிதியாக ஐரோப்பா மற்றும் சிரியா நாட்டிற்கான பயணத்தை மேற்கொள்ள வேண்டும்; மேலும் அன்னார் (ரலி) தொடர்பான எண்ணற்ற முன்னறிவிப்புகள் இதன் மூலம் நிறைவேற வேண்டும் என்பது நிச்சயிக்கப்பட்ட விஷயமாகும். அவ்வாறே எல்லாம் வல்ல அல்லாஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கரங்களினாலேயே ஃபஸ்ல் பள்ளிவாசலின் அடிக்கல்லை நாட்ட செய்தான். ஜனவரி 6, 1920-ம் ஆண்டு ஹுஸூர் (ரலி) அவர்கள் ஃபஸ்ல் பள்ளிவாசலின் சந்தாவிற்காக அறிவித்த வரலாற்று சிறப்பு மிக்க அந்த தூதுச் செய்தியானது ஜனவரி 22 1920ல் காதியான் தாருல் அமானில் வெளிவந்த அல்ஃபஸ்ல் பத்திரிகையில் காணக் கிடைக்கின்றது.

ஜனவரி 9, வெள்ளிக்கிழமை அன்று இதே தலைப்பில் ஹுஸூர் (ரலி) அவர்கள் ஜுமுஆ உரை நிகழ்த்தினார்கள். மேலும் ஜமாஅத் சகோதரர்களுக்கு லண்டனில் பள்ளிவாசல் கட்டுவதன் முக்கியத்துவம் மற்றும் அவசியம் தொடர்பாக விளக்கமாக கூறினார்கள். மேலும் அதற்காக அன்னார் (ரலி) சந்தா தொடர்பாகவும் வலியுறுத்தினார்கள். அந்த குத்பாவிலிருந்து சில மேற்கோள்களையும் நாம் இங்கு சமர்ப்பிக்கின்றோம். குத்பாவின் ஆரம்பத்தில் ஹுஸூர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் அருளினாலும் அவன் அருளிய நற்பேறினாலும் குறிப்பாக அன்பர்கள் அறிந்தது போன்று லண்டனிலோ அல்லது லண்டனின் அருகாமையிலோ ஒரு பள்ளிவாசலைக் கட்ட வேண்டும் என்பது நம்முடைய நோக்கமாகும். இது தொடர்பாக இன்றிலிருந்து மூன்று நாட்களுக்கு முன்பு மக்ரிப் தொழுகைக்குப் பிறகு நான் காதியானில் அறிவித்திருந்தேன். அதன் பிறகு நேற்று முன்தினம் நான் அனைத்து நண்பர்களுக்கும் முறையாக அனைவரையும் ஒன்று கூட்டி இத்திட்டத்தை அறிவித்திருந்தேன். வெள்ளிக்கிழமை அன்று அருகாமையில் உள்ள அஹ்மதி சகோதரர்கள் ஜுமுஆவில் கலந்து கொள்வதற்காக வருகை தருவார்கள் . எனவே தான் அவர்கள் அறிந்து கொள்வதற்காகவும், மேலும் இதற்கு முன்பு யார் இதைப் பற்றி கேட்டிருக்கவில்லையோ அல்லது கேட்ட பிறகும் அதன் தொடர்பாக முழுமையாக அறிந்திருக்கவில்லையோ அல்லது முழுமையாக அறிந்திருந்தும் கவனம் செலுத்தாமல் இருக்கின்றார்களோ அல்லது கவனம் செலுத்தியிருந்தாலும் எந்த அளவிற்கு இந்த பணியின் முக்கியத்துவம் கருதி இதன் பக்கம் கவனம் செலுத்தியிருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு கவனம் செலுத்தாமல் இருக்கின்றார்களோ அப்படிப்பட்ட அனைத்து நபர்களுக்காகவும் இன்று நான் ஜுமுஆவில் இது தொடர்பாக சில விஷயங்களின் பக்கம் கவனமூட்ட விரும்புகிறேன்.

மேலும் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் (பள்ளிவாசல் கட்டுமானத்திற்கான சந்தா வசூல் செய்யும்) இத்திட்டத்தை முதலில் இங்குள்ள (அதாவது காதியானில்) அன்பர்களுக்கு முன்னால் எடுத்து வைத்தேன். அதன் அடிப்படையில் தற்போது வரை 11 ஆயிரம் ரூபாய் சந்தா வந்து விட்டது. முழு உலகில் உள்ள அஹ்மதிகளுக்காக எந்த அளவிற்கு சந்தா நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ அதில் மூன்றில் ஒரு பங்கை காதியான் செலுத்தி விட்டது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். மேலும் தலைமையக ஜமாஅத் மாசற்ற அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதில் பின் தங்கியிருக்கவில்லை என்பதை நிரூபிக்கின்ற ஒரு விஷயமாகும். மேலும் எந்த ஜமாஅத்துகள் வலுவாக நிலை பெறக் கூடியதாக திகழுமோ அவர்களின் தலைமையகங்களில் மாசற்ற பற்று இருக்கும் என்பது ஓர் அடிப்படை விஷயமாகும். மேலும் மாசற்ற பற்று தலைமையகத்திலிருந்தே வெளிவருகின்றது.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

என்னுடைய நம்பிக்கை என்னவென்றால், இந்த பணி இறைவனின் விருப்பத்தின் கீழ் நடைபெறுகிறது என்பதில் எந்தவொரு ஐயமுமில்லை என்பதாகும். எனக்கு இன்று வரை மூன்று முக்கியமான விஷயங்கள் தொடர்பாக எல்லாம் வல்ல இறைவனின் கனவு காட்சிகள் காட்டப்பட்டுள்ளன. மூன்றாவது முறை இன்று எனக்கு இந்த இறை காட்சிகள் தென்பட்டன. அதிலிருந்து இந்தப் பணி ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது என்று நான் நம்புகிறேன். எனது நினைவின் அடிப்படையில் அந்தக் காட்சி இதுவேயாகும். அதாவது நான் லண்டன் பள்ளிவாசல் தொடர்பான விவகாரத்தை இறைவனுக்கு முன்னால் சமர்ப்பித்தேன். நான் அல்லாஹ்விற்கு முன்பாக இரண்டு கால்களையும் மடக்கியவாறு அமர்ந்திருந்தேன். அப்போது, ஜமாஅத் தீவிரமாக பணியை மேற்கொள்ள வேண்டும்; கேளிக்கையாக அல்ல என்று இறைவன் கூறினான்.

தீவிரம் என்ற வார்த்தை

எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. அதற்கு எதிர்மறையான கேளிக்கை என்ற வார்த்தை அத்தருணமே என் உள்ளத்தில் தோன்றியது. இதன் பொருள் என்னவென்றால், ஜமாஅத் இப்பணியை கேளிக்கையாகவும், வெறும் பகட்டிற்காகவும் முயற்சி செய்யாமல் மிகவும் தீவிரமாகவும் நல்லெண்ணத்துடனும் மேற்கொள்ள வேண்டும். மேலும் பாசாங்கையும், பிறருக்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தையும் முற்றிலுமாக உள்ளத்தில் இருந்து வெளியேற்றி விடுங்கள்.

எனவே ஜமாஅத்தில் உள்ள அனைத்து சகோதரர்களும் தங்களுடைய எண்ணங்களை தூய்மைப்படுத்திக் கொள்ளுங்கள். எல்லாம் வல்ல இறைவனின் இந்த பணியை வீணாக்காமல் இதன் நற்பலன்களை வெளிப்படுத்த வேண்டும் என்றும் துஆ செய்யுங்கள். மேலும் இவ்வாறு துஆ செய்யுங்கள்.

இறைவா! இந்த பள்ளிவாசல் உன்னை வணங்குவதற்காகவே அங்கீகரிக்கப்பட்ட இடமாக திகழ வேண்டும். உலகத்தின் கவனம் இதன் பக்கம் திரும்பட்டுமாக! மேலும் மக்களிடத்தில் இதன் மூலம் இஸ்லாம் பரவட்டுமாக. இதற்கான நம்முடைய முயற்சிகள் வீணாகாமல் இருக்கட்டுமாக! செங்கலால் மட்டும் கட்டப்பட்ட ஒரு கட்டிடமாக இது விளங்கக் கூடாது.

மேலும் இவ்வாறு துஆ செய்யுங்கள். இறைவா! எங்களுடைய எண்ணங்களை சீர்படுத்துவாயாக! மேலும் உனக்காகவே இந்த பணியை அதன் எல்லை வரை எட்ட வைப்பதற்காகவும் இஸ்லாத்தை அதன் உச்சத்தை அடைய செய்வதற்காகவும், நீ எங்களுக்கு தைரியத்தை வழங்குவாயாக! மேலும் இஸ்லாம் உலகத்தில் பரவுவதை நாங்கள் காண வேண்டும். ஆமீன்; சும்ம ஆமீன்!

(அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான் ஜனவரி 22, 1920)

தற்போது பள்ளிவாசலிற்கான அடிக்கல் நாட்டுதல் கட்டுமான பணி மற்றும் திறப்பு விழாவின் செய்திகளை அல்ஃபஸ்லில் இருந்து ஒன்றன் பின் ஒன்றாக காண்போம்.

**அடிக்கல் நாட்டுவதற்கான தீர்மானம்**

லண்டனிலிருந்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மவ்லானா ஷேர் அலி ஸாஹிப் (ரலி) அவர்களின் பெயரில் அனுப்பிய தந்தி கிடைத்தது. அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது:

பட்னி எனும் இடத்தில் பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது பெர்லின் ஃபண்டிலிருந்து இதற்கான தொகை கடன் வாங்கப்பட்டுள்ளது. எந்த நோக்கங்களுக்காக எல்லாம் வல்ல இறைவன் என்னை இந்த நாடுகளுக்கு அனுப்பியுள்ளானோ அதில் ஒன்று லண்டனில் பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டுவதும் அடங்கும் என்று நான் எண்ணுகிறேன்.

(அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான் அக்டோபர் 8, 1924,பக்கம் 1)

**அக்டோபர் 19, 1924 அடிக்கல் நாட்டுவதற்கான ஆலோசனை**

அக்டோபர் 16, 1924 அன்று 12.15 மணிக்கு லண்டனிலிருந்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மவ்லானா ஷேர் அலி ஸாஹிப் (ரலி) அவர்களின் பெயரில் பின்வரும் தந்தியை அனுப்பினார்கள். அது அக்டோபர் 17, 1924 அன்று பட்டாலாவிற்கும் பின்னர் அதே நாள் காதியானிலும் வந்தடைந்தது. அதில் அன்னார் (ரலி) இவ்வாறு எழுதியிருந்தார்கள்:

அல்லாஹ்வின் அருள் மற்றும் கருணையினால் லண்டனின் முதல் பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டுவிழா அக்டோபர் 19,1924 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4 மணிக்கு நடைபெறும். அனைத்து அஹ்மதிகளிடமும் துஆவிற்காக விண்ணப்பிக்கப்படுகிறது. (அல்ஃபஸ்ல் காதியான்,தாருல் அமான் அக்டோபர் 21, 1924, பக்கம் 2)

**காதியானில் உள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் துஆ (விற்கான அறிவிப்பு)**

அல்ஃபஸ்ல் பள்ளிவாசலில் அடிக்கல் நாட்டு விழாவை முன்னிட்டு அக்டோபர் 19,1924 அன்று இரவு 9.30 மணிக்கு தாருல் அமானில் உள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் மிகவும் பயபக்தியுடனும் பணிவுடனும் துஆ செய்யப்பட்டது. (அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், அக்டோபர் 28, 1924 பக்கம் 1)

**அடிக்கல் நாட்டு விழா மற்றும் ஹூஸுர் (ரலி) அவர்களின் உரை**

''கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் பங்களிப்பு மற்றும் கருத்துகள்" என்ற இந்த தலைப்பில் அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான் பத்திரிகையின் அக்டோபர் 25,1924 தேதி இதழில் கட்டுரையில் செய்தி வெளியாகி இருந்தது. அதனை நாங்கள் சற்று சுருக்கமாக கீழே குறிப்பிடுகிறோம்:

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பின்னஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் அக்டோபர் 19, 1924 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4 மணிக்கு லண்டனின் முதல் பள்ளிவாசலுக்கான அடிக்கல்லை நாட்டினார்கள். எல்லாவற்றுக்கும் முதலாக, பள்ளிவாசலின் இமாம் அவர்கள் ஒரு சுருக்கமான வரவேற்புரையை நிகழ்த்தினார்கள். அதன் பிறகு அங்கு குழுமியிருந்த கூட்டத்தினர் அடிக்கல் நாட்டப்படும் இடத்தை நோக்கி சென்றனர். அங்கு சுருக்கமாக திருக்குர்ஆனின் திலாவத் செய்யப்பட்டது. அதன் பிறகு கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அதில் அன்னார் (ரலி) கூறினார்கள்:

பள்ளிவாசல் இறை இல்லம் ஆகும். அங்கு கொள்கை ரீதியான கருத்து வேறுபாட்டின் காரணமாக ஒருவர் மற்றவரை துன்புறுத்தல் மற்றும் வெளியேற்றுவதற்கான எந்தவோர் உரிமையும் எவருக்கும் கிடையாது. நான் அனைத்து உலகிற்கும் இவ்விஷயத்தை அறிவிக்க விரும்புகிறேன். இந்த பள்ளிவாசல் ஏக இறைவனை வணங்குவதற்காகவும், அவனை வழிபடுவதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. நாங்கள் இங்கு எந்தவொரு நபரையும் எல்லாம் வல்ல அல்லாஹ்வை வணங்குவதிலிருந்து தடுக்க மாட்டோம். ஆயினும், இந்த இறை இல்லத்தை நிர்வகிப்பதற்கு உள்ள அவசியமான விதிமுறைகள் மற்றும் கோட்பாடுகளை மீறுபவரையும், இதை பாதுகாக்கின்ற மக்களின் இறை வணக்கங்களில் தலையிடும் மக்களையும் தவிர மற்றவர்களை வெளியேற்ற மாட்டோம். அதன் பிறகு ஹூஸுர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: என்னுடைய ஈமான் மற்றும் உறுதியான நம்பிக்கை என்னவென்றால், இந்த பள்ளிவாசல் அனைத்து சண்டை சச்சரவுகளையும் விலக்கி மக்களிடம் அமைதி, அன்பு மற்றும் நன்மையை நிலை பெறச் செய்வதில் உறுதுணையாக இருக்கும். மேலும் அனைத்து கலாச்சார மற்றும் அரசியல் சண்டைகள் முடிவு பெற்று அன்பின் பொற்காலமாக மாறும் வரை அஹ்மதிய்யா ஜமாஅத் இறைவன் அருளால் அனைத்து விதமான தியாகங்களையும் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கும்.

அந்த நிகழ்ச்சியில் பல சமுதாயத்தைச் சார்ந்த வேறுபட்ட நபர்கள் இருந்தார்கள். உதாரணமாக, ஆங்கிலேயர், ஜப்பானியர், ஜெர்மன், சர்வின், செக்கஸ்லேவியா, எஸ்தோனியா, எகிப்து, அமெரிக்கா, இத்தாலி, ஹங்கேரி மற்றும் இந்தியாவில் வசிக்கக் கூடியவர்கள். மேலும் பல்வேறு மார்க்கத்தைச் சார்ந்தவர்கள்- கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பாரசீகர்கள் மற்றும் யூதர்களும் இருந்தார்கள். மழை பெய்து கொண்டிருந்தது. அவ்வாறு இருந்தும் இருநூறுக்கும் அதிகமான விருந்தினர்கள் இந்த நிகழ்ச்சியில்

கலந்து கொண்டார்கள். அவர்களில் அதிகமானோர் ஆங்கிலேயர்களாக இருந்தார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்க சில நபர்கள்; சர் அலெக்ஸாண்டர், வார்ட்ஸ் வோர்தின் மேயர், லேடி பாஸுக், மிஸ்டர் என் ஸீ சீன், டாக்டர் லீவன் மற்றும் லேடி லீவன் ஆகியோர். இவர்கள் மட்டுமின்றி மற்ற அரசாங்கங்களின் கீழ் கண்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். பேரூன் ஹயாஷீ தமது கண்ணியத்திற்குரிய மகளுடன் கலந்து கொண்டார். ஜெர்மன் நாட்டின் தூதுவர், எஸ்தோனியா மற்றும் ஸர்வியா நாட்டின் மந்திரி, செக்கஸ்லோவியாவின் பிரதிநிதி; துருக்கி, அல்பானியா, ஃபின்லாந்து ஆகிய நாடுகளின் மந்திரிகள் கடிதங்கள் மூலமாக தங்களது நல்விருப்பங்களை வெளிப்படுத்தினார்கள். இவர்களின் உடல்நலம் சரியில்லாமல் போன காரணத்தினால் நிகழ்ச்சியில் இவர்களால் கலந்து கொள்ள முடியவில்லை. இங்கிலாந்தின் மூன்று அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் தங்களது நல்விருப்பங்களை வெளிப்படுத்தியிருந்தனர். தேர்தல் பணிகளில் மும்முரமாக இருந்ததன் காரணத்தால் அவர்களால் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாமல் போனது. பிரதம மந்திரி அழைப்பை ஏற்றுக் கொண்டு, பள்ளிவாசலின் இமாம் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு நன்றி கூறியவாறு இவ்வாறு கடிதம் எழுதினார்:

நான் அன்றைய நாட்களில் லண்டனில் இருக்க மாட்டேன் என்பது மிகவும் வருத்தத்திற்குரிய விஷயமாகும். எனவே என்னால் வருகை தர இயலாது என்று கடிதம் எழுதியுள்ளார்.

தன்னுடைய உரைக்குப் பிறகு ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் 12-றக்கும் அதிகமான புகைப்படக்காரர்கள் புகைப்படம் எடுத்தார்கள். பின்னர் துஆ செய்யப்பட்டது. அதே இடத்தில், அதே நேரத்தில் வருகை தந்த அனைவருக்கும் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அடிக்கல் நாட்டியதும், (ஹஸ்ரத் மவ்லானா ஷேர் அலி ஸாஹிப் (ரலி) அவர்கள் அனுப்பியிருந்த) அன்னாரின் தந்தியை நான் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு உரத்தக் குரலில் வாசித்து காட்டினேன் (இந்த தந்தியை ஹஸ்ரத் மவ்லானா ஷேர் அலி கான் (ரலி) அவர்கள் ஜமாஅத் சார்பாக இந்த நிகழ்ச்சிக்கான வாழ்த்துக் கூறி அனுப்பி இருந்தார்கள்). அதை நான் வாசித்துக் காட்டியதும் அங்கு கூடியிருந்த மக்களிடம் எவ்வாறான ஓர் ஆர்வம் ஏற்பட்டது என்றால், மக்கள் நீண்ட நேரம் வரை அங்கேயே நின்று கொண்டிருந்தார்கள். அதில் ஏராளமான அமைச்சர்களும் கலந்து கொண்டார்கள். அவர்கள் ஹுஸூர் மற்றும் காதிம்களிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் அஹ்மதிய்யா இயக்கம் தொடர்பாக தன்னுடைய ஆழ்ந்த சுவாரஸ்யமான கருத்துகளை வெளிப்படுத்தினார்கள்.

எந்தவொரு மார்க்கமும் இந்த உரையின் ஏதாவது ஒரு பகுதியின் மீது ஆட்சேபனை செய்தாலும் அது மார்க்கம் என்று அழைக்கப்படுவதற்கு தகுதியற்றதாகி விடும்; மேலும் எழுதக் கூடிய வானவர் இந்த உரையை நித்திய வாழ்வின் மையில் தோய்த்த எழுதுகோலால் எழுதுவார் என்று வார்ட்ஸ் விர்தியின் மேயர் கூறினார்.

அடுத்து, எனக்கு இப்படிப்பட்ட ஆச்சரியமூட்டும் சிந்தனைகளைக் கொண்ட உரையை முதல் முறை கேட்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்பதை எண்ணி நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன் என்று செக்கோஸ்லேவியாவின் பிரதிநிதி கூறினார்.

(அல்ஃபஸ்ல் காதியான், தாருல் அமான், அக்டோபர் 25, 1924)

ஹுஸூர் (ரலி) அவர்கள் ஆங்கிலத்தில் கட்டுரையை வாசித்தார்கள். அந்தக் கட்டுரையின் முழுமையான உருது மொழிபெயர்ப்பை நவம்பர் 20, 1924 தேதியிட்ட அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான் பக்கம் 4-ல் பார்த்துக் கொள்ள முடியும்.

**லண்டனில் அஹ்மதிய்யா பள்ளிவாசலின் அடிக்கல் நாட்டுதல்**

இந்த தலைப்பில் அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான் நவம்பர் 15, 1924 பக்கம் 6-ல் இந்தச் செய்தி வெளியானது.

அக்டோபர் 1924 அன்று ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மாலை 4 மணிக்கு லண்டனில் அஹ்மதிய்யா பள்ளிவாசலுக்கான அடிக்கல்லை வைத்தார்கள். இது லண்டனிலோ அல்லது இங்கிலாந்திலோ மட்டும் அல்ல. மாறாக, ஐரோப்பாவிலேயே முதல் பள்ளிவாசலாக இருக்கும். இதற்கு முன்னர் ஏதாவது பள்ளிவாசல் இருந்திருக்குமேயானால் அந்த பள்ளிவாசல் எந்தவொரு முஸ்லிமாலும் கட்டப்பட்டது அல்ல. வோகிங்கில் உள்ள பள்ளிவாசலை டாக்டர் மாண்டஸ் என்பவர் ஓர் அதிசயக் காட்சி பொருளாகவே உருவாக்கினார். இன்னும் கூறுவதாயின், ஒரு பள்ளிவாசலின் தேவையை கருத்தில் கொண்டு அதனை அவர் உருவாக்கவில்லை. எவ்வாறு இருந்தபோதிலும் இந்த பள்ளிவாசல் முதல் இஸ்லாமிய பள்ளிவாசல் ஆகும். இந்த பள்ளிவாசலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டின் சொற்கள் கீழ்வருமாறு உள்ளன. இந்த கல்வெட்டை ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தமது கரங்களாலேயே எழுதியிருந்தார்கள். அதன் ஆங்கில மொழிபெயர்ப்புடன் பதிக்கப்பட்டுள்ளது.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்


نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ

قُلْ اِنَّ صَلَاتِيْ وَنُسُكِيْ وَمَحْيَايَ

وَمَمَاتِيْ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ

நீர் அவர்களிடம் கூறுவீராக! என் தொழுகையும், என் தியாகமும், என் வாழ்வும், என் மரணமும் எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்விற்கே உரியன. (6: 163)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் இந்தியா, பஞ்சாப், காதியானை தலைமையகமாகக் கொண்டு செயல்படும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமாகிய நான் இறைவனின் விருப்பத்தை பெறுவதற்காகவும், இறைவனுடைய பெயர் இங்கிலாந்தில் மேலோங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் மேலும் இங்கிலாந்தைச் சேர்ந்த மக்களும் நாம் பெற்ற அருளிலிருந்து பங்கு பெற வேண்டும் என்பதற்காகவும் இன்று ரபீவுல் அவ்வல் ஹிஜ்ரீ 1343- அன்று இந்தப் பள்ளிவாசலுக்கான அடிக்கல்லை நாட்டுகிறேன். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்த அனைத்து ஆண்கள் மற்றும் பெண்களின் இந்த அற்புதமான முயற்சியை ஏற்றுக் கொள்வாயாக என்று நான் இறைவனிடம் துஆ செய்கிறேன். மேலும் இந்த பள்ளிவாசலை நிரப்புவதற்கான வழிவகைகளை உருவாக்கி, இந்த பள்ளிவாசலை எப்போதும் நன்மை, இறையச்சம், நீதி மற்றும் அன்பு போன்ற சிந்தனைகளை பரப்புவதற்கான மையமாக ஆக்குவாயாக! ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா காத்தமுன் நபிய்யீன் (ஸல்) மற்றும் அன்னாரின் நிழலாக தோன்றிய நபியுல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்களின் ஒளி மிகுந்த கதிர்கள் இந்த நாட்டிலும்



மற்ற பிற நாடுகளிலும் பரவுவதற்கான ஆன்மிக சூரியனுக்கான பணியை மேற்கொள்ளட்டுமாக! இறைவா! அவ்வாறே செய்வாயாக!

அக்டோபர் 19,1924

(அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், நவம்பர் 15, 1924)

**பள்ளிவாசலுக்காக ஹுஸூர் (ரலி) அவர்கள் செய்த துஆ**

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் வெனிஸ், இத்தாலியில் இருந்து விமானத்தில் புறப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன் தன்னுடைய அருளுக்குரிய கரங்களால் அல்ஃபஸ்ல் பத்திரிகையில் வெளியிடுவதற்காக சில விஷயங்களை எழுதியிருந்தார்கள். அதிலிருந்து லண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசல் தொடர்பான ஒரு பத்தியை வாசகர்களுக்கு அன்பளிப்பாக சமர்ப்பிக்கிறோம்: ஹுஸூர் (ரலி) அவர்கள இவ்வாறு துஆ செய்தவாறு எழுதினார்கள்:

இறைவா! நான் எந்த பள்ளிசாலுக்கான அடிக்கல்லை லண்டனில் வைத்துள்ளேனோ அதனை அருளுக்குரியதாக நீ ஆக்குவாயாக! மேலும் இதை விரைவாக முழுமைப்படுத்துவதற்கான நற்பேறை எங்களுக்கு வழங்குவாயாக! மேலும் இதன் கட்டுமானத்திற்கான பொருட்களை அருளுக்குரிய உயர்ந்த அந்தஸ்தின் இடமாக திகழ்வதற்காக தன்னுடைய அருளால் உருவாக்குவாயாக! மக்கள் இதன் மூலம் தீமை மற்றும் அதிருப்திக்கான எந்தவொரு அம்சமும் இல்லாதவாறு உண்மையான நன்மை மற்றும் உண்மையான மனநிறைவை பெறட்டுமாக!

(அல் ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், ஏப்ரல் 30, 1925- பக்கம் 2)

**கட்டுமானத்திற்கான ஏற்பாடு**

லண்டன் பள்ளிவாசலின் கட்டுமான பணிக்கான ஆரம்ப கால ஏற்பாடுகள் துவங்கின.

(அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், ஆகஸ்ட் 13, 15 1925 பக்கம் 1)

**பள்ளிவாசலுக்கான கட்டுமானப் பணி துவங்கியது**

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருள் மற்றும் கருணையினால் லண்டனில் உள்ள அஹ்மதிய்யா பள்ளிவாசலின் கட்டுமான பணி தொடங்கியது. அதற்கான செய்தியை கீழ் வரும் சொற்களில் பத்திரிகையாளர் எழுதியுள்ளார்:

செப்டம்பர் 18, இன்று காலை லண்டனில் முதல் பள்ளிவாசலுக்கான கட்டுமான பணி சவுத் ஃபீல்டு லண்டனில் துவங்கியது. அதற்கான அடிக்கல் கடந்த இலையுதிர் காலத்தில் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அருளுக்குரிய கரங்களால் நாட்டப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் லண்டன் இமாம் மற்றும் பிற அனைத்து அஹ்மதி அன்பர்களும் தங்களுடைய கரங்களால் அரை மணி நேரம் வரை அடித்தளத்திற்கான குழியைத் தோண்டிக் கொண்டு, அத்துடன் முஹம்மத் (ஸல்) அவர்கள் மற்றும் ஸஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம்) அஜ்மயீன் ஆகியோர் செய்த அந்த சுன்னத்தான துஆக்களை ஓதிக் கொண்டே இருந்தார்கள்.

(அல்ஃபஸ்ல் காதியான், தாருல் அமான், அக்டோபர் 3, 1925, பக்கம்2)

**அஸ்திவாரம் தோண்டுவதற்கான பணி ஆரம்பிக்கப்பட்டது**

அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், அக்டோபர் 22, 24, 1925 பக்கம் 1-ல் கண்ணியத்திற்குரிய மவ்லானா அப்துர் ரஹீம் ஸாஹிப் நய்யர் சார்பாக இந்த ரிப்போர்ட் வெளியிடப்பட்டது.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருள் மற்றும் கருணையினால் செப்டம்பர் 28, 1925 ஆண்டு திங்கட்கிழமை அன்று 11 மணியளவில் லண்டன் பள்ளிவாசலின் அஸ்திவாரக் குழி தோண்டுவதற்கான பணி தொடங்கப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் பத்திரிகையாளர்களின் பிரதிநிதிகளும் இருந்தனர். பணியை துவங்குவதற்கு முன் எவர்களுக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த அருளுக்குரிய சந்தர்ப்பத்தில் கலந்து கொள்வதற்கான நற்பேறை வழங்கியிருந்தானோ அந்த நபர்களுடன் கிப்லாவை நோக்கி நின்றவாறு நான் துஆ செய்து கொண்டே இருந்தேன். அதற்கு அந்த மக்கள் ஆமீன் என்று கூறிக் கொண்டே இருந்தார்கள். அதன் பிறகு நாங்கள் எங்களுடைய கரங்களால் அஸ்திவார குழியை தோண்டுவதற்கான பணியை துவங்கினோம். நாங்கள் பூமியை தோண்டிக் கொண்டே சென்றோம். அத்துடன் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மற்றும் இஸ்மாயீல் (அலை) ஆகியோர் பைத்துல்லாஹ்வின் அடித்தளத்தை அமைக்கும் போது செய்த துஆக்களையும், மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஸ்ஜித் நபவி பள்ளிவாசலின் கட்டுமான பணியின் போது செய்த துஆக்களையும் உரத்தக் குரலில் நாங்கள் முழங்கிக் கொண்டே இருந்தோம். சில அன்பர்கள் பூமியைத் தோண்டிக் கொண்டே சென்றனர். சிலர் மண்ணை சுமந்துக் கொண்டு வேறு இடத்திற்கு எடுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தனர். மேலும் இந்த துஆவை ஓதிக் கொண்டிருந்தனர்:

هٰذَا الْحِمَالُ لَا حِمَالَ خَيْبَرْ
هٰذَا أَبَرُّ رَبَّنَا وَ أَطْهَرْ

ஃபேஷன் மற்றும் பௌதீகத்தீன் மீது பேரார்வம் கொண்ட லண்டனில் இவ்வாறு தமது கைகளில் மண்ணைத் தோண்டுவதும்,மண் சுமப்பதும் ஒரு சிறப்பான காட்சியாக இருந்தது. குறிப்பாக ஓர் ஆங்கிலேய பெண்மணியும் (திருமதி அஸீஸுத்தீன் ஸாஹிபா அவர்களும்) நாம் எவ்வாறு உரத்த குரலில் ஓசை எழுப்பினோமோ அவ்வாறே அந்தப் பெண்மணியும் ஓசையை எழுப்பினார்கள். லண்டனின் எண்ணற்ற செய்தித்தாள்கள் நாம் பணியை மேற்கொள்ளும்போது பல கோணங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை வெளியிட்டுள்ளன. மேலும் இந்த நிகழ்ச்சிகள் சில செய்தித்தாள்களில் சுருக்கமாகவும், சில செய்தித்தாள்களில் விரிவாகவும் வெளியாகியுள்ளன. எந்த நபர்கள் பள்ளிவாசலின் அஸ்திவாரம் தோண்டும் போது தங்களுடைய கரங்களால் பணியை மேற்கொண்டார்களோ அவர்களின் பெயர்கள் கீழ் வருமாறு உள்ளது:

1)ஷேக் யஃகூப் அலி ஸாஹிப் 2) ஸய்யத் வஸா ரத் ஹுஸைன் ஸாஹிப் 3. ஷேக் ஸாஹிப் 4. ஷேக் ஸஃபர் ஹக் கான் ஸாஹிப் 5. கான் அப்துர் ரஹீம் கான் காலித் ஸாஹிப் 6. மிஸ்டர் ஜிப்ரீல் மார்டின் ஸாஹிப் 7, மிஸ்டர் ஷர்ஃபுத்தீன் ஸாஹிப் 8. மிஸ்டர் அஸீஸுத்தீன் ஸாஹிப் 9. மிஸ்டர் ஹய்ரி ஹின்டன் ஸாஹிப் 10. லண்டனில் உள்ள அப்துல்லாஹ் மாலிக் ஹோட்டல் அதிபரின் மகன் அப்துல் அஸீஸ் ஸாஹிப் 11. மிஸ்டர் குந்தன் லால் ஸாஹிப் முஃப்தி ஸாஹிப் அவர்களின் காலத்தில் முஸ்லிமாகிவிட்டார்.12. மலக் குலாம் ஃபரீத் ஸாஹிப் மற்றும் 13. எளியவன் அப்துர் ரஹீம் தர்த்.

(அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், அக்டோபர் 22,24, -1924, பக்கம் 1)

**லண்டனின் முதல் பள்ளிவாசலைக் குறித்த செய்தி லண்டனின் புகழ்பெற்ற செய்தித்தாள்களில்**

அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான் பத்திரிகையின் நவம்பர் 14,1925 தேதி வெளியான இதழில்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

பக்கம் 3-ல் மேற்குறிப்பட்ட தலைப்பில் கீழ் வரும் மூன்று செய்தித்தாள்களின் பெயர்கள் வெளியாகியுள்ளன:

1) டெய்லி கிராஃபிக்(Daily Graphic)
2) டைம்ஸ் ஆஃப் லண்டன். (Times of London)`
3) டெய்லி டெலிகிராஃப்(Daily Telegraph)

ஆகிய மூன்று பத்திரிகைகளிலும் செய்திகள் வெளிவந்தன. பக்கம் குறைவாக உள்ள காரணத்தினால் நாங்கள் டெலி கிராஃப் வெளியிட்ட செய்தியை மட்டும் கீழே தருகிறோம்;

நேற்று இந்த பள்ளிவாசலின் அடித்தளம் தோண்டப்பட்டது. அப்போது அதிலிருந்து முஸ்லிம்களுடைய ஆன்மிக மகிமை வெளிப்பட்டது.மேலும் அந்த ஆன்மிகத்தின் சிறிய அற்புதம் என்னவென்றால், இறை இல்லத்தை உருவாக்குவதற்காக இந்த மக்கள் தொழிலாளிகளைப் போன்று சுயமே குழியைத் தோண்டுகிறார்கள். மண்ணை எடுக்கின்றார்கள். பிற வேலைகளையும் செய்கின்றார்கள். அந்தப் பணியை தமது கரங்களால் செய்து கொண்டிருந்த இந்திய குடிமக்கள் மட்டுமின்றி, ஓர் ஆங்கிலேயரும் அவர்களுடன் இணைந்து செய்து கொண்டிருந்தார். அவரது முதுமையை சுட்டிக் காட்டிக் கொண்டிருந்த வெள்ளை முடியுடன் அவர் மிகுந்த ஆர்வத்துடன் அவரது ஒத்த கொள்கை உடைய இந்திய சகோதரர்களுடன் இணைந்து பணிபுரிந்து கொண்டிருந்தார்.

**கட்டுமானப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது மெஹ்ராபின் சுவர்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன**

மஸ்ஜித் கட்டுமானம் என்ற தலைப்பில் அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான் பத்திரிகையின் ஜனவரி 8, 1926-ம் தேதி இதழில் பக்கம் 2-ல் கீழ்காணும் செய்தி வெளியாகியது:

பள்ளிவாசலின் கட்டுமான பணி இறைவனின் அருளால் நடந்து கொண்டிருக்கின்றது. (மெஹ்ராப் எனும்) வளைவு சுவர்களும் ஏறக்குறைய முழுமை அடைந்து விட்டது. கிழக்கு மற்றும் மேற்குப் பகுதியின் சுவர்களும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குவிமாடம் கட்டுவதற்கு பெரிய இரும்பு ராட்கள் அமைக்கப்பட்டுள்ளன. அநேகமாக மூன்றில் ஒரு பகுதி பள்ளிவாசல் கட்டப்பட்டு விட்டது. வானிலை நன்றாக இருக்குமேயானால் இறைவனின் அருளால் பிப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் கட்டுமான பணி நிறைவு பெற்று விடும் என நம்புகிறோம்.

(அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், ஜனவரி 26, 1926- பக்கம் 2)

**பள்ளிவாசல் கட்டடம் மெல்ல மெல்ல உயர்ந்து கொண்டிருக்கின்றது**

ஆலாபாத்தின் பவுனியர் எனும் ஆங்கில பத்திரிகை தனது ஜனவரி 20, 1926-ம் தேதி பதிப்பில் சண்டே எக்ஸ்பிரஸின் சான்றுடன் இவ்வாறு எழுதியது:

சவுத் ஃபீல்டின் (விம்பிள்டன் அருகாமையில்) ஒரு தோட்டத்தில் கட்டப்படுகின்ற லண்டனின் மிகப் பெரிய முதல் பள்ளிவாசல் மெல்ல மெல்ல உயர்ந்து கொண்டே செல்கின்றது. முஸ்லிம்களின் ஒரு பிரிவான அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக மார்க்க நோக்கத்திற்காக இது கட்டப்படுகின்றது. இங்கிலாந்திலுள்ள அனைத்து முஸ்லிம்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கையானது ஏறக்குறைய ஓராயிரம் நபர்களைக் கொண்டதாகும். அதில் ஆங்கிலேயே முஸ்லிம்களின் எண்ணிக்கையே அதிகம் ஆகும். பள்ளிவாசலின் இந்தக் கட்டடத்தின் கட்டமைப்பில் தொழுகையாளிகளை ஒன்று திரட்டுவதற்காக பாங்கு சொல்லக் கூடியவர் ஏறி பாங்கு சொல்வதற்கான எந்தவொரு மீனாரும் இல்லை. மாறாக பாங்கு பள்ளிவாசலின் தாழ்வாரத்தில் கொடுக்கப்படும். (அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், பிப்ரவரி 5, 1926)

**பள்ளிவாசலுக்கு கம்பளத்தாலான தரை விரிப்பு - கான் பஹாதூர் அஹ்மத் அலாவுத்தீன் நீடூழி வாழ்க**

அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான் ஜூலை 2, 1926 ன் முதல் பக்கத்தில் ஷேக் யஃகூப் ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் சார்பாக மேற்கூறப்பட்ட தலைப்பின் கீழ் இந்தச் செய்தி வெளியிடப்பட்டது:

லண்டனின் முதல் மற்றும் ஒரே பள்ளிவாசல் தற்போது முழுமையடைகின்ற தருவாயில் இருக்கின்றது. மேலும் விரைவில் அதற்கான திறப்பு விழா நடைபெற உள்ளது. லண்டன் மற்றும் ஐரோப்பாவில் இந்த பள்ளிவாசலின் ஆரவாரம் மற்றும் எதிர்பார்ப்பு எந்த அளவிற்கு இருக்கிறது? என்றால் இருபதுக்கும் மேற்பட்ட செய்தித்தாள்களில் எண்ணற்ற முறை அதன் பலவிதமான புகைப்படங்கள் மற்றும் அது தொடர்பான முக்கியமான விஷயங்களை வெளியிட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். வெளிநாடுகளிலிருந்து வருகை தருகின்ற பத்திரிகை நிருபர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் மீது ஒரு குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படுகின்றது. திரித்துவத்தின் உருவ வழிபாட்டிலும், உலகின் பொருளாதார மையத்தின் சூழலிலும் இது இறைவனின் முதல் இல்லம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அது இஸ்லாத்தின் மகத்துவத்தையும், பெருமையையும், பொழிவையும் வெளிப்படுத்தக் கூடிய மையமாகத் திகழும்!

ஜனாப் சேட் அஹ்மத் அலாவுதீன் ஸாஹிப் அவர்களுக்கு பள்ளிவாசல் முழுமையடைந்ததற்கான தகவலை அனுப்பியவாறு நான் பள்ளிவாசலுக்குரிய கம்பளத்தாலான தரைவிரிப்பை அவர் சார்பாக வழங்குமாறு விண்ணப்பித்தேன். சேட் ஸாஹிப் நன்மை, நற்பணிகளுக்காக தமது உள்ளம் மற்றும் கரத்தை எப்பொழுதும் திறந்தே வைப்பதற்கான நற்பேறை பெற்றிருந்தார்கள். அவர்கள் என்னுடைய இந்த கோரிக்கையை படித்த உடன் தந்தி மூலம் லண்டன் பள்ளிவாசலுக்காக அவர்கள் நூறு பவுண்ட்களை கம்பளத்தாலான தரைவிரிப்பிற்காக வழங்குவதாக தகவல் அனுப்பியிருந்தார்கள். இந்த தளத்திற்கு மிகவும் விலையுயர்ந்த தரை விரிப்புகள் மற்றும் கம்பளங்கள் வரலாம். ஆனால், சேட் அஹ்மத் அலாஹுத்தீன் வழங்கிய விரிப்பிற்கு உள்ள அந்த கண்ணியம் அவைகளுக்கு கிடையாது. பள்ளிவாசலின் மின்விளக்கிற்காக ஹைதராபாத் ஜமாஅத் ஒரு வருடத்திற்கான செலவுகளை வழங்கியுள்ளது. எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த அனைத்து அன்பர்களின் உள்ளங்களிலும், அவர்களின் இல்லங்களிலும் தன்னுடைய ஒளியைக் கொண்டு ஒளிமயமாக்குவானாக! ஆமீன்

(அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், ஜூலை 2, 1926, பக்கம் 1)

**கட்டுமானப் பணி முழுமை அடைந்து விட்டது**

அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், அக்டோபர் 8, 1926 தேதி இதழின் இரண்டாம் பக்கத்தில் இந்த செய்தி வெளிவந்தது:

இது லண்டனில் உள்ள முதல் பள்ளிவாசல் ஆகும். இந்த பள்ளிவாசல் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தின் வடிவில் வெளிப்பட்ட மகிழ்ச்சியாகும். அந்த பள்ளிவாசலுக்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அருளுக்குரிய கரங்களால் 1924ம் ஆண்டு, அக்டோபர் மாதம் அடிக்கல் நாட்டப்பட்டது என்ற பெருமையினால் தனித்துவம் பெற்றிருக்கின்றது. அந்தப் பள்ளிவாசல் நல்லவர்களின் ஒரு பெருங் கூட்டத்தை அடிக்கல் நாட்டுவிழாவில் ஈர்க்கக் கூடியதாக விளங்குகிறது. அல்ஹம்துலில்லாஹ்! சும்ம அல்ஹம்துலில்லாஹ்! பரிசுத்தமான இறைவனின் அருள் மற்றும் கருணையினால் இந்த பள்ளிவாசல் கட்டுமான பணி முடிவை எட்டியுள்ளது. மேலும் அந்த இறைவனின் பெயரை மேலோங்கச் செய்வதற்காகவே இந்த

பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. (அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், அக்டோபர் 8, 1926 -பக்கம் 2)

**பள்ளிவாசல் திறப்பு விழா**

அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், அக்டோபர் 12, 1926 மூன்றாம் பக்கத்தில் அல்ஃபஸ்லின் ஆசிரியர் பள்ளிவாசல் திறப்பு விழாவின் நற்செய்தியை வழங்கியவாறு இவ்வாறு எழுதுகிறார்:

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பெண்களே! அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்களே! அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முதியோர்களே! வாழ்த்துகள் உங்களுக்கு நூற்றுக்கணக்கான வாழ்த்துகள்! தங்களின் மேலான இறைவனுக்கு முன்னால் சிரம் பணியக் கூடியவர்களுக்காக இந்த பள்ளிவாசல் இன்று திறக்கப்பட்டு விட்டது. மேலும், அதற்கான திறப்பு விழா அக்டோபர் 3, 1926 ஆம் ஆண்டு மிகவும் ஆரவாரத்துடனும், பெருமையுடனும் நடைபெற்றது.

லக்னோவிலிருந்து வெளி வருகின்ற ஹம்தம் செய்தித்தாள் அக்டோபர் 7-ம் தேதி அன்று திறப்பு விழா தொடர்பான செய்தியை வெளியிட்டவாறு இவ்வாறு எழுதுகிறது:

லண்டன் அக்டோபர் 3, முஸ்லிம்களின் அஹ்மதிய்யா ஜமாஅத் நீண்ட நாட்களாக லண்டனில் தமக்கென்று மதிக்கத்தக்க தலைமையகம் நிறுவப்பட வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருந்தது. எனவே இறைவனுடைய நாட்டத்தினால் இன்று அந்த நீண்ட நாள் நம்பிக்கையானது பூர்த்தி அடைந்து விட்டது. மேலும் சவுத் ஃபீல்ட் என்ற இடத்தில் உள்ள தென்மேற்கு லண்டனில் அமைந்துள்ள பள்ளிவாசலிற்கான திறப்புவிழா அதிகமான முஸ்லிம்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிற தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு முன்னால் நடைபெற்றது.

பள்ளிவாசல் அமீர் ஃபைஸல் பின் சுல்தான் இப்னு சவூதி அவர்களின் கரங்களால் திறந்து வைக்கப்படும் என்று கடைசி நேரம் வரை நம்பிக்கை இருந்தது. ஆனால், இமாம் மவ்லானா தர்த் அவர்களின் சார்பில் பள்ளிவாசலுடைய கதவின் மீது ஒட்டப்பட்டிருந்த அந்த நோட்டீஸை வருத்தத்துடன் படித்தனர். அதில் இவ்வாறு இருந்தது: அதாவது அமீரின் தந்தையார் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதிலிருந்து அவரை தடுத்துவிட்டார். மேலும் இந்த நிகழ்ச்சி பஞ்சாப் மாநிலத்தின் முன்னாள் அமைச்சர் ஷேக் அப்துல் காதிர் ஸாஹிப் அவர்களின் கரங்களால் அரங்கேறும் என்றும் வானிலை தெளிவாக இல்லை என்றாலும் மேகம் படர்ந்திருந்தது. அவ்வப்போது ஒளிவீசக் கூடிய கதிரவனின் முகத்திரை கிழிக்கப்பட்டது. திறப்புவிழாவுக்கு சில மணி நேரங்களுக்கு முன்பு, வெள்ளை மினாராக்கள் அலங்கரிக்கப்பட்டு காட்சியளித்தது. ஷேக் அப்துல் காதர் அவர்களுக்கு முன்பாகவே அந்த இடத்தில் மகாராஜா பரத்வான் அவர்கள் வருகை தந்தார்கள். மக்கள் அவர்களை மகிழ்ச்சியுடனும் ஆரவாரத்துடனும் வரவேற்றார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா (ரலி) அவர்கள் இந்தியாவிலிருந்து கடல்வழி தந்தி மூலம் அனுப்பிய அந்த நீளமான தூதுச் செய்தியை பள்ளிவாசலின் இமாம் அவர்கள் வாசித்துக் காட்டினார்கள். அது மட்டுமல்லாமல் உலகெங்கிலும் இருந்து வந்திருந்த ஏனைய எண்ணற்ற வாழ்த்து செய்தியை வாசித்துக் காட்டினார்கள்.ஒரு தப்பெண்ணத்தின் அடிப்படையில் உருவான விஷயம்தான் அமீர் ஃபைஸல் அவர்கள் இதில் கலந்து கொள்ளாததற்கான காரணம் என்பதை பள்ளிவாசலின் இமாம் ஸாஹிப் அவர்கள் தமது ஒரு நீண்ட உரையில் விளக்கி கூறினார்கள்.

ஷேக் அப்துல் காதர் ஸாஹிப் அவர்கள் பள்ளிவாசலின் கதவை திறந்தபோது, அல்லாஹு அக்பர் என்ற தக்பீர் முழக்கம் எந்த அளவிற்கு ஒலித்தது என்றால் அது அர்ஷின் வாசல் வரை எட்டி இருக்கும். அதன் பிறகு அனைத்து மக்கள் கூட்டங்களும் பள்ளிவாசலில் நுழைந்தார்கள். அங்கு பல உரைகள் நிகழ்த்தப்பட்டன. ஷேக் அப்துல் காதர் அவர்கள் அமீர் ஃபைஸல் அவர்களின் வருகையின்மையின் மீது வருத்தத்தை வெளிப்படுத்தியவாறு கூறினார்கள்: நான் ஓர் அஹ்மதி இல்லை தான். ஆனாலும் நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் பள்ளிவாசலை திறந்து வைக்கின்றேன். மேலும் அன்னார் தன்னுடைய நீண்ட உரையில் வெகு நேரம் வரை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நற்சிறப்புகளை எடுத்துக் கூறினார்கள். மேலும் உலகில் பல பிரிவுகள் இல்லாத எந்தவொரு மார்க்கமும் இல்லை. எனவே இஸ்லாமும் இதிலிருந்து விதிவிலக்கு அல்ல.

மகாராஜா பரத்வான் அவர்கள் நான் ஒரு முஸ்லிம் இல்லை என்றாலும், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதை நான் என்னுடைய உரிமை என்று மட்டும் கருதாமல் கடமையாகவும் கருதுகிறேன் என்று கூறினார்கள்.

உரைகளுக்கு பிறகு தேநீர் அருந்தப்பட்டது. அதன் பிறகு முதல் முறையாக லண்டனில் தவ்ஹீதின் முழக்கம் ஒலித்தது. அதாவது பிலால் (ரலி) அவர்களின் பிரதிநிதியாக பாங்கு சொல்பவர் "அல்லாஹு அக்பர்" என்ற ஓசையை உயர்த்தினார்கள். மேலும் முஸ்லிம்கள் உளூ செய்து விட்டு (கீழ் வரும் கவிதை வரியில் கூறப்பட்டது போன்று நின்றார்கள்) மஹ்மூத் மற்றும் அயாஸ் ஒரே வரிசையில் நின்று விட்டார்கள். அடிமையும் இல்லை ; வேலைக்காரனும் இல்லை.

(அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், அக்டோபர் 12, 1926 பக்கம் 12)

கொல்கத்தாவின் திரையரங்குகளில் பள்ளிவாசல் திறப்பு விழா நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன.

கொல்கத்தாவைச் சேர்ந்த ஸய்யத் கரீம் பக்ஷ் அஹ்மதி சார்பாக இந்த செய்தி வெளியிடப்பட்டது:

இந்த வாரம் கல்கத்தாவின் அனைத்து பெரிய, பெரிய திரையரங்குகளிலும் லண்டனில் உள்ள அஹ்மதிய்யா பள்ளிவாசல் திறப்பு விழா காட்சி, லண்டனில் இஸ்லாம் என்ற தலைப்பில் ஒளிபரப்பப்பட்டது. அதில் கான் பஹாதுர் அப்துல் காதிர் ஸாஹிப் அவர்களின் வரவேற்பு, பள்ளிவாசலின் கதவை திறந்து வைத்தல், மக்களின் பெரும் திரள் போன்றவை காண்பிக்கப்பட்டது. நான் நேற்று இங்குள்ள குலோப் திரையங்கிற்கு சென்று இருந்தேன். அங்கு முஸ்லிம்களின் ஒரு பெரும் திரளான கூட்டம் வந்திருந்தது. பள்ளிவாசலின் திறப்பு விழா காட்சி திரையிடப்படும்போது அனைத்து முஸ்லிம்களும், மகிழ்ச்சியுடன் கரவொலிகளை எழுப்பினார்கள்.

(அல்ஃபஸ்ல் காதியான், தாருல் அமான் நவம்பர் 23, 1926 பக்கம் 2)

மாகாணத்தின் 20-க்கும் மேற்பட்ட நாளிதழ்களில் பள்ளிவாசல் திறப்பு விழாவின் செய்திகள் வெளியாகியுள்ளன. பக்கங்கள் குறைவாக இருப்பதால் அதனை விட்டுவிடுகின்றோம். விருப்பமுள்ளவர்கள் அல்ஃபஸ்ல் பத்திரிகைகளில் பார்த்துக் கொள்ளலாம்.

**லண்டனில் உள்ள அஹ்மதிய்யா பள்ளிவாசலின் பிரம்மாண்டமான திறப்பு விழா**

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

குழப்பவாதிகள் லண்டன் பள்ளிவாசல் உருவாகவே கூடாது என்று முயற்சிகள் செய்தனர். ஆனால், இறைவன் அவர்களின் முகத்தில் கரியைப் பூசுவதற்காக பள்ளிவாசலை உருவாக்குவதற்கான நற்பேறு மட்டும் வழங்கவில்லை.மாறாக எப்படிப்பட்ட ஏற்பாடுகளை உருவாக்கிக் கொடுத்தான் என்றால், பணி முழுமை அடைந்த பிறகு பிரம்மாண்டமாக அதன் திறப்பு விழாவும் நடைபெற்று விட்டது. எந்த

அளவிற்கு அது பிரம்மாண்டமாக இருந்தது என்றால், இதற்கு முன்னர் இவ்வாறு ஒருபோதும் நடந்ததில்லை என்பதை ஒவ்வொருவரும் ஆமோதித்தார்கள். 200-க்கும் மேற்பட்ட மாகாண பத்திரிகைகளில் இது தொடர்பான செய்திகள் சிறந்த சொற்களில் கூறப்பட்டிருந்தன. இந்த செய்தித்தாள்கள் இங்கிலாந்தில் உள்ளவையாகும். இது மட்டுமின்றி, மற்ற பிற நாடுகளிலிருந்து வெளிவரக் கூடிய செய்தித்தாள்களும் இருக்கின்றன. அதிலும் இதைப் பற்றிய குறிப்பு வெளியாகியுள்ளது. அதற்கான செய்திகளும் நமக்கு கிடைக்கின்றன. இவ்வாறாக தற்போது வரை குறைந்தது 20.25 கோடி மக்கள் வரை இந்தச் செய்தி சென்றடைந்துள்ளது. அதாவது லண்டனில் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. அதற்கான திறப்பு விழாவும் நடைபெற்றது. அதை அஹ்மதிய்யா ஜமாஅத் கட்டியது. அந்த ஜமாஅத்தின் இமாம் மிர்ஸா குலாம் அஹ்மத் ஸாஹிப் ஆவார்கள். அவர்களை இறைவன் மஸீஹ் மவ்வூத் மற்றும் நபியாக அனுப்பியுள்ளான். அவருடைய பணி இஸ்லாத்தை பரப்புவதாகும். உலகின் மூன்றில் ஒரு நபர் வரை இந்த விஷயம் சென்றடைந்துள்ளது. மேலும், நாம் இரண்டு கோடி ரூபாய் செலவு செய்து இருந்தாலும் இந்த அளவிற்கு பிரசித்தி பெற்றிருக்க முடியாது என்பது இங்கிலாந்தின் பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் பிற தலைவர்களுடைய கருத்தாக இருக்கின்றது. சில நபர்கள் எந்த அளவிற்கு கூறினார்கள் என்றால் இரண்டு கோடி ரூபாய் அல்ல. மாறாக, பள்ளிவாசலுக்கு செலவு செய்யப்பட்ட அந்த ரூபாய் செய்த பணியை இரண்டு கோடி பவுண்டுகள் கூட செய்திருக்க முடியாது என்று சிலர் கூறுகின்றனர். மேலும் இந்த பள்ளிவாசலின் திறப்பு விழாவின் போது பெரும், பெரும் நபர்கள் கலந்து கொண்டனர். மூன்று பிரபுக்கள், பதிமூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள், பல நாடுகளின் தூதுவர்கள், அமைச்சர்கள், நவாப் மற்றும் கண்ணியத்திற்குரிய தலைவர்கள் ஆகியோரின் ஒரு பெரும் கூட்டம் கலந்து கொண்டது; கலந்து கொண்டது மட்டுமல்லாமல் உயர் அந்தஸ்தில் இருந்த அந்த நபர்கள் மிகுந்த ஆர்வத்தை வெளிப்படுத்தினார்கள். மேலும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.ஒரு சிலர் அதில் வேலை செய்வதை பெருமைக்குரியதாக கருதி மிகுந்த மகிழ்ச்சியுடனும், விருப்பமுடனும் அனைத்துப் பணிகளிலும் பங்கு பெற்றார்கள். இந்தியாவின் பெரும், பெரும் நபர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். மகாராஜா பரத்வான் அவர்களும் கலந்து கொண்டார்கள். அவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் உரை நிகழ்த்துவதற்கான அனுமதி பெற்று தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவாறு நான் ஓர் இந்து என்ற நிலையில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதை எனது கடமையாக கருதுகிறேன் என்று கூறினார்கள். பதினோரு அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வின்போது வருகை தந்திருந்தார்கள். ஜெர்மனி, இத்தாலி, சீனா போன்ற நாடுகளின் மந்திரிகளும் கலந்து கொண்டார்கள். எனவே பள்ளிவாசலுக்காக திரட்டப்பட்ட அந்த பணம் எங்கே சென்றது? என்று கேட்பவர்களுக்கு இதுவே பதிலாகும். இதை நன்றாக கேட்டுக் கொள்ளுங்கள். அந்த பணம் இங்கு சென்றுள்ளது. (செலவிடப்பட்டுள்ளது)

(அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், நவம்பர் 9, 1926)

பள்ளிவாசலின் திறப்பு விழாவின் சந்தர்ப்பத்தின் போது ஹுஸூர் (ரலி) அவர்கள் அனுப்பிய தூதுச் செய்தியானது அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், அக்டோபர் 26, 1926-ன் 3-ம் பக்கத்தில் காணக் கிடைக்கிறது.

**முஸ்லிம்களின் பலனற்ற முயற்சிகள்**

ஹுஸூர் (ரலி) அவர்கள் இங்கிலாந்து செய்தித்தாள்களின் மகத்துவம் மற்றும் விரிவான பதிப்புரை தொடர்பாக கூறிய பிறகு இவ்வாறு கூறுகிறார்கள்:

இதுபோன்ற உயரிய அந்தஸ்தை பெற்ற செய்தித்தாள்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட பல செய்தித்தாள்களில் இந்த செய்தி வெளிவந்துள்ளது. 15 ஆண்டுகளாக முஸ்லிம்கள் முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். முஸ்லிம் ஆட்சிகள் அவர்களுக்கு உதவியாகவும் இருந்தது செல்வந்தர்கள் அதற்காக ஆயத்தமாக இருந்தார்கள். இவை எல்லாம் இருந்தாலும் கூட அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. ஒரு பள்ளிவாசலை அங்கு எழுப்ப முடியவில்லை. ஆனால், அஹ்மதிய்யா சமுதாயம் இந்தப் பணியின் சுமையை தோளில் சுமந்து கரை சேர்த்து விட்டது. ஒரு பள்ளிவாசலை நிறுவிவிட்டது. துருக்கியின் முன்னாள் அரசர் சுல்தான் அப்துல் ஹமீத், இந்தியாவின் செல்வந்தர்கள், பிற முஸ்லிம் ஆட்சியாளர்கள் மற்றும் முஸ்லிம் அமீர்கள் அனைவரும் கண்டிப்பாக லண்டனில் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட வேண்டும் என்பதில் அனைவரும் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்தார்கள். ஆனால், அவர்களிடம் எல்லா வித மூலதனமும் இருந்தும் கூட அவர்களால் பள்ளிவாசலை உருவாக்க முடியவில்லை. ஆனால், அஹ்மதிகள் இந்தப் பள்ளிவாசலை கட்ட வேண்டும் என்று எண்ணிய போது அதற்கு எந்த தாமதமும் ஏற்படவில்லை.

(அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், அக்டோபர் 26. 1926)

இறுதியில், ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அல்காமிஸ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இந்த சொற்களுடன் நான் என்னுடைய கட்டுரையை முடித்துக் கொள்கிறேன்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த பள்ளிவாசலின் உரிமையை பூர்த்தி செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக!

அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த பள்ளிவாசலின் உரிமையை நிறைவேற்றுபவர்களாக ஆகுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக. நாம் ஒவ்வொரு பள்ளிவாசலின் உரிமையையும் நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்போமாக. இந்தப் பள்ளிவாசல் மட்டும் கிடையாது. அதற்கும் மேற்பட்டு ஒவ்வோர் அஹ்மதியும் எல்லா இடத்திலும் எல்லாப் பள்ளிவாசல்களையும் நிரப்ப வேண்டும். இந்த உரிமையை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய இறை வணக்கங்களுக்கான உரிமைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக ஆவோமாக. அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்போமாக!

இஸ்லாத்தின் தப்லீஃக்கான உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்போமாக! இதற்காகத்தான் அல்லாஹ் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை அனுப்பினான். இதற்காகத்தான் இக்காலத்தில் அன்னாரின் உண்மை ஊழியரை அனுப்பினான். அதாவது, இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான காலகட்டம் மீண்டும் துவங்க வேண்டும். உலகத்தில் இஸ்லாம் மற்றும் ஏக இறைவனின் ஆட்சி நிலைபெற வேண்டும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடி உலகத்தில் பறக்க வேண்டும். ஆக, நாம் உண்மையான முறையில் அத்தகைய முஸ்லிம்கள் ஆகி விடுவோமாக! மேலான அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ பேருரை 18.10.24)

தமிழாக்கம்

மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்

* * * * * * * *

## இங்கிலாந்தில் ஆன்மிக வெற்றிகான அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் லண்டனில் இருந்து எழுதிய**

**நான்காவது கடிதம் (கடிதம் எழுதப்பட்ட நாள்: 11 செப்டம்பர், 1924)**

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சகோதரர்களுக்கு!

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்தஹூ.

அல்ஹம்துலில்லாஹ்! பணி நன்றாக நடைபெற்று கொண்டிருக்கின்றது. தப்லீஃக் சிறப்பாக நடந்து வருகின்றது. ஏனெனில், நம்முடைய அசல் பணி வேறு ஒன்றாக இருந்தாலும் ஓய்வு நேரம் கிடைக்கும்பேழுது தப்லீஃக்கின் பக்கமும் கவனம் செலுத்தப்படுகின்றது. ஜமாஅத் சகோதரர்கள் அனைவரும் தங்களுடைய பணிகளில் மும்முரமாக இருக்கின்றார்கள். சில சமயங்களில் நண்பர்களுக்கு காற்று வாங்குவதற்கு வெளியில செல்வதற்கு கூட சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. எனது நிலைமையும் இப்படித்தான் இருக்கின்றது. இரவு இரண்டு மணி வரை எனக்கோ கண் விழித்திருக்க வேண்டியது நேரிடுகின்றது.ஆயினும்,எனது உள்ளம் மகிழ்ச்சியாக உள்ளது. மரணமே வந்தாலும் இறைவழியில் நிகழும் என்று இதயம் திருப்தி கொண்டுள்ளது.

அன்பர்களே! உடல் பராமரிப்பிற்காக செலவிடப்படும் அந்த வாழ்க்கையில் என்ன பயன் இருக்கின்றது? இந்த உலகத்தில் எவரும் (நிரந்தரமாக) தங்கிவிட போவதில்லை. ஒருவர் முன்னால் இறக்கின்றார். ஒருவர் பின்னால் இறக்கின்றார்; விஷயம் ஒன்றுதான். அவ்வாறிருக்க முடிவு பெறாத அந்த வாழ்க்கையின் இன்பங்களின் பக்கம் ஏன் கவனம் செலுத்தக் கூடாது? அந்தோ! இந்த விஷயத்திற்கான உண்மையான நற்பேறு எனக்கு கிடைக்க வேண்டுமே!

**மருத்துவ ஆலோசனை**

மதிப்பிற்கும் கண்ணியத்திற்குமுரிய டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் எனது உடல் பலவீனத்தை நீக்க சில காலம் அதிகமாக தூங்க வேண்டும் என்று எனக்கு மருத்துவ ஆலோசனை வழங்கினார்கள். ஆனால், இங்கு தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று மணிக்கு தான் தூங்க வாய்ப்பு கிடைக்கின்றது என்று அன்னாருக்கு என்ன தெரியும்! மேலும், அநேகமாக எதிர்வரும் நாட்களில் வேலைப் பளு இன்னும் அதிகமாகிவிடும். ஏனெனில், இப்பொழுது இன்ஷா அல்லாஹ்! பல உரைகள் மற்றும் சந்திப்புகள் தொடர் ஆரம்பமாக இருக்கின்றன. ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக எனக்கு உருது (மொழியில்) கட்டுரை எழுத வேண்டியதுள்ளது. இதற்காக நேரம் அதிகமாக செலவாகின்றது. மனிதன் இரண்டு மணிநேரத்தில் எந்த அளவிற்கு கட்டுரை வாசிக்க முடியுமோ அதை ஆறு ஏழு நாட்களில் எழுத வேண்டியது வரும். எனவே இந்த கஷ்டத்தின் காரணமாக பணி அதிகமாகின்றது.

**சொற்பொழிவு நிகழ்ச்சிகள்**

இறைவன் நாடினால் மூன்றாம் தேதி இறை செய்தி என்ற தலைப்பில் போர்ட் ஸ்மித் என்ற நகரில் சொற்பொழிவு நடைபெறும். இதன் பிறகு 19-ம் தேதி 5 நாட்கள் லண்டனில் "மரணத்திற்கு பின் உள்ள வாழ்க்கை'' என்ற தலைப்பில் சொற்பொழிவு நடைபெறும். இங்கு வருகை தர தூண்டுதலாக அமைந்த அந்த கான்ஃபிரன்ஸில் 23-ம் தேதி சொற்பொழிவு நடைபெறும். ஒரு அரசியல் சங்கத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் ''இந்தியாவின் தற்போதைய நிலைமை" என்ற தலைப்பில் 26-ம் தேதி சொற்பொழிவு நடைபெறும். பிறகு ஓர் இளைஞர் சங்கத்தில் "ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு" என்ற தலைப்பில் 29-ம் தேதி சொற்பொழிவு நடைபெறும். இன்ஷா அல்லாஹ்!

**தோழர்களை பல இடங்களுக்கு அனுப்பி வைத்தல்**

என்னுடைய விருப்பம் என்னவெனில், பணியை அதிகமாக விரிவுபடுத்த பல தோழர்களை இங்கிலாந்தின் பல நகரங்களில் பரப்பி விட வேண்டும். இதற்கு சற்று அதிகமாக செலவாகும். ஆனால் இன்ஷா அல்லாஹ் பணி மிகவும் விரிவடைந்து விடும். (நமது) சப்தம் நீண்ட தூரம் வரை பரவி விடும்.

**எதிரியின் நகைப்பும் ஏளனமும்**

எதிரி நகைப்பான்; ஏளனம் செய்வான் என்றாலும், அவனுடைய சிரிப்பை பொருட்படுத்தாமல் இறைவனுடைய அருளினால் இங்கிலாந்தில் ஆன்மிக வெற்றி துவங்கி விட்டது என்ற விஷயத்தை வெளிப்படுத்தாமல் இருக்க இயலாது. எனது எண்ணம் கவாஜா சாஹிபை போல் இல்லை. ஏனெனில், இங்கிலாந்தில் நூறு செய்தித்தாள்கள் அல்லது அதற்கும் மேற்பட்ட செய்தித்தாள்கள் இந்த அமைப்பை பற்றி பாராட்டுக் குறிப்புகளை எழுதியுள்ளன. அதனால் இங்கிலாந்து முஸ்லிமாகிவிட்டது என்று தோன்றுகிறது. மாறாக, நான் கூறுவது ஆன்மிக விஷயம் எவருக்கு ஆன்மிகக் கண் இருக்கின்றதோ அவர் மட்டுமே இந்த விஷயத்தை காண்கிறார்.

**இங்கிலாந்து தொடர்பான கனவும் அது நிறைவேறுவதும்**

தாங்கள் அனைவரும் அறிவீர்கள்! எவனது கையில் அனைத்து உலகங்களின் கடிவாளம் இருக்கின்றதோ அந்த அரசன் என் கனவில் கூறினான். நான் இங்கிலாந்திற்கு செல்கிறேன். மேலும் வெற்றி பெற்ற தளபதி போல் உள்ளே நுழைகின்றேன். அப்பொழுது எனது பெயர் வில்லியம் வெற்றியாளர் என்று வைக்கப்பட்டது.நான் சிரியாவில் நோய்வாய்ப்பட்டு நோய் தீவிரமடைந்த போது நான் இங்கிலாந்து செல்ல இயலாமல் எனது செயல்களின் விளைவாக இறைவனுடைய வாக்குறுதி மாற்றம் அடைந்து விடக் கூடாது என்று நான் மிகவும் அச்சம் கொண்டேன். இந்த அச்சத்தின் காரணம் என்னவென்றால், இங்கிலாந்தின் ஆன்மிக வெற்றி நான் இங்கிலாந்துக்கு செல்வதுடன் தொடர்புடையது ஆகும் என்று கனவின் அடிப்படையில் நான் நம்பினேன். ஆனால், இறைவனுடைய அருளினால் இறுதியாக இங்கிலாந்து வந்து சேர்ந்தேன். இப்பொழுது எனது பார்வையில் இங்கிலாந்தில் வெற்றியின் அடித்தளம் வைக்கப்பட்டு விட்டது. வானிலும் இதற்கான வெற்றியின் அடித்தளம் வைக்கப்பட்டு விட்டது. உரிய காலத்தில் பூமியிலும் இதற்கான அறிவிப்பு நடைபெறும்.

எதிரி சிரிப்பான்; இது ஆதாரமற்ற வாதங்களாகும்; இவ்வாறு அனைவரும் செய்யலாம் என்று கூறுவான். ஆனால், அவனை சிரிக்க விடுங்கள். ஏனெனில், அவன் கண் பார்வையற்றவன் ஆவான். உண்மையை அவன் காண்பதில்லை. ஆத்தமைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் முன்னறிவிப்பு செய்தார்கள். (அந்த முன்னறிவிப்பு) இறை நாட்டத்தின் கீழ் வேறு வடிவில் நிறைவேறிய போது இந்தியா முழுவதும் அது குறித்து பரிகாசம் செய்யப்பட்டது. அப்போதைய காலத்தின் பாகல்பூர் நவாப் ஸாஹிபின் சபையிலும் கூட இதைப் பற்றி பேசப்பட்டது. அவரும் இது பொய்யாகும் என்பதற்கு சாதகமாக

கருத்தை தெரிவித்தார். அப்பொழுது அந்த சபையில் சாச்சாடியாவை சேர்ந்த பீர் காஜா குலாம் ஃபரீத் ஸாஹிப் (ரஹ்) மிர்ஸா ஸாஹிபுடைய முன்னறிவிப்பு பொய்யானது என்று கூறுபவன் தவறான (எண்ணத்தில்) இருக்கிறான். ஆத்தம் இறந்து விட்டான். அவன் பிணமாக எனக்கு காட்சியளிக்கின்றான். உலகப் புழுக்களுக்கு அவன் உயிர் உள்ளவனாக தென்படுகின்றான்.

**இங்கிலாந்தின் வெற்றியை குறித்த நிபந்தனை நிறைவேறிவிட்டது**

நானும் கூறுகின்றேன். இங்கிலாந்து வெற்றி கொள்ளப்பட்டது. இறைவனின் வாக்குறுதி நிறைவேறியது. இதனுடைய வெற்றியின் நிபந்தனை வானில் நிர்ணயிக்கப்பட்டது. அதாவது நான் இங்கிலாந்து வரவேண்டும். ஆக நான் இறைவனின் அருளினால் இங்கிலாந்து வந்து விட்டேன். இப்பொழுது இன்ஷா அல்லாஹ்! இதனுடைய வேலைப்பாடும் ஆரம்பித்து விடும். தங்களுடைய காலத்தின் மற்ற மக்களும் நான் எழுதியது உண்மையாகும் என்று காண்பார்கள்.இன்ஷா அல்லாஹ்!

சில விஷயங்கள் சில முக்கியமான நபர்களுடன் தொடர்புடையதாகும் என்று மூடர்கள் அறிவதில்லை. மேலும் இறைவனுடைய நியதியில் இங்கிலாந்தில் இஸ்லாத்தின் முன்னேற்றம் நான் இங்கிலாந்து செல்வதுடன் தொடர்புடையதாக இருந்தது.

நீர் விலாயத்(அதாவது இங்கிலாந்)திற்கு செல்வதால் வெற்றி துவங்கும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கனவில் காட்டப்பட்டது. எனக்கும் இதுதான் காட்டப்பட்டது. நபிமார்களின் கலீஃபாக்கள் அவர்களுடைய இருப்பாகவே கருதப்படுகின்றனர். ஆகையால், இந்த இரண்டு கனவுகளின் பொருள் ஒன்றுதான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய கனவின் பொருள் அவர்களுடைய பிரதிநிதி இங்கிலாந்து செல்வதாகும். மேலும் என்னுடைய கனவின் பொருள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்ஊடைய சந்ததி செல்வதாகும். எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உடைய ஆன்மிக பிரதிநிதி இங்கிலாந்து வந்து விட்டார். இனி இன்ஷா அல்லாஹ் நிரந்தரமாக நிர்ணயிக்கப்பட்டிருந்த இந்த வெற்றியின் கதவு திறந்து விடும்.

இறைவனுடைய நியதி என்னவென்றால், முன்னறிவிப்பு நிறைவேறும் நேரம் வரும்பொழுது பிறகு அவன் அதன் பக்கம் கவனத்தை திருப்புகிறான். என்னுடைய கனவில் நான் இங்கிலாந்து சென்றதற்கான பொருள் இதுவாகத்தான் இருக்கும் என்று கருதுகிறேன். அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ்ஊடைய ஒரு தவறான எண்ணம் அகற்றப்படுதல் (என்ற நூலில் உள்ள) கனவு நிறைவேறும் நேரம் வந்து விட்டது........

இந்த பயணத்திற்கு ஏன் இவ்வளவு செலவு செய்தீர்கள்? என்று மௌலவி முஹம்மது அலி ஸாஹிப் மற்றும் அவரது தோழர்கள் ஆட்சேபனை செய்கிறார்கள். அநேகமாக நான் இந்தப் பயணத்தைப் சுற்றிப் பார்ப்பதற்காகவே செய்து இருக்கின்றேன் என்ற எண்ணத்தில் அவர்கள் இந்த ஆட்சேபனையை செய்திருக்கக் கூடும். ஆனால் இது உண்மையல்ல என்பதை நான் அவர்களுக்கு கூற விரும்புகிறேன். தற்போது இது கடினமான காரியமாகும். இல்லாவிட்டால் என் செலவில் என்னுடன் செல்லுங்கள்; மேலும் என் வாழ்க்கையைப் ஆராய்ந்துப் பாருங்கள்; பின்னர் நம்பிக்கையாளராக பெற்ற அனுபவத்திற்குப் பிறகு என்னைப் பற்றிய கருத்தை தெரிவியுங்கள் என்று அவர்களிடம் நான் கூறியிருப்பேன். அஹ்மதி அல்லாதவர்களும், இங்கிலாந்தில் உள்ள பிரபலமானவர்களும் இந்த அளவிற்கு பணி நல்லதல்ல ; உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்த வேண்டும் என்று எனக்கு அறிவுறுத்துகிறார்கள் என்பதை அவர்கள் என்னுடன் இருந்திருந்தால் அறிந்திருப்பார்கள். இன்றைக்கு லண்டன் வந்து இருபது நாட்கள் ஆகின்றன. எங்களுக்கு லண்டன் இந்தியாவில் எப்படி இருந்ததோ அப்படியேதான் தற்போதும் இருக்கிறது. அதன் கட்டிடங்களையும் தெரியாது. அதன் அதிசயங்களையும் தெரியாது. எங்களுக்கு தெரிந்த விஷயம் எல்லாம் இங்கு சந்திக்க வருகின்ற மனிதர்களை தான். அல்லது காற்று வாங்க வெளியே செல்லும் போது வழியில் தென்படும் காட்சியாகும்.

மேலும் நாங்கள் நான்காம் நாள், ஐந்தாம் நாள் நடைபயிற்சிக்காக வெளியில் செல்லும்போதோ அல்லது பட்னி இல்லத்திற்கு ஜுமுஆ தொழுகைக்காக செல்லும்போதோ எங்களது பயணம் பொழுதுபோக்கு பயணமாக இருந்து விடக்கூடாது என்பதற்காக நாங்கள் எங்கள் கண்களை மூடிக் கொண்டு செல்ல வேண்டும் என்று மௌலவி முஹம்மத் அலி ஸாஹிப் எதிர்பார்க்க மாட்டார் என்று நான் நம்புகிறேன். அவருக்கு எங்கள் மீது கடுமையான எதிர்ப்பு மற்றும் காழ்ப்புணர்ச்சி இருந்தாலும் கூட அவ்வாறு எதிர்பார்க்க மாட்டார் என்று நான் நம்புகிறேன்.

எவ்வாறு இருப்பினும், இந்தப் பயணத்தில் நாங்கள் எந்த வேலையும் செய்யவில்லை. மேலும் பொழுதுபோக்கிற்காக மட்டுமே எமது பயணம் அமைந்திருந்தது என்றாலும் கூட அப்பொழுதும் இந்த பயணத்தின் மீது எந்த ஆட்சேபனையும் எழாது என்பதை இவர்களுக்கு கூறிக் கொள்ள நான் விரும்புகிறேன். ஏனெனில், இது இரண்டு முன்னறிவிப்புகளை நிறைவேற்றுவதற்காக இருந்தது.

ஒன்று,டமாஸ்கஸ் தொடர்பான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பு. மற்றொன்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இங்கிலாந்து தொடர்பான முன்னறிவிப்பு.

எனவே மௌலவி முஹம்மத் அலி ஸாஹிப் அவர்களிடமிருந்து எந்தப் பணமும் கேட்காமல், மேலும் அஹ்மதி அல்லாதவர்களிடமும் எந்த தொகையையும் வேண்டாமல் எமது சொந்த பணத்தில் சில முன்னறிவிப்புகளை நிறைவேற்றும் பொருட்டு நாங்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டோம் என்றால் அவர்களுக்கு இதில் என்ன ஆட்சேபனை இருக்க முடியும்? மௌலவி முஹம்மத் அலி ஸாஹிப் எவ்வாறு எனது விவகாரத்தில் தனது புத்தியை இழந்தாரோ அதேபோன்று அவர் மற்ற மக்களையும் கருதுகிறார் என்று நான் புரிந்து கொள்கிறேன்.

நூற்றுக்கு தொன்னூறு ஜமாஅத்கள் எனக்கு இங்கு வரும்படி ஆலோசனை வழங்கும் வரை நான் இங்கிலாந்திற்கு செல்வதற்கு எண்ணம் கொள்ளவில்லை. எனவே இந்த பயணம் முறையற்றது என்றால் ஆட்சேபனை என் மீது அல்ல. மாறாக ஜமாஅத்தின் மீது எழும்.

மக்கள் அறிவில்லாமல் ஆலோசனை கொடுத்து விட்டனர்; இவரும் வீட்டை விட்டு புறப்பட்டு விடுவார்; பாருங்கள் இவர் எப்படிப்பட்ட அறிவீனராக இருக்கின்றார்? என்று அவரால் கூற முடியும். ஆனால், இவரை எவரும் ஏன் தடுக்கவில்லை என்று கூற இயலாது. கண்கட்டி வித்தையால் எல்லாவற்றையும் மறக்கடிப்படுவதைப் போன்று அனைத்தையும் தமது காந்த சக்தி கொண்ட பேச்சால் மறக்கடித்து விட முடியும்? மேலும் தம்முடைய விருப்பத்தை ஏற்க செய்துவிட முடியும் என்று மௌலவி முஹம்மது அலி ஸாஹிப் கருதுகின்றாரா?

ஒரு மாதத்திற்கு முன்பு நான் கட்டாயமாக இங்கிலாந்து செல்ல வேண்டும்; எந்த துயரத்தையும் பொருட்படுத்தக் கூடாது என்று ஆலோசனை வழங்கியவர்களால், ஒரு மாதத்திற்குப் பிறகு நான் ஏன் ஜமாஅத்தின் பணத்தை வீணடித்தேன்? ஏன் இங்கிலாந்து சென்றேன்? என்று கூற முடியுமா? என்று கேட்க முடியுமா?மேலும் சமுதாயத்தின் செல்வத்தை நான் நாசமாக்கி விட்டேன் என்று அவர்களால் என் மீது குற்றம் சுமத்த முடியுமா? நான் எனக்காக எந்த

பணத்தையும் செலவு செய்யவில்லை என்பதை அவர்கள் அறிவார்கள். மேலும், என்னுடைய சொந்த செலவிற்காக ஜமாஅத்தின் கருவூலத்திலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் கடிதங்கள் மூலமாக என்னை வற்புறுத்தி வருகின்றார்கள். எனவே மௌலவி ஸாஹிப் அவர்களுக்கு நான் உறுதி அளிக்கின்றேன். அதாவது என்ன நிகழ்ந்தாலும் இவ்வாறான அபத்தமான பேச்சுகளில் ஈடுபடும் அளவிற்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சார்ந்த மக்கள் ஒன்றும் அறிவற்றவர்கள் கிடையாது.

**இறைவனைத் தவிர வேறு எவரும் பொருட்டல்ல**

அவருடைய கருத்தால் தாக்கம் ஏற்பட்டு விட்டால் என்ன நடக்கும்? என்று நான் அவர்களிடம் கேட்கிறேன். இதுதானே நடக்கும்? அதாவது மக்கள் என்னுடைய பைஅத்தில் இருந்து விலகி இவர்களுடன் சென்று இணைந்து கொள்வார்கள்; அவ்வளவுதானே!

எனவே நான் இது தொடர்பாக மீண்டும் ஒருமுறை கூறவிரும்புகிறேன். நான் மக்களின் ஏக்கத்தில் இல்லை. (அதாவது நான் கூட்டங்கள் சேர்க்க விரும்பவில்லை); நானோ என் இறைவனின் பார்வைக்காவே ஏங்குகிறேன். அறிவில்லாத மௌலவியே! உன்னைப் போன்று என்னை நினைக்காதே! அஹ்மதிய்யா ஜமாஅத் எவ்வளவு தான் இருக்கின்றது? ஒரு கைப்பிடி அளவுதான் அஹ்மதிய்யா ஜமாஅத் இருக்கின்றது. ஒருவேளை முழு உலகமும் என்னுடைன் இருந்து பின்னர் என்னை விட்டு விலகிச் சென்று விட்டாலும் கூட நான் என் இறைவன் மீது நம்பிக்கை வைக்கின்றேன் ; அவன் என்னைக் கைவிட மாட்டான். இறைவன் என்னுடன் இருக்கும்போது மனிதர்கள் வந்து செல்வதைப் பற்றி எனக்கு என்ன கவலை இருக்கின்றது?

எவர் என்னிடம் பைஅத் செய்கிறாரோ அவர் தன்னுடைய பலனுக்காகவே இவ்வாறு செய்கின்றார். அவர் என் மீது கருணையை வெளிப்படுத்தவில்லை.மாறாக, என் மூலமாக அவர் மீது இறைவன் கருணை காட்டுகின்றான். எவர் எனக்கு அன்பளிப்பு கொடுக்கின்றாரோ அவர் என் மீது கருணை காட்டவில்லை. மாறாக, அதனால் என் மூலமாக இறைவன் அவர் மீது கருணை காட்டுகின்றான். உங்களில் எவரிடமாவது கடன் பணத்தை தவிர எப்போதாவது ஏதாவது கேட்டதுண்டு என்று கூறுபவர் எவரும் இருக்கின்றாரா? பாசாங்கு செய்பவன் என்று என் மீது குற்றம்சாட்டுபவர் எவரும் இருக்கின்றாரா? நான் நம்பிக்கை துரோகம் செய்தேன் என்று நிரூபிக்க எவரும் இருக்கின்றாரா? நான் பேராசை கொண்டவன் என்று என்னை சுட்டிக் காட்ட எவரும் இருக்கின்றாரா? உலக திரையில் இவ்வாறு கூறுபவர் எவராவது இருக்கின்றார்? என்றால் எவனுடைய கையில் அவர் உயிர் இருக்கின்றதோ அந்த இறைவன் மீது நான் சத்தியம் செய்கிறேன். அவர் மௌனம் காக்க வேண்டாம்; மேலும் அவர் என்னை உலகத்தின் பார்வையில் இழிவு படுத்தட்டும். நான் மக்களுடைய செல்வங்களை உண்பவனாக இருந்தால்; நான் பேராசை எனும் நோயால் பீடிக்கப்பட்டு இருந்தால் அவர் என்னை இழிவுபடுத்தட்டும்!

ஆனால், உண்மையில் அத்தகையவர் வீண் பழி சுமத்தக் கூடியவர் ஆவார். அவர் இறைவன் மற்றும் அவனுடைய மார்க்கத்தின் எதிரி ஆவார். அந்த நபர் எவ்வளவு விரைவாக தன்னை சீர்திருத்திக் கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவாக சீர்திருத்திக் கொள்ளட்டும்; ஏனெனில், அது அவருடைய ஆன்மிகத்திற்கு நன்மை பயக்கும்.

**நான் ஜமாஅத் செல்வத்தின் பாதுகாவலன் ஆவேன்**

வாழ்க்கை நிரந்தரமானதல்ல. மரணம் ஒவ்வொருவருக்கும் வரக் கூடியதே!

எனவே என்னிடத்தில் ஏதேனும் குறைகள் இருந்தாலும் தவறுகள் இருந்தாலும், ஜமாஅத்தினுடைய பணத்தையும் அதன் செல்வங்களையும் எந்த அளவிற்கு பாதுகாத்தேன் என்றால் (இதனை பாதுகாப்பதில்) அதை விட அதிகமாக எதுவும் எனது சிந்தனைக்கு வரவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். சில நண்பர்கள் எனக்கு அன்பளிப்பாக பணம் அனுப்பி இருந்தார்கள். என்னுடைய பெயரில் மணி ஆர்டர் அனுப்புகின்றார்கள். என்னுடைய பெயர் எழுதிய பிறகு அதில் எதுவும் எழுதத் தேவையில்லை என்று கருதுகின்றார்கள். நான் அந்த பணத்தையும் பயன்படுத்துவதில்லை. எனது பெயரில் வரும் அந்த அனைத்து மணி ஆர்டர்களும் முஹாஸிப் (ஜமாஅத் வங்கி) அலுவலகத்தில் ஒன்று சேர்க்கப்படும். அங்கு இருந்து ரிஜிஸ்டரில் எழுதப்பட்டு என் பார்வைக்கு வரும். ஆக, என் நிலையைப் பற்றி எந்த கவலையும் இல்லை. இவ்வாறான தொகைகளும் ஜமாஅத்தின் கருவூலத்தில் சேர்க்கப்பட்டு விடுகின்றன. அதை நான் பயன்படுத்துவதில்லை என்பதற்கு அந்த ரிஜிஸ்டரும் கூப்பன்களும் சாட்சியாகும். ஆயினும், தேவையின் போது ஜமாஅத்தின் கருவூலத்திலிருந்து கடனாக பணம் வாங்குகிறேன். பிறகு வாய்ப்பு கிடைக்கும் பொழுது அதை செலுத்தி விடுகிறேன்.

இதற்கு நான் கண்காணிப்பாளன். இதை நான் ஆகுமானதாக கருதுகிறேன். இதனை பலமுறை நான் வெளிப்படுத்தவும் செய்துள்ளேன். இதைத் தவிர எனக்கு ஜமாஅத்துடைய பணத்துடன் எந்த தொடர்பும் கிடையாது. நான் பணக்காரன் அல்ல; சில சமயங்களில் என்னுடைய நோய்களுக்கான மருந்து அல்லது அவசியமான ஆடைகள் அல்லது தேவையான பொருட்கள் கூட ஏற்பாடு ஆகுவதில்லை. அப்போது நான் என் மீதான கஷ்டத்தை பொறுத்துக் கொள்கிறேன். ஆனால், நான் என்னுடைய நிலையை மக்களுக்கு தெரியும் வண்ணம் ஆக்கிக் கொள்வதில்லை. ஏனெனில், இதுவும் ஒரு வகையான கேட்கும் வகையாக அமையும் என்று நான் கருதுகிறேன். இவ்வாறான நிலைகளுக்குப் பிறகும் கூட எவராவது, இருள் வெளிச்சத்தில் இருந்து தூரமாக இருப்பதைப் போன்று நான் தூரமாய் இருக்கின்ற விஷயத்தை என் பக்கம் சுட்டிக் காட்டினால் நான் என் இறைவன் பக்கம் கவனத்தை செலுத்துகிறேன். அவனிடம் வேண்டுகிறேன். என்னுடைய இறைவா! என்னுடைய இறைவா! நான் உன்னுடைய எளிய அடியான் ஆவேன்; என்னுடைய பாவங்களுக்கு பொறுப்பேற்று என்னுடைய தவறுகள் மன்னிக்கப்படும் என்ற நம்பிக்கையில் அந்த மக்களின் அநியாயங்களை நான் மன்னிக்கின்றேன். நீ அவர்களுடைய தவறுகளை மன்னிப்பாயாக! என்னுடைய பலவீனத்தையும் மன்னிப்பாயாக! ஆன்மா மகிழ்ச்சியாக இருக்கின்றது. ஆனால், உடல் கஷ்டத்தை அனுபவிக்கின்றது. எனவே என்னுடைய உள்ளத்திற்கு பொறுமையின் ஆற்றலை வழங்குவாயாக!

**மவ்லவி நிஃமத்துல்லாஹ் ஸாஹிபுடைய உயிர் தியாகம்**

என்னுடைய பயணம் தொடர்பாக மௌலவி முஹம்மத் அலி ஸாஹிப் மற்றும் அவருடைய தோழர்கள் செய்த ஆட்சேபனைக்கு பதிலில் இறுதியாக இவ்விஷயத்தை கூறிய பிறகு காபூலில் நடந்த துயர சம்பவத்தின் பக்கம் என்னுடைய கவனத்தை திருப்புகிறேன். ஏனெனில், ஆஃப்கானிஸ்தானின் முதல் சம்பவம் அறியாமையின் அடிப்படையில் என்றால், இது வேண்டுமென்றே செய்யப்பட்டதாகும். இப்பொழுது ஆஃப்கானிஸ்தானுடைய அரசிற்கு நம்முடைய கொள்கைகள் நன்றாக தெரிந்து விட்டது. அவர்களுடைய இந்த செயல் மிகவும் வருத்தத்திற்குரியது. ஆனால் முஸ்லிம்கள் சண்டையிடுவதற்காக அல்ல; மாறாக, உலகிற்காக அர்ப்பணமாகுவதற்காக படைக்கப்பட்டுள்ளனர். எனவே நாம் நமது எண்ணங்களின் உணர்வை நல்லிணக்கம் மற்றும் அமைதியின் பக்கம் திருப்ப வேண்டும். பொறாமை மற்றும் குழப்பத்தின் பக்கம் அல்ல.

**தீயவர்கள் மீது கருணை தீமையின் மீது வெறுப்பு**

தீயவன் மீது கருணை காட்ட வேண்டும்; தீமையை வெறுக்க

வேண்டும் என்பதுதான் நம்முடைய போதனையாகும். தீமையை அழியுங்கள்; தீயவரை காப்பாற்றுங்கள். எனவே ஆஃப்கானிஸ்தான் அரசு மற்றும் அதனுடைய குடிமக்களுக்கு எதிராக உள்ளத்தில் பொறாமை வைக்கக் கூடாது. மாறாக இப்பொழுதும் கூட இறைவன் அவர்களுக்கு நேர்வழி வழங்க வேண்டும் என்று துஆ செய்ய வேண்டும். இந்தப் பணி கடினமாகும். இறைவன் கூறுகின்றான். பொறுமையை மேற்கொள்வது கடினமாகும். நம்முடைய முழு கவனத்தையும் இந்த பணியை செய்வதில் செலுத்த வேண்டும். இதற்காக தான் மௌலவி நிஃமத்துல்லாஹ் ஸாஹிப் உயிர் துறந்தார்கள். நம் அனைவரிடமும் தியாக உணர்வு உருவாக வேண்டும் என்பதற்காக நாம் இவர்களின் நினைவுகளை புத்துணர்வுடன் நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

**உயிர் தியாகிகளின் கத்பா**

என்னுடைய கருத்து என்னவென்றால், ஜமாஅத்துடைய உயிர் தியாகிகளின் பெயர்கள் கத்பாவில் எழுதப்பட வேண்டும். அனைவருடைய துஆவை பெற்றுக் கொண்டே இருக்க அனைவருடைய பார்வையும், இவர்களுடைய பெயர்களில் மீது விழும் பொருட்டு அதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய (மண்ணறையில்) தலைமாட்டில் வைக்க வேண்டும். தற்போது இந்த கத்பாவில் மௌலவி ஸாஹிப்ஸாதா அப்துல் லத்தீஃப் ஸாஹிப் ஷஹீத் (ரலி) மற்றும் மௌலவி நிஃமத்துல்லாஹ் ஸாஹிப் ஆகியோருடைய பெயர் இருக்க வேண்டும். இனி எவருக்காவது இந்த உயர் அந்தஸ்து கிடைக்குமானால் அவருடைய பெயரும் கத்பாவில் இருக்க வேண்டும்.

**உயிர் தியாகிகளின் நற்குறிப்பு**

ஒரு புத்தகம் தயாராக வேண்டும்.அதில் வருங்கால சந்ததிகள் உயிர் தியாகிகளுடைய பணிகளை படித்து அவர்களுடைய அடிச்சுவட்டில் நடக்க முயற்சி செய்யும் பொருட்டு வரலாற்று அடிப்படையில் அனைத்து உயிர்த் தியாகிகளுடைய நிலைமைகள் ஒன்று சேர்க்கப்பட வேண்டும்.

**ஆஃப்கானிஸ்தானில் தஃப்லீக்**

அதேபோன்று ஆஃப்கானிஸ்தானில் இஸ்லாமின் தூதுச் செய்தியை எட்ட வைக்க நாம் சிறப்பான கவனம் செலுத்த வேண்டும். அங்கு வெளிப்படையான தப்லீஃக்கின் கதவு மூடப்பட்டுள்ளது. ஆனால், நாம் அந்த நாட்டை ஒரு நாளுக்காக கூட விடக் கூடாது. நம்முடைய தன்னலமற்ற நண்பர்கள் தங்களுடைய பகுதிக்குச் சென்று அங்குள்ள செல்வாக்கு மிக்க குடும்பங்களின் இளைஞர்களை இந்தியாவுக்கு அழைத்து வந்து காதியானில் சில காலம் (தங்க) வைக்க வேண்டும். ஜமாஅத்தைப் பற்றி அறிமுகப்படுத்தி ஆறு, ஏழு மாதத்திற்கு பிறகு அவர்களுடைய நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்க வேண்டும்.

தமிழாக்கம்

மவ்லவி

ஸாஹிர் ஹுஸைன்

* * * * * * *

28-ம் பக்கத் தொடர்ச்சி...(ஃபஸ்லே உமர் பெயர் வைக்கப்பட்டதன் ஞானம்)

ஊதுவோம் (இறை உரையாடல்களை வழங்குவோம்) என்று அன்னாரைக் குறித்து இறைவன் கூறியுள்ளான்.

அதேபோன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

முந்தைய சமுதாயங்களின் முஹத்திஸீன்களைப் போன்று ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களும் ஒரு முஹத்திஸ் மற்றும் முல்ஹிம் ஆவார்கள்.

எனவேதான் பல திருக்குர்ஆன் வசனங்களில் உள்ள கருத்துகள் முதலில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய உள்ளத்தில் இறங்கின. பிறகு திருக்குர்ஆனிலும் வஹீயின் வடிவில் இறங்கின. இதனால் அன்னாரின் சில கனவுகளும் ஆன்மிக காட்சிகளும் பிரசித்தி பெற்றுள்ளன. இதன் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்குப் பிறகு உடனடியாக அடுத்தப்படியாக வேறு ஒருவர் நபியாக வருவாரே என்றால் அது உமரே ஆவார் எனவும், நான் (நபியாக) அனுப்பப்படாமல் இருந்திருந்தால் உமர் (நபியாக) அனுப்பப்பட்டிருப்பார் என்றும் கூறினார்கள்.

இந்த அனைத்து விஷயங்களும் நபித்துவத்தின் ஒளி, இல்ஹாமிய இயல்பு மற்றும் வஹீக்குரிய தகுதி போன்ற ஆற்றல்களின் அத்தாட்சியாக இருக்கின்றது. மேலும், இதே விஷயங்களை தான் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் உள்ள மக்களும் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களிடம் எப்போதும் கண்டு வந்தார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு நபர் தன்னுடைய மாட்டுடன் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அவருக்கு ஏற்பட்ட களைப்பினால் அவர் அந்த மாட்டின் மீது ஏறி அமர்ந்துக் கொண்டார். அப்போது அந்த மாடு அவரிடம் நாங்கள் விவசாயத்தின் பயன்பாட்டிற்காக படைக்கப்பட்டுள்ளோம்; சவாரிக்காக அல்ல என்று கூறியது. இதைக் கேட்ட ஸஹாபா பெருமக்கள் ஸுப்ஹானல்லாஹ்! மாடுகளும், காளைகளும் கூட பேசுமா? என வினவினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதை நான் நம்புகின்றேன்; இன்னும்கூறுவதாயின் அபூபக்ர் (ரலி) மற்றும் உமர் (ரலி) அவர்களும் கூட இதை நம்புகின்றனர் என்று பதிலளித்தார்கள். ஆனால், அவர்கள் இருவருமே அந்த சபையில் இருக்கவில்லை.

இந்த ஹதீஸிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பார்வையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகிய இருவரும் ஆன்மிக காட்சியை காணக் கூடியவர்களாக இருந்தார்கள் என்பதாகும். ஏனெனில், மாடு பேசியது தொடர்பான அனைத்து விஷயங்களும் ஆன்மிக நிலையில் இருந்தன. இதற்கான ஆதாரம் என்னவென்றால், ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தில் அன்னார் (ரலி) ஜுமுஆ உரை நிகழ்த்தியவாறே, யா ஸாரியதல் ஜபல்!யா ஸாரியதல் ஜபல்! என்று உரத்த குரலில் விளித்தார்கள். அங்கிருந்த மக்கள் வியப்படைந்தனர். மேலும், ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இது தொடர்பாக கேட்டபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நான் இஸ்லாமியப் படை போர்க் களத்தில் மிகுந்த துன்பத்தில் இருப்பதைக் கண்டேன்; அத்துடன் அவர்கள் அருகில் உள்ள மலை அடிவாரத்திற்கு சென்று அடைக்கலம் பெற்றால், அவர்கள் தப்பித்து விடுவார்கள் என்ற அந்தக் காட்சியையும் நான் கண்டேன். எனவேதான் நான் படையின் தலைவர் ஸாரியாவை விளித்து மலையின் பக்கம் அடைக்கலம் தேடுங்கள்! மலையின் பக்கம் அடைக்கலம் தேடுங்கள்! என்று கூறினேன் என்றார்கள். சிறிது காலம் கழித்து அந்தப் படை மதீனா வந்தடைந்ததும் அம்மக்கள் எதிரிகள் எங்களை முற்றுகையிட்டு விட்டார்கள். ஆனால், அப்போது, ஸாரியாவே! மலையின் பக்கம் சென்று அடைக்கலம் தேடிக் கொள்! என்ற ஓசை வந்தது. அவ்வாறே நாங்கள் அங்கு சென்றவாறு அழிவிலிருந்து பாதுகாப்பு பெற்றோம் என்று கூறினர்.

எனவே இந்த கஷ்ஃப் (எனும் ஆன்மிகக் காட்சி) என்பது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆன்மிகக் காட்சியை காணக் கூடியவராக இருந்தார்கள் என்பதற்கு ஒரு பிரசித்தி பெற்ற சான்றாகும். அதேபோன்று பாங்கில் கூறப்படக் கூடிய சொற்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மூலமாகத்தான் முஸ்லிம்களாகிய நமக்கு கிடைத்தது. எனவே அன்னார் சுயமே முஹத்திஸ்ஸாகவும், முல்ஹிமாகவும், ஆன்மிகக் காட்சி காணக் கூடியவராகவும் இருந்தார்கள் என்பதால் அன்னாருக்கு மாடு பேசுவதையோ அல்லது ஓநாய் பேசுவதையோ ஒப்புக் கொள்வதில் என்ன கடினம் இருந்திருக்க முடியும்? ஆனால், பொது மக்களுக்கு இந்த விஷயம் உள்ளபடியே புரியப்பட வேண்டிய விஷயமாக இருந்தது.

அதேபோன்று நம்முடைய ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களும் குழந்தை பருவத்திலிருந்தே ஆன்மிகக் காட்சி, கனவுகள் மற்றும் இல்ஹாம் பெறக் கூடியவராக இருந்தார்கள்.

* * * * * * *

## ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1924- ம் ஆண்டு

## ஐரோப்பிய சுற்றுப் பயணத்திலிருந்து தாயகம் திரும்புதல் & காதியானில் அன்னாருக்கு வழங்கப்பட்ட வரவேற்பு மற்றும் திருவிழா போன்ற சூழல்

**(மதிப்பிற்குரிய முஹம்மது ஷரீஃப் கவ்ஸர் - முபல்லிஃக் நஷ்ரோ இஷாஅத் காதியான்)**

ஜமாஅத் மக்களின் உள்ளங்களில் அல்லாஹ் தன்னுடைய கலீஃபாவிற்காக எல்லையற்ற அன்பு, நேர்மை மற்றும் நன்றியுணர்வை வழங்கியிருக்கின்றான். ஜமாஅத் மக்கள் தம்முடைய கலீஃபாவின் மீது எண்ணிலடங்கா பாசம் கொண்டிருக்கின்றனர். காலத்தின் கலீஃபாவின் கட்டளையின்படி செயல்படுவதற்காக எப்போதும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள். மேலும் காலத்தின் கலீஃபாவிற்காக எந்நேரமும் துஆ செய்து கொண்டிருக்கின்றார்கள். காலத்தின் கலீஃபா எங்கெல்லாம் செல்கின்றாரோ அங்குள்ள மக்களில் ஒரு தனித்துவமான ஆன்மிகத் தொடர்பு நிலைநாட்டப்படுகின்றது. மேலும் ஒருவேளை மார்க்கத்தின் தேவையை முன்வைத்தவாறு காலத்தின் கலீஃபா, சிறிது நாட்கள் கூட தாம் இருந்த இடத்திலிருந்து தொலைவில் சென்று விடுகின்றார் என்றால் காலத்தின் கலீஃபாவின் இந்த பிரிவின் காரணமாக தலைமையகத்தில் இருக்கக் கூடிய ஜமாஅத் மக்கள் அந்த நாட்களை மிகவும் துயரத்துடன் கழிக்கின்றார்கள். மேலும் தங்களுடைய நேசத்திற்குரியவரின் வருகைக்காக மிகவும் ஆவலோடு காத்திருப்பார்கள்.

இது போன்ற சூழல்தான் 1924-இல் காதியானில் இருந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஐரோப்பிய பயணத்திற்காக சென்று இருந்தார்கள். ஜமாஅத் மக்கள் ஹுஸுர் (ரலி) அவர்களின் வருகைக்காக மிகவும் ஆவலோடு காத்திருந்தார்கள். மேலும் எந்நேரமும் ஹுஸுர் (ரலி) அவர்களுக்காக துஆ செய்து கொண்டிருந்தார்கள். இறுதியாக அந்த அருளுக்குரிய நாள் வந்தது. அப்போது ஹுஸுர் (ரலி) அவர்கள் காதியானுக்காக புறப்பட்டார்கள்.

### லண்டனில் இருந்து புறப்பட்டு மும்பை வந்தடைந்தல்

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 24 அக்டோபர் 1924- அன்று லண்டனின் ஃபஸ்ல் பள்ளிவாசலில் முதல் ஜுமுஆவை நிகழ்த்தினார்கள். மேலும் லண்டனிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் ஹுஸுர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

என்னுடைய பார்வையில் இங்கிலாந்தில் வெற்றிக்கான அடித்தளம் வைக்கப்பட்டு விட்டது. வானத்தில் இதன் வெற்றிக்கான அடித்தளம் வைக்கப்பட்டு இருக்கிறது. மேலும் தனது நேரத்தில் இந்த அறிவிப்பானது பூமியில் வந்து விடும். எதிரிகள் நகைத்துக் கொண்டிருப்பார்கள். மேலும் கூறுவார்கள்: இவ்வாறு ஆதாரமற்ற வாதங்களை எவராலும் செய்ய முடியும் என்று அவர்கள் கூறுவார்கள். ஆனால், அவர்கள் ஏளனம் செய்து கொண்டே இருக்கட்டும்; அவர்களை விட்டு விடுங்கள். ஏனெனில், அவர்கள் பார்வையற்றவர்கள் ஆவர். மேலும் உண்மையை பார்க்க இயலாதவர்கள் ஆவர்.

### ஹுஸுர் (ரலி) அவர்கள் அக்டோபர் 25-ல் லண்டனில் இருந்து புறப்பட்டார்கள்

வாட்டர்லூ நிலையத்தில் பல்வேறு ஐரோப்பிய ஆண்கள் மற்றும் பெண்கள் மட்டும் அல்லாமல் இந்தியா மற்றும் ஆஃப்ரிக்காவை சேர்ந்த மக்களும் ஹுஸுர் (ரலி) அவர்களை வழி அனுப்பி வைப்பதற்காக ஒன்றுகூடி இருந்தார்கள். (இந்த இடத்தில் இருந்துதான் ஹுஸுர் (ரலி) அவர்கள் காதிம்களுடன் வண்டியில் புறப்பட்டுச் செல்ல இருந்தார்கள்). மிகவும் அன்பு நிறைந்த சந்திப்பிற்கு பிறகு ஒவ்வொருவரும் குதா ஹாஃபிழ் அதாவது இறைவன் பாதுகாவலனாக இருப்பானாக என்று கூறினார்கள். மேலும் புகைப்படக்காரர்கள் புகைப்படத்தை எடுத்தார்கள். லண்டனில் இருந்து வண்டி சவுத் பிரிட்டன் சென்றடைந்தது. அங்கிருந்து ஹுஸுர் (ரலி) அவர்கள் தோழர்களுடன் இரவு 12 மணிக்கு கப்பலில் இங்கிலாந்தை விட்டு புறப்பட்டுச் சென்றார்கள். மேலும் அக்டோபர் 26, அன்று 8 மணிக்கு வண்டியின் மூலமாக ஃபாரிசுக்கு சென்றார்கள். ஃபாரிஸில் ஹுஸுர் (ரலி) அவர்கள் சிறிது காலம் மட்டுமே தங்கி இருந்தாலும் மிகவும் வெற்றிகரமான பயணமாக அது இருந்தது. தினமும் பத்திரிகைகளின் பிரதிநிதிகள் சந்திக்க வருவார்கள். ஃபாரிஸின் அரசாங்கத்தால் கட்டப்பட்ட புதிய பள்ளிவாசலில் முதல் தொழுகையை ஹுஸுர் (ரலி) அவர்கள் தொழ வைத்தார்கள். ஃபாரிஸின் பிரதிநிதிகள் மற்றும் சினிமா கம்பெனிகளைச் சேர்ந்தவர்கள் புகைப்படங்களை எடுத்துக் கொண்டார்கள். அதனை தினமும் வெளிவரக் கூடிய செய்தித்தாள்களில் வெளியிட்டார்கள்.

ஹுஸுர் (ரலி) அவர்கள் அக்டோபர் 31 -ம் தேதி ஃபாரீஸிலிருந்து புறப்பட்டார்கள். நவம்பர் 2-ம் தேதி இரவு வேனிஷில் (இத்தாலியில்) இருந்து கப்பல் மூலமாக பயணம் செய்து சுமார் 16 நாட்கள் கப்பல் பயணத்திற்குப் பிறகு நவம்பர் 18, 1924 அன்று மும்பை துறைமுகத்திற்கு வந்தடைந்தார்கள். மும்பை துறைமுகத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பிரதிநிதிகள் சுமார் 200 பேர் இந்தியாவின் பல்வேறு இடத்திலிருந்து வருகை தந்திருந்தார்கள். ஹுஸுர் (ரலி) அவர்களை புத்துணர்ச்சியோடு வரவேற்றார்கள். மேலும் ஊடகத்தின் பிரதிநிதிகள் புகைப்படங்கள் எடுத்தனர். ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்தியாவில் உள்ள அனைத்து அஹ்மதிகளின் சார்பாகவும் நன்றி உரையை சமர்ப்பித்தார்கள். அங்கிருந்து ஹுஸுர் (ரலி) அவர்கள் லியாகத் மன்ஸிலுக்குச் சென்றார்கள். மேலும் ஜனாப் ஸய்யது முஹம்மது ரிஜ்வி ஸாஹிப் அவர்களுடைய வீட்டில் தங்கினார்கள். மும்பையின் அனைத்து பத்திரிகைகளின் பிரதிநிதிகளும் ஹுஸுர் (ரலி) அவர்களின் ஐரோப்பிய பயணத்தின் நிலையை கேட்டறிவதற்காக சந்தித்து உரையாடினார்கள்.

ஹுஸுர் (ரலி) அவர்கள் மும்பை நகரத்தில் நலமாக வந்தடைந்த உடனேயே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பெயரில் தந்தி மூலமாக தூதுச் செய்தி அனுப்பினார்கள். அதில் கூறினார்கள்:

நான் என் சார்பாகவும் மற்றும் என்னுடன் பயணித்த தோழர்களின் சார்பாகவும் ஜமாஅத் மக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது அவர்கள் எங்களுடைய இந்தப் பணியின் வெற்றிக்காக துஆ செய்தார்கள். நமக்கு இந்தப் பயணத்தின் மூலமாக கிடைத்த எதிர்பாரா வெற்றியானது இறைவனின் அருளின் காரணமாகத்தான் கிடைத்தது என்று நான் நம்பிக்கை கொள்கிறேன். அவன் ஒவ்வோர் அடியிலும் நமக்கு உதவி புரிந்தான். மேலும், நமக்கு எப்படிப்பட்ட நேரத்தில் அவன் கதவைத்

திறந்தான் என்றால் நமக்கு எந்தவொரு வழியும் புலப்படாமல் இருந்தது. ஜமாஅத் மக்கள் அனைவரிடமும் நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அதாவது நீங்கள் இறைவனின் இந்த சிறப்பான அருளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மேலும் உங்களை நீங்களே பெரும் தியாகங்களுக்காக தயார் செய்து கொள்ளுங்கள். இந்தப் பயணத்தின் கனிகளை பெறுவதற்காக உங்களுக்கு அந்த தியாகங்களை செய்ய நேரிடும். கடந்த நான்கு மாதத்தில் நடந்த பணிகளுடைய விளைவினால் அந்தக் கனிகள் அல்லாஹ்விடமிருந்து வெளிப்பட போகின்றன. அல்லாஹ் நம் அனைவர் மீதும் பரக்கத்தை இறக்குவானாக!

### ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஆக்ரா சென்றடைதல்

ஹுஸூர் (ரலி) அவர்கள் நவம்பர் 20, 1924 மும்பையில் இருந்து பிபி இண்டஸ்ட்ரி ஹாய் ரயில்வே மூலமாக புறப்பட்டு அடுத்த நாள் நவம்பர் 21, 1924 அன்று ஆக்ரா சென்றடைந்தார்கள். ஆக்ரா சென்று கொண்டிருக்கும்போது, அன்னார் (ரலி) ஆக்ராவில் உள்ள புகழ்பெற்ற இடங்களை பார்வையிட்டார்கள். அன்னாருக்கு நல்ல வரவேற்பைக் கொடுத்தார்கள். மிர்ஸா இர்ஃபான் அலி பேஃக் ஸாஹிப் (ரலி) அவர்கள் அன்னாரது கழுத்தில் பூமாலையை அணிவித்தார்கள்.

சூஃபி முஹம்மது இப்ராஹீம் ஸாஹிப் பிஎஸ்சி அமீருல் முஜாஹிதீன் ஆக்ரா அவர்கள் டிசம்பர் 6, 1924 அன்று பதர் பத்திரிகையில் பக்கம் 7-ல் இவ்வாறு செய்தி வெளியிட்டார்கள்:

நவம்பர் 21 அன்று சரியாக மாலை 8 மணிக்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் குத்தாம் தோழர்களுடன் ஆக்ராவில் வந்து இறங்கினார்கள். அங்கு அஹ்மதிய்யா ஜமாஅத் உத்திரபிரதேசத்திலுள்ள பல்வேறு பகுதிகளில் இருந்து ஏறத்தாழ 100 பொறுப்பாளர்கள் ஒன்று கூடினார்கள். மேலும் அவர்களோடு சில தலைவர்களும் ஒன்று கூடினார்கள். மேலும் சுமார் 40 அஹ்மதி அல்லது பஞ்சாபி வணிகர்கள் ஹுஸூர் (ரலி) அவர்களை வரவேற்றார்கள். ஹுஸூர் (ரலி) அவர்களின் கழுத்தில் மலர் மாலையை அணிவித்தார்கள். ஹுஸூர் (ரலி) அவர்கள் அனைத்து மக்களையும் கை குலுக்கி சந்தித்தார்கள். பிறகு குத்தாம் தோழர்களுடன் தாருல் தப்லீஃக்கில் வந்து சேர்ந்தார்கள். ஹுஸூர் (ரலி) அவர்கள் வந்த உடனேயே தொழ வைத்தார்கள். மேலும் மேன்பூரைச் சேர்ந்த சில விருந்தினர்களிடம் பைஅத் வாங்கினார்கள். பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் உணவு அருந்தினார்கள். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மௌலவி குலாம் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் சிற்றுரையை சமர்ப்பித்தார்கள். அதற்கு விடையளிக்கும் விதமாக ஹுஸூர் (ரலி) அவர்கள் தன்னுடைய வெற்றிக்கு இறைவன் தான் காரணம் என்று கூறி ஜமாஅத்திற்கு முன்னேற்றப் பாதையின் பக்கம் கவனம் செலுத்துமாறு அறிவுரையை கூறி மேலும் குர்பானி செய்வதற்காக தயாராகும்படி கட்டளையிட்டார்கள். அடுத்த நாள் காலைப் பொழுதில் ஹுஸூர் (ரலி) அவர்கள் காதிம்களுடன் புகைப்படத்தை எடுத்தார்கள். பிறகு இரு சக்கர வாகனத்தில் தாஜ்மஹாலை பார்ப்பதற்காக சென்றார்கள். பிறகு சாந்தன் மாவட்டத்தை சென்றடைந்தார்கள்.

நவம்பர் 22 அன்று மல்கானா தப்லீஃக்குடைய மிகப் பெரிய தலைமையகமான சாந்தனை பார்ப்பதற்காக சென்றார்கள். இங்கு அனைத்து ஏற்பாட்டையும் மல்கானா மக்களே செய்தார்கள். மிகவும் அருமையான நுழைவு வாயில்கள் உருவாக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றின் மீது குலாம் அஹ்மத் கி ஜே (குலாம் அஹ்மத் வாழ்க!) என்ற வாசகமும் இடம் பெற்றிருந்தது. ஹுஸூர் (ரலி) அவர்கள் முன் ஓர் உரையும் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு ஹுஸூர் (ரலி) அவர்கள் பதில் அளித்தார்கள். பிறகு பல்வேறு மக்கள் பைஅத்தும் செய்தார்கள்.

வாசகர்களே! ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஐரோப்பாவின் பெரிய பயணத்திற்குப் பிறகு நேராக காதியானிற்கு சென்றடையாமல் மும்பைக்கு ஏன் வருகை தந்தார்கள்? என்று வியப்பில் இருப்பீர்கள்? வாசகர்களின் கவனத்திற்காக எழுதிக் கொள்வது என்னவென்றால், அந்நாட்களில் அஹ்மதிய்யா ஜமாஅத் உத்திரபிரதேசத்தின் இடமான ஆக்ரா மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் ஷூத்தி (எனும் முஸ்லிம்களை மீண்டும் இந்து மதத்தில் இணைப்பதற்காக துவங்கப்பட்ட அமைப்பு)க்கு எதிராக தப்லீஃக் நடந்து கொண்டிருந்தது. இந்த தப்லீஃக்கிற்கான துவக்கத்தை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1923-ல் துவங்கி வைத்தார்கள்.

அந்தக் காலத்தில் இந்து மக்களின் ஒரு சமுதாயம் மல்கானா சமுதாயத்தைச் சேர்ந்த முஸ்லிம்களை இஸ்லாத்தை விட்டு இந்து மதத்தில் சேரும்படி கோரிக்கை வைத்துக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் முஸ்லிம்களை தமது மார்க்கத்தில் இருந்து வெளிவர வைத்து இந்து மதத்தில் இணைய செய்வதற்கான முயற்சியின் எதிர்வினையாக அஹ்மதி முபல்லிஃக் மற்றும் தன்னார்வலர்களை மல்கானா முஸ்லிம்களின் கல்வி மற்றும் தர்பியத்திற்காக அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஆக்ரா சென்றதற்கான நோக்கம் என்னவாக இருந்தது என்றால், அன்னார் (ரலி) சுயமே சம்பவ இடத்திற்கு சென்றடைந்து அனைத்து விஷயங்களையும் ஆய்வு மேற்கொள்வதாக இருந்தது. மேலும் நடைமுறையில் இருக்கும் தப்லீஃக் மற்றும் தர்பிய்யத் திட்டத்தை மேலும் விரிவாக்கம் செய்வதும், அப்பணிகளை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதாகவும் இருந்தது.

### ஆக்ராவில் இருந்து டெல்லிக்கான பயணம்

நவம்பர் 23-ம் தேதி 1924-அன்று இரவு நேரத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சாந்தனிலிருந்து டெல்லிக்காக பயணத்தை மேற்கொண்டார்கள். மேலும் அந்த இரவிலேயே டெல்லியை சென்றடைந்தார்கள். டெல்லி ரயில் நிலையத்தில் மிகப் பெரியக் கூட்டம் ஒன்று கூடியது. எதுவரை என்றால், நடந்து செல்வது கூட கடினம் ஆகிவிட்டது. டெல்லி மற்றும் சிம்லாவின் உடைய ஜமாஅத் சிற்றுரையை பறைசாற்றியது. அதற்கு ஹுஸூர் (ரலி) அவர்களும் விடையளித்தார்கள்.

### டெல்லியில் இருந்து காதியான் பயணம்

நவம்பர் 23 காலைப் பொழுதில் டெல்லியில் இருந்து புறப்பட்டு அம்பாலா சென்றடைந்தார்கள். மேலும் அம்பாலாவில் இருந்து பட்டாலா சென்றடைந்தார்கள்.

இடையில் எந்த ரயில் நிலையத்தில் எல்லாம் ரயில் நின்றதோ அங்கு ஜமாஅத்துடைய பல்வேறு மக்கள் ஹுஸூர் (ரலி) அவர்களை சந்திப்பதற்கான வாய்ப்பை பெற்றார்கள். அம்பாலா இரயில் நிலையத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் அம்பாலா மதிய உணவிற்கான ஏற்பாட்டை செய்திருந்தனர். ராஜ்பூர் நகர் ரயில் நிலையத்தில் பட்டாலா, சர்ஹிந்த், நாபா



போன்ற ஊர்களைச் சேர்ந்த ஜமாஅத் மக்கள் வந்திருந்தனர். ஜாவா மற்றும் தோராஹா ரயில் நிலையத்தில் ஏராளமான மக்கள் ஒன்றுகூடியிருந்தனர். ஆனால், ஜாவா ரயில் நிலையத்திலிருந்து வண்டி முன்னேறி சென்று விட்டது. இருந்தும் கூட ரயில் நிலையத்தில் ஜமாஅத் மக்கள் தென்பட்டார்கள். அதன் காரணமாக வண்டி நிறுத்தப்பட்டது. மேலும் ஹுஸூர் (ரலி) அவர்கள் சிறிது தூரம் நடந்து சென்று தம்முடைய காதிம்களுக்கு தம்முடன் கைகுலுக்கும் நற்பேறை வழங்கினார்கள்.

லூதியானா ரயில் நிலையத்தில் பார்க்கக் கூடிய விஷயமாக இது இருந்தது. அதாவது லூதியானா மாவட்டம் மற்றும் ஃபிரோஸ்பூர் மற்றும் மலேர்கோட்லா போன்ற இடத்திலுள்ள அனைத்து ஜமாஅத்தினரும் வருகை தந்திருந்தனர். அந்த வரிசை ஒரு முக்கிய தர்பிய்யத்தின் காரணமாக நின்று கொண்டிருந்தது. ஷேக் முஹம்மது ஷஃபீ ஸாஹிப் லூதியானா ஜமாஅத்தின் பொறுப்பாளராவார்கள். அவர்கள் சிற்றுரையை படித்தார்கள். அதற்கு ஹுஸூர் (அலி) அவர்களும் விடையளித்தார்கள். லூதியானாவிற்குப் பிறகு ரயில் வண்டி ஜலந்தர் கேன்டில் நின்றது. அங்கு ஜலந்தர் மாவட்டம், ஹோஷியார்பூர் மற்றும் கபூர்த்தலாவின் ஜமாஅத் பிரதிநிதிகள் மிகப் பெரும் எண்ணிக்கையில் இருந்தார்கள். ஹாஜிபூரா ஊர் தலைவர் ஹஸ்ரத் முன்ஷி ஹபீபுர் ரஹ்மான் ஸாஹிப் அவர்கள் சிற்றுரை நிகழ்த்தினார்கள். பிறகு ரயில் வண்டி ஜலந்தர் மற்றும் பியாஸ் நிலையங்களில் சிறிது நேரம் நின்று விட்டு அமிர்தசரஸ் சென்றடைந்தது. அங்கு பிளாட்ஃபார்மில் அமர்வதற்கான இடம் இருக்கவில்லை. அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு வாழ்த்துகளையும் தெரிவித்து மேலும் கொடியை உயர்த்தி அசைத்தார்கள். லாஹூரின் அப்போதைய தற்காலிக அமீராக இருந்த குரோஷி முஹம்மது ஹுஸைன் ஸாஹிப் அவர்கள் சிற்றுரையை நிகழ்த்தினார்கள். அதற்கு ஹுஸூர் (ரலி) அவர்களும் விடையளித்தார்கள். பிறகு அமிர்தசரஸ் ஜமாஅத்திடம் இருந்து உணவுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சரியாக 11 மணிக்கு ரயில் வண்டி பட்டாலாவை சென்றடைந்தது.

காதியான் ஜமாஅத் மக்கள் ஹுஸூர் (ரலி) அவர்களை வரவேற்பதற்காக பட்டாலாவில் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஹுஸூர் (ரலி) அவர்கள் பட்டாலாவில் இரவைக் கழித்தார்கள். மேலும் நவம்பர் 24, 1924 அன்று தோ ஷம்பா முபாரக் தோ ஷம்பா பட்டாலாவில் இருந்து இரு சக்கர வாகனத்தின் மூலமாக காதியான் சென்றடைந்தார்கள்.

**காதியான் நுழைவுவாயிலில் அன்னாருக்கான உணர்ச்சிப்பூர்வமான மற்றும் மிகவும் சிறப்பான வரவேற்பு**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஐரோப்பாவில் இருந்து தாயகத்திற்கு திரும்பும் பொழுது சிறப்பாக வரவேற்பதற்காக காதியானுடைய வரவேற்பு கமிட்டி, காதியான் மற்றும் பட்டாலாவின் இடங்களில் ஒரு கால்வாய் முன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இன்று அது டல்லா மோடு என்று அழைக்கப்படுகின்றது. இந்த இடத்தில் கூடாரம் அமைத்து மற்றும் வண்ணமயமான கொடிகளால் அலங்கரித்து மிகவும் அழகாக உருவாக்கியிருந்தார்கள். அமர்வதற்காக இருக்கை வைக்கப்பட்டிருந்தது. மேலும் வழித்தடத்தின் மேல் மிகவும் அழகான கதவு வைக்கப்பட்டு அதில்,

اهلا وسهلا ومرحبا

போன்ற வாக்கியங்களும் இடம் பெற்றிருந்தன. ஹுஸூர் (ரலி) அவர்களின் வருகைக்கு முன்னதாகவே மிகப் பெரிய கூட்டமாக காணப்பட்டது. இதில் காதியான் மற்றும் வெளியூர் ஜமாஅத்துகளைச் சேர்ந்த அஹ்மதிகள் மட்டுமல்லாமல் காதியானுடைய ஆரியர்கள் மற்றும் சீக்கிய சமுதாய மக்களும் ஒன்று கூடியிருந்தார்கள். ஏற்பாட்டாளர்கள் வருகை தந்திருந்த அனைவரையும் வழித்தடத்தில் இருந்து கூடாரங்கள் வரை வரிசையாக நிற்க வைத்தார்கள். எல்லாருக்கும் முதன்மையாக ஹஸ்ரத் மவ்லவி ஷேர் அலி ஸாஹிப், மீர் முஹம்மது இஸ்ஹாக் ஸாஹிப் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சந்ததியில் இருந்து சில நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் ஒவ்வொரு நபருடைய உடலும், கண்களும் வழித்தடத்தின் முன் ஒவ்வொரு நொடியும் காத்துக் கொண்டிருந்தன. வெகு தூரத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய வாகனத்தைக் கண்டதும் மக்கள் அனைவரின் முகங்களும் மகிழ்ச்சியாலும், இன்பத்தாலும் மலர்ந்து விட்டன. அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினர். மேலும், தமது அன்பிற்குரிய தலைவரின் பக்கம் பறந்து சென்றிட வேண்டும் என்ற ஆசையில் அனைவரின் மனமும் துடித்தது. ஆனால் ஜமாஅத் அமைப்பின் கட்டுப்பாட்டின் காரணமாக அவர்கள் நிர்பந்தத்திற்கு ஆளாகியிருந்தார்கள். ஹுஸூர் (ரலி) அவர்களும் தன்னுடைய காதிம்களுடைய ஆரவாரத்தை அறிந்திருந்தார்கள். எனவே தான் ஏற்பாட்டாளர்களிடம் ஹுஸூர் (ரலி) அவர்கள் சுயமே ஒவ்வொரு நபரையும் அவரவர் இடத்தில் நிற்கும்படியும் எவர் தன்னுடைய இடத்தை விட்டு விலகுகின்றாரோ அவருடன் கை குலுக்க மாட்டேன் என்று கூறினார்கள்.

இந்த வழிகாட்டல் சென்றடைந்த பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் தம்முடைய இரு சக்கர வாகனத்தை மெதுவாக செலுத்தினார்கள். இரு சக்கர வாகனத்தில் பச்சை நிறக் கொடி அசைந்து கொண்டிருந்தது. அதனை சவ்த்ரி அலி முஹம்மத் ஸாஹிப் அவர்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஹுஸூர் (ரலி) அவர்கள் கதவுக்கு அருகில் சென்ற உடன் முதலில் ஹஸ்ரத் ஷேர் அலி ஸாஹிப் (ரலி) அவர்களையும் பிறகு ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் ஸாஹிப் (ரலி) அவர்களையும் சந்தித்து கைகுலுக்கி நலம் விசாரித்தார்கள். அதனை அடுத்து நீண்ட நேரமாக ஹுஸூர் (ரலி) அவர்கள் ஒவ்வொருவரையும் சந்தித்து கை குலுக்கினார்கள். மக்கள் அனைவரையும் சந்தித்த பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்களை தோளோடு தோள் சேர்த்து அணைத்துக் கொண்டு நீண்ட நேரம் உரையாடினார்கள். அப்போது ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா (ரலி) அவர்களின் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்து ஓடியது. பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் ஸாஹிப் மற்றும் ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் ஆகியோரை சந்தித்து உரையாடினார்கள். பிறகு அனைவரோடும் ஒன்று சேர்ந்து துஆ செய்தார்கள். பின்னர் தனது தோழர்களுடன் காதியான் வரை நடைபயணத்தை மேற்கொண்டார்கள். அந்த நேரத்தில் ஒரு மிகப் பெரிய கூட்டம் அன்னாருடன் இருந்தது.

ஹுஸூர் (ரலி) அவர்கள் நகரத்திற்குள் செல்வதற்கு முன்பு பஹஷ்தீ மக்பரா சென்றடைந்தார்கள். அந்நேரத்தில் பல மலர் மாலைகள் அன்னாரது கழுத்தில் காணப்பட்டன. ஹுஸூர் (ரலி) அவர்கள் அந்நேரத்தில் கூறினார்கள்: ஒருவேளை இந்த விஷயம் சரியாக இருந்திருந்தால் இந்த அனைத்து மலர் மாலைகளையும்

Proprietor off : 044- 2260 1886

**RAZIK XEROX & TELECOM**

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE

AO MULTI COLOUR PLAN XEROX



- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களது அந்த அருளுக்குரிய மண்ணறைக்கு முன் வைத்திருப்பேன். ஏனெனில் இந்த வெற்றிக்கான அடையாளம் அன்னாரது வழிகாட்டல் மற்றும் அன்னாரின் மூலமாகவே கிடைக்கப் பெற்றது. இதன் பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் மண்பானையிலே தண்ணீரை அருந்தினார்கள். பிறகு உளூ செய்து விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மண்ணறைக்கு சென்று தனியாக துஆ செய்தார்கள். பின்னர் தம்மோடு பயணம் செய்த தோழர்களையும் அழைத்து ஒருமித்து துஆ செய்தார்கள். துஆ செய்த பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் ஸாஹிப் (ரலி) (அதாவது ஹுஸூர் (ரலி) அவர்களின் தாய் வழிப்பாட்டனார்) அவர்களின் கபருக்கு முன் நின்று ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். (இவர்கள் ஹுஸூர் (ரலி) அவர்கள் ஐரோப்பிய பயணத்தில் சென்றிருந்த போது மரணமடைந்திருந்தார்கள்.)

பஹஷ்தீ மக்பராவில் இருந்து நகருக்குள் நுழைந்து கொண்டிருக்கும்போது, ஹுஸூர் (ரலி) அவர்கள், ஹாஃபிழ் ரோஷன் அலீ ஸாஹிப் (ரலி) அவர்களிடம் நகருக்குள் நுழையும்போது ஓதக் கூடிய துஆவை ஓதும்படி கேட்டுக் கொண்டார்கள். அதனைத் தொடர்ந்து அனைத்து சகோதரர்களும் உரத்த குரலில் ஓதி வந்தார்கள். அதன்படி ஹாஃபிழ் ஸாஹிப் அந்த துஆவை உரத்தக் குரலில் ஓதினார்கள். அதனைத் தொடர்ந்து மற்றவர்களும் ஓத ஆரம்பித்தார்கள். அந்த துஆ இதுவாகும்;

آَئِبُوْنَ تَائِبُوْنَ عَابِدُوْنَ لِرَبِّنَا
حَامِدُوْنَ صَدَقَ اللهُ وَعْدَهٗ
وَ نَصَرَ عَبْدَهٗ
وَهَزَمَ الْاَحْزَابَ وَحْدَهٗ۔

ஹுஸூர் (ரலி) அவர்கள் மியான் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) மற்றும் மியான் முஹம்மத் அப்துல்லாஹ் ஸாஹிப் (ரலி) ஆகியோரின் வீட்டை கடந்தவாறு விருந்தினர் இல்லத்தை சென்றடைந்தார்கள். அங்கு ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்கள் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் லங்கர்கானாவில் இருந்து அன்னாரை வரவேற்றார்கள். இங்கு நவாப் முஹம்மது அப்துல்லாஹ் கான் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகனான மியான் அப்பாஸ் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹுஸூர் (ரலி) அவர்களை உயர்ந்த மேடையில் அமர வைத்தார்கள். பிறகு ஹஸ்ரத் மீர் முஹம்மத் இஸ்ஹாக் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஒரு ரொட்டியை ஹுஸூர் (ரலி) அவர்களின் முன்னால் வைத்து இது உங்களுக்கும் உங்களுடைய தர்வேஷ்மார்களுக்கும் உரியது என்று கூறி வழங்கினார்கள்.

ஹுஸூர் (ரலி) அவர்கள் அந்த ரொட்டியை எடுத்தார்கள். மேலும் தம்முடைய தோழர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு உரத்தக் குரலில் கோஷங்களை எழுப்பியவாறு முன்னேறினார்கள். மதரஸா அஹ்மதிய்யாவின் பள்ளிவாசலின் பக்கத்திலிருந்து வண்ணமயமான வரவேற்பு கோஷங்களும் வந்தன.

முபாரக் பள்ளிவாயிலின் கிழக்குப் பக்கத்தில் அமைந்திருக்கக் கூடிய வாயிலை சென்றடைந்த உடன் ஹுஸூர் (ரலி) அவர்கள் மக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து விடை பெறுவதற்கான துஆ செய்தார்கள். அந்நேரத்தினுடைய காட்சி எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், மிகவும் உணர்ச்சிப் பூர்வமான தருணமாகவும்,தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தருணமாகவும் இருந்தது. ஹுஸூர் (ரலி) அவர்களின் குரலில் ஒரு வேதனை தென்பட்டது. மேலும் கண்களில் கண்ணீர் தேங்கி இருந்தது. மேலும் அங்கு இருந்த மக்களும் கூட அழுது கொண்டிருந்தார்கள். அதில் ஒரு சிலருக்கு உரத்தக் குரலில் அழுகை வந்து விட்டது. அங்கு உணர்ச்சிபூர்வமான நேரத்தில் ஹுஸூர் (ரலி) அவர்கள் கலங்கிய கண்கள் மற்றும் வலி நிறைந்த தொனியில் கூறினார்கள்:

பாருங்கள்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய துஆ எப்படிப்பட்ட சுவை மிக்கதாக இருக்கிறது என்றால்,அதன் காட்சியை நாம் இன்று கண்டு கொண்டிருக்கின்றோம். ஒரு காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வாதம் செய்தபோது இதே இடத்தில், இதே வீட்டில் அன்னார் (அலை) தனியாக நின்றார்கள். எந்த துணையும், உதவியும் அன்னாருக்கு இருக்கவில்லை. அந்நேரத்தில் நாலாப்புறமும் எதிர்ப்புக் குரல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. அதாவது நவூதுபில்லாஹ் இவர் பொய்யர் ஆவார்; இவர் ஏமாற்றுக்காரர் ஆவார் என்றும், நாங்கள் இவரை ஒரு கொசுவைப் போல் நசுக்கி விடுவோம் என்றும் எதிரிகள் கூறினர். ஆனால், இறைவன் தனது வாக்குறுதிக்கு ஏற்ப அன்னாருக்கு ஆதரவு மற்றும் உதவியை வழங்கினான். அதே சங்கிலியில் பிணைக்கப்பட்ட நாம், இன்று இந்த அளவு மக்கள் ஒன்று கூடி இருக்கின்றோம் என்றால், இது அன்னாரின் காரணத்தாலேயே ஆகும். நமக்கு இறைவன் அனைத்து களத்திலும் வெற்றியை வழங்குகிறான். அன்னாரின் மூலமாக அன்னாருக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில் எந்த உண்மைக்காக நாம் வந்துள்ளோமோ அதற்கான கண்ணியத்தை இறைவன் நமக்கு வழங்கியுள்ளான். மேலும் அன்னாருக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு ஏற்ப அந்த அருட்களின் வாரிசாக இறைவன் நம்மை ஆக்கியுள்ளான். உண்மையை முன்னிறுத்திய வாறு பார்த்தோமேயானால், உண்மை இது தான். அனைத்து மரியாதையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கே உரியதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கே உரியதாகும். மேலும் இறைவனுக்கே உரியதாகும்.

இந்தப் பொன் மொழிகளை பறைசாற்றிய பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் முபாரக் பள்ளிவாசலிற்கு கீழே அலங்கரிக்கப்பட்ட வாயிலில் நுழைந்தார்கள். புனிதமான தெருக்களிலிருந்து படிக்கட்டுகள் மூலமாக முபாரக் பள்ளிவாயிலுக்குள் சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத்(அலை) அவர்களின் காலத்தில் கட்டப்பட்ட பள்ளி வாசலின் பகுதியில் அமர்ந்தார்கள். பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் ஜமாஅத் ஆக இரண்டு ரக்அத் நஃபில் தொழுகையை தோழர்களுடன் சேர்ந்து தொழுதார்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் அக்கூட்டத்திற்கு அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி தன்னுடைய வீட்டிற்கு அதாவது தாருல் மஸீஹிற்கு சென்றார்கள்.

இவ்வாறே ஹுஸூர் (ரலி) அவர்களின் இந்த வரலாற்றுப் பயணம் கிட்டத் தட்ட நான்கு மாதங்கள் முன்பு 12 ஜூலை 1924-ம் ஆண்டு தொடங்கி நவம்பர் 24, 1924 அன்று நிறைவுற்றது. அன்னார் (ரலி) ஐரோப்பாவின் இந்த பெரிய சுற்றுப் பயணத்தின் வெற்றிக் கொடியை நாட்டியவாறு காதியானின் மகத்துவம் வாய்ந்த இம்மண்ணில் மீண்டும் ஒளிர்மித்தார்கள்.

தமிழாக்கம்
மவ்லவி
இர்ஃபான் அஹ்மது

* * * * * * *



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

# முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு ஃபஸ்லே உமர் என்ற பெயர் ஏன் வைக்கப்பட்டது?

( எழுத்து: ஹஸ்ரத் மீர் முஹம்மத் இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்கள்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் ஓர் அடையாளமாக அன்னாருடைய ஒரு பெயர் ஃபஸ்லே உமர் ஆகும் என்று தமக்கு இல்ஹாம் மூலமாக வெளிப்படுத்தப்பட்டது என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். இதன் பொருள் ஹஸ்ரத் உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்களிடம் காணப்பட்ட அந்த சிறப்பு அம்சங்களைக் கொண்டு இவரும் அறியப்படுவார் என்பதே ஆகும். எனவே அந்த சிறப்பு அம்சங்களில் ஒன்று எத்தகையது என்றால், அது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைத் தவிர வேறு எந்த மனிதரிடமும் காணப்பட முடியாது. அதாவது,

(1)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இரண்டாம் வருகையின் காலகட்டத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இரண்டாவது கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டது. எவ்வாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆரம்ப காலகட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலீஃபாவாக தேந்தெடுக்கப்பட்டார்களோ அதேபோன்று இவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இந்த அருள் அல்லது சிறப்புத் தன்மையானது எப்படிப்பட்ட வலுவான மற்றும் வேறுபடுத்தி பார்க்க முடியாத ஒரு விஷயம் என்றால் இவரைப் போன்ற ஃபஸ்லே உமர் என்ற ஒரு நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இரண்டாவது கலீஃபாவாக ஆனதற்கான பெருமையை பெறக் கூடிய ஒரு நபர் இதற்கு முன்பும் இருந்ததில்லை. இனியும் இந்த பதவியை பெறக் கூடிய ஒரு நபர் தோன்றவும் முடியாது. மூன்றாவது நான்காவது, ஐந்தாவது இருபதாவது என்ற அனைத்து எண்ணிக்கையிலும் கலீஃபாக்கள் இந்த இயக்கத்தில் இருந்து கொண்டே இருப்பார்கள். ஆனால், இந்த இரண்டாவது கலீஃபா மட்டும் தான் வர முடியாது. கைர் முபாயீன் எனும் பைஅத்தை புறக்கணித்தவர்களில் (அதாவது லாஹூரிகளில்) வர முடியுமா? என்றால் அவர்கள் கிலாஃபத்தை முற்றாக மறுக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர். முஸ்லிஹ் மவ்வூத் என வாதிக்கும் சிலர் இருக்கின்றனர் என்றால் அவர்களுள் எந்தவொரு நபரும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கிலாஃபத்திலிருந்து மஸீஹ் மவ்வூத் அவர்களின் இரண்டாவது கலீஃபா என்ற அந்தஸ்தை பெறமுடியாது. மேலும் அவர்கள் ஒருபோதும் அவ்வாறான வாதம் புரியவுமில்லை. எனவே இது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்காகவே அவர்களைக் குறித்தே கூறப்பட்ட ஒரு மாற்ற முடியாத வலுவான உறுதி வாய்ந்த அடையாளமாகும் என்பதில் எந்தவோர் ஐயமும் இல்லை.

மேலும், ஒரேயொரு நபரைத் தவிர வேறு எவரும் இந்த பதவிக்கான வாதத்தை செய்யவே முடியாது. மேலும் இந்தப் பண்புப் பெயரிலிருந்தே முஸ்லிஹ் மவ்வூத் யார்? என்பதை அறியு முடியும்! சிந்தித்துப் பார்த்தால் அப்படிப்பட்ட நான்கு உறுதியான அடையாளங்கள் உள்ளன.

(1) அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வித்திலிருந்தும், சந்ததியிலிருந்தும் வழித் தோன்றலாக இருப்பது.

(2) ஒன்பது வருட காலகட்டத்திற்குள் அன்னார்(ரலி) பிறந்தது.

(3) முதலாவது பஷீருக்கு பிறகு உடனடியாக அன்னார் (ரலி) பிறந்தது.

(4) மேலும், அன்னார் (ரலி) ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஜமாஅத்தின் இரண்டாவது கலீஃபாவாக ஆனது.

(2)

இந்த குறிப்பிடத்தக்க சிறப்புகள் மட்டும் அல்லாமல் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களிடம் காணப்பட்ட வேறு சில சிறப்பு அம்சங்களும் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களிடமும் காணப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் மிக அதிகமான வெற்றிகள் கிடைத்ததைப் போன்றும், நாகரீகம் அடைந்த ஏராளமான நாடுகளில் இஸ்லாமியப் படைகளும் முபல்லிஃக்மார்களும் அனுப்பப்பட்டதைப் போன்றும் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களின் காலத்திலும் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் முபல்லிஃக்மார்கள் உலகின் அதிக நாடுகள் மற்றும் பூமியிலுள்ள அதிகப்படியான மூலை முடுக்குகள் வரை சென்றடைந்துள்ளார்கள். மேலும் இயக்கத்தின் அதிக புத்தகங்கள், செய்திகள், பத்திரிகைகள் மற்றும் நாளிதழ்களை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அன்னார் (ரலி) பரவச் செய்தார்கள். மேலும் அன்னாருடைய கிலாஃபத் காலகட்டத்தில் அஹ்மதிய்யத்திற்கு கிடைத்த வெற்றிகள், மேன்மை, வளர்ச்சி மற்றும் அருட்களின் தனிச் சிறப்புகளை எடுத்துரைப்பதற்கான தேவையில்லை. ஏனெனில், அந்த அளவிற்கு இவ்விஷயங்கள் தெளிவாக வெளிப்பட்டுள்ளன. மேலும், அன்னாரின் அறிவுக் கருவூலங்கள் மக்களின் ஆழ்ந்த தாகத்தை தணித்தன.

இதே போன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொடர்பாகவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒரு கனவு இருக்கின்றது. அன்னார்(ஸல்) கூறுகின்றார்கள்: நான் கனவில் ஒரு கிணற்றைக் கண்டேன். அதில் ஒரு வாளி வைக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வலுவிழந்த நிலையில் ஒன்றிரண்டு வாளி தண்ணீரை இறைத்தார்கள். அதன் பின் அந்த வாளி ஒரு தோலினால் உண்டான பெரிய உருளையாக மாறிவிட்டது. மேலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதிலிருந்து எந்த அளவிற்கு தண்ணீர் இறைத்தார்கள் என்றால் மனிதர்கள் மற்றும் ஒட்டகங்கள் அனைவருமே தாகத்தை தணித்துக் கொண்டனர்.

ஆக, இது ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் இருக்கும் இரண்டாம் ஒப்புமையாகும்.

(3)

அதேபோன்று ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் கனவில் இவ்வாறு கண்டேன்; அதாவது நான் பால் அருந்துகிறேன். எதுவரை என்றால் அந்த பால் என்னுடைய நகக் கண் வரை வந்து விட்டது. அதன் பிறகு நான் எஞ்சி இருந்த பாலை ஹஸ்ரத் உமர் பின் கத்தாபிற்கு கொடுத்து விட்டேன்.

ஹுஸுர்! இதனுடைய பொருள் விளக்கம் என்ன? என்று ஸஹாபா பெருமக்கள் கேட்டார்கள். அதற்கு, இதனுடைய பொருள் ஞானம் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஆக, எவ்வாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நபித்துவ ஞானத்தில் பங்கு பெற்றார்களோ அதேபோன்று ஹஸ்ரத் ஃபஸ்லே உமருக்கும் பங்கு கிடைத்தது. மேலும், நண்பர்கள் மற்றும் எதிரிகளும் இந்த அற்புதத்தை பறைசாற்றுகின்றார்கள். அதை மிக விளக்கமாக கூறுவதற்கு அவசியம் இல்லை. இங்கு இதை மட்டும்

நினைவில் வைப்பது போதுமானதாகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பணியில் இருந்த ஆற்றல் மற்றும் அன்னாரின் ஞானம் தொடர்பாக மேலே கூறியுள்ளோம். ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களின் நிலையும் அதைப் போன்றதே ஆகும். அன்னாரின் பௌதீக செயல்பாட்டின் ஆற்றல் மற்றும் அறிவுத் திறன் ரீதியிலான ஆற்றல் ஆகிய இரண்டும் காதியானில் வசிக்கின்ற ஒவ்வோர் அஹ்மதியின் பார்வையிலும் வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது.

இதைக் குறித்தே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு சக்தி வாய்ந்த இரு ஆற்றல்களைக் கொண்ட ஒரு தூய மகன் உமக்கு வழங்கப்படும் என்று இல்ஹாமில் கூறப்பட்டுள்ளது. அதன் பொருள் அவர் வெளிப்புறமான மற்றும் உட்புறமான ஞானத்தால் நிரப்பப்படுவார் என்பதாகும்.

(4)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்விஷயத்தின் மீதும் பெருமிதம் கொண்டிருந்தார்கள். அதாவது, அது தொடர்பாக அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் சில விஷயங்கள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் விண்ணப்பித்தால் என்னுடைய அந்த விண்ணப்பத்திற்கு பிறகு என்னுடைய விருப்பத்திற்கு ஏற்ப திருக்குர்ஆன் வசனங்களும் இறங்கின. அதில் ஒன்றுதான் பர்தா தொடர்பான வசனமும் ஆகும்.

ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களின் வயதோ ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய காலகட்டத்தில் ஆலோசனை கூறுவதற்கான வயதாக இருக்கவில்லை. ஆனாலும், இறை அறிவிப்பு (இல்ஹாம்) பெறுவதற்கான ஓர் அம்சம் இங்கும் காணப்படுகின்றது. அதற்கான உதாரணம் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்கள் கண்ட இந்த கனவு காட்சியாகும். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு

اِنِّیْ مَعَ الْاَفْوَاج اٰتِیْکَ بَغْتَةً

என்ற இல்ஹாம் இறங்கியதாக அன்னார் (ரலி) கண்டார்கள். இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, உண்மையில் இன்று இரவு எனக்கு இவ்வாறு இல்ஹாம் இறங்கியது என்று அன்னார் (அலை) கூறினார்கள்.

ஆக, எவ்வாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தில் தோன்றக் கூடிய ஆன்மிக சிந்தனையானது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வஹீயின் வெளிப்பாடாக இருந்ததோ அதேபோன்று ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களின் கனவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வஹீயின் தோற்றத்தில் வெளிப்பட்டது. இது நான்காவது ஒப்புமையாக இருந்தது.

(5)

ஐந்தாவது ஒப்புமை என்னவென்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வுலகிலேயே அன்னார் சொர்க்கத்திற்குரியவர் என்ற நற்செய்தியை வழங்கினார்கள். அதேபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) தம்முடைய பிள்ளையாக இருந்ததன் காரணத்தினால் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களுக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தியை இவ்வுலகிலேயே வழங்கி விட்டார்கள்.

இது தொடர்பாக அன்னார் (அலை) இவ்வாறு கூறுகின்றார்கள்: பஹஷ்தி மக்பராவில் சேர்வதற்கு என் தொடர்பாகவும், என்னுடைய மனைவி மக்கள் தொடர்பாகவும் இறைவன் விதிவிலக்கு அளித்துள்ளான். மேலும், எவர் இது தொடர்பாக முறையீடு செய்வாரோ அவர் நயவஞ்சகர் ஆவார். இதன் பொருள் எல்லாம் வல்ல இறைவன் என்னுடைய மனைவி மற்றும் என்னுடைய சந்ததிகள் சொர்க்கவாசிகள் ஆவார்கள் என்பதாகும்; அவர்கள் சொர்க்கத்திற்குரியவர்கள் என்பதற்கான அந்தச் செய்தி அவன் புறமிருந்து எனக்கு கிடைத்து விட்டது என்பதாகும்.

இது மட்டுமில்லாமல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு குறிப்பாக சொர்க்கத்திற்கான நற்செய்தி ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்கள் பிறப்பதற்கு முன்பே இல்ஹாம் மூலமாக அறிவிக்கப்பட்டு விட்டது. இதன் பொருள் மவ்லவி மிஸ்ரியினுடைய கூற்றுக்கு மாறாக வாக்களிக்கப்பட்ட மகனின் முடிவு நல்லதாக அமையும்; மேலும், அவருடைய ஆன்மா விண்ணில் உயர்த்தப்படும் என்பதாகும். இந்த சந்தர்ப்பத்தில் இவ்விஷயத்தை கூறுவதும் அவசியமானதாகும்.ஜமாஅத்தில் உள்ள பிற மக்கள் அனைவருக்கும் இது பஹஷ்தீ மக்பராவாக (சொர்க்கத்தின் மண்ணறை) இருக்கிறது;ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய குடும்பத்தார்களுக்கு இது குடும்ப மண்ணறையாகும். ஏனெனில், அவர்கள் புறமிருந்து எந்த ஒரு வஸிய்யத்திற்கான தொகையும் செலுத்தப்படவில்லை என்று கைர் முபாயீன்கள் (அதாவது லாஹூரிகள்) கூறுகின்றனர். இதற்கான பதிலில் இந்த விஷயத்தை நினைவிற் கொள்ள வேண்டும்: அதாவது ஹூஸூர் (அலை) அவர்கள் பஹஷ்தி மக்பராவிறகு அடித்தளம் அமைத்த அந்த சந்தர்ப்பத்தில் தம்முடைய சொத்திலிருந்து அப்போதைய மதீப்பீட்டின் படி ஓராயிரம் ரூபாய் மதிப்புள்ள நிலத்தை சந்தாவில் அதாவது வஸிய்யத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் செலுத்தி விட்டார்கள். அன்னாருக்கு சுயமே வஸிய்யத் (உயில்) செய்ய வேண்டிய எந்தவொரு அவசியமும் இல்லை. ஏனெனில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் சொர்க்கவாசி என்பதே (அஹ்மதி மற்றும் லாஹூரி) இரு பிரிவினர்களின் ஒருமித்த கருத்தாகும். ஓராயிரம் ரூபாய் மதிப்புள்ள நிலத்தை ஹூஸூர் (அலை) அவர்கள் தன்னுடைய குடும்பத்தார் சார்பாகவே வழங்கியிருந்தார்கள்.

(6)

ஆறாவது ஒப்புமை என்பது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) ஆகியோரின் குணாதிசயங்களில் காணப்படுகின்ற ஒப்புமை ஆகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மார்க்கத்திற்காக வெளிப்படுத்திய தன்மான உணர்வையும் கம்பீரத்தையும் அறியாதவர் யார் தான் இருக்க முடியும்? அதேபோன்று இங்கும் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்கள் தொடர்பாக இவ்வாறான இல்ஹாம் உள்ளது:

அவருடைய வருகை மிகவும் அருளுக்குரியதாகவும் இறை கம்பீரத்தை வெளிப்படுத்துவதற்குக் காரணியாகவும் அமையும். மேலும், இறைவனுடைய கருணையும், தன்மானமும் அவரை கண்ணியத்திற்குரிய வார்த்தையுடன் அனுப்பி இருக்கின்றது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்றே மார்க்க விவகாரத்தில் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களும் தன்மான உணர்வு மற்றும் கம்பீரத்தை வெளிப்படுத்தியது அன்னாரின் ஒரு தெளிவான சிறப்பு அம்சமாகும் என்பதை ஜமாஅத்தில் உள்ள அனைத்து மக்களும் அறிந்து இருக்கின்றனர்.


(7)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஃபஸ்லே உமர் (ரலி) ஆகிய இருவருக்கும் இடையில் காணப்படுகின்ற ஏழாவது ஒப்புமை என்னவென்றால் அன்னாரும் முஹத்திஸ் (இறைவனுடன் உரையாடக் கூடியவர்) ஆகவும் முல்ஹிம் (இறை அறிவிப்பு பெறுபவர்) ஆகவும் இருந்தார்கள்.

நாம் அவரிடத்தில் எமது ஆவியை

**இதன் தொடர்ச்சி 22-ம் பக்கம்......**




லண்டன் மஸ்ஜித் ஃபஸ்ல் பள்ளிவாசல் அடிக்கல் நாட்டு விழா நூற்றாண்டு நிறைவடைந்ததையொட்டி லண்டனில் நடைபெற்ற
ஒரு சிறப்புக் கூட்டத்தில்
ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள்
MTA இஸ்லாமாபாத் ஸ்டுடியோவிலிருந்து உரை நிகழ்த்தியபோது







சொற்பொழிவின் போது கலந்து கொண்ட பார்வையாளர்களின் காட்சிகள்




மின்சார ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மஸ்ஜித் ஃபஸ்ல் லண்டனின்
ஓர் அழகிய நிழற்படம்

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. A. Abdur rahman tahir
MOBILE : 8838158410
E-mail: subeditortamil@gmail.com
www.akbharbadr.in

Registered with the Registrar of the Newspapers For India at No PUNTAM/2016/68785

பதர்
வார இதழ்
காதியான்

Weekly BADAR Qadian

Qadian - 143516 Distt. Gurdaspur (Pb.) INDIA

Vol. 9 Thursday 19 - 26 - December - 2024 Issue. 51 - 52

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153 79255
e -mail:managerbadrqnd@gmail.com
ANNUAL
SUBSCRIPTION : Rs. 600/

## தொன்னூற்றெட்டு ஆண்டுகளுக்கு முன்னர்

## லண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசல் பிரம்மாண்டமாக திறக்கப்பட்டது

**ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

லண்டன் பள்ளிவாசல் உருவாகவே கூடாது என்று குழப்பவாதிகள் முயற்சிகள் செய்தனர். ஆனால், இறைவன் அவர்களின் முகத்தில் கரியைப் பூசுவதற்காக பள்ளிவாசலை உருவாக்குவதற்கான நற்பேறை மட்டும் வழங்கவில்லை. மாறாக எப்படிப்பட்ட ஏற்பாடுகளை உருவாக்கி விட்டான் என்றால் அது முழுமை அடைந்த பிறகு பிரம்மாண்டமாக திறக்கப்பட்டும் விட்டது. அது எவ்வளவு பிரம்மாண்டமாக இருந்தது என்றால், இதற்கான உதாரணம் முன்னர் ஒருபோதும் இருந்ததில்லை என்பதை அனைவரும் ஆமோதித்தார்கள். 200-க்கும் மேற்பட்ட இங்கிலாந்து பத்திரிகைகளில் இதைப் பற்றிய செய்திகள் சிறந்த சொற்களில் வெளியாகியிருந்தன. இந்த செய்தித்தாள்கள் இங்கிலாந்தின் செய்தித்தாள்களாகும். இது மட்டுமின்றி மற்ற பிற நாடுகளிலிருந்து வெளிவரக் கூடிய செய்தித்தாள்களும் இருக்கின்றன. அதிலும் இதைப் பற்றிய குறிப்பு வந்துள்ளது. அந்த செய்திகளும் நமக்கு கிடைத்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறாக தற்போது வரை குறைந்தது 20,25 கோடி மக்கள் வரை இந்தச் செய்தி சென்றடைந்துள்ளது. அதாவது லண்டனில் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. அதற்கான திறப்பு விழாவும் நடைபெற்று விட்டது. அதை அஹ்மதிய்யா ஜமாஅத் கட்டியது. அந்த ஜமாஅத்தின் இமாம் மிர்ஸா குலாம் அஹ்மத் ஸாஹிப் ஆவார்கள். அவர்களை இறைவன் மஸீஹ் மவ்வூத் மற்றும் நபியாக அனுப்பியுள்ளான். அன்னாருடைய பணி இஸ்லாத்தை பரப்புவதாகும்.

உலகின் மூன்றில் ஒரு நபர் வரை இந்த விஷயம் சென்றடைந்துள்ளது. மேலும் இங்கிலாந்தின் பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் பிற தலைவர்களுடைய கருத்து என்னவென்றால் நாம் இரண்டு கோடி ரூபாய் செலவு செய்து இருந்தாலும் தற்போது கிடைத்துள்ள பிரபல்யம் கிடைத்திருக்க முடியாது. மேலும், பள்ளிவாசலுக்காக செலவு செய்யப்பட்ட அந்த ரூாய் செய்த பணியை இரண்டு கோடி ரூபாய் அல்ல; மாறாக, இரண்டு கோடி பவுண்டுகளாலும் கூட செய்திருக்க முடியாது என்றும் சில நபர்கள் கூறியுள்ளனர். மேலும் இந்த பள்ளிவாசல் திறப்பு விழாவின் போது பெரும், பெரும் நபர்கள் கலந்து கொண்டனர். மூன்று பிரபுக்கள், பதிமூன்று பாராளுமன்ற உறுப்பிர்னர்கள், பல்வேறு நாடுகளின் தூதுவர்கள், அமைச்சர்கள், நவாப் மற்றும் கண்ணியத்திற்குரிய தலைவர்களும் ஒரு பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்; கலந்து கொண்டது மட்டுமல்லாமல் உயர் அந்தஸ்தில் இருந்த அந்த மக்கள் இந்த நிகழ்ச்சியில் அதீத ஆர்வத்தை வெளிப்படுத்தியது மட்டுமின்றி, மகிழ்ச்சியும் அடைந்தார்கள். சிலரோ பணி செய்வதை பெருமிதமாகக் கருதினார்கள். மேலும் மிகுந்த ஆர்வத்துடன் அனைத்துப் பணியிலும் பங்கு பெற்றார்கள்.

அடுத்து, இந்தியாவின் பெரும், பெரும் நபர்களும் கூட இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். எந்த அளவிற்கு என்றால், மகாராஜா பரத்வான் அவர்களும் கலந்து கொண்டார்கள். அந்த சந்தர்ப்பத்தில் உரையாற்றுவதற்கு அவர்கள் அனுமதி வேண்டினார்கள். மேலும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். மேலும் கூறினார்கள்: நான் ஓர் இந்துவாக இருந்தாலும் கூட இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதை எனது கடமையாக கருதுகிறேன்.

அடுத்து, 11 அரசாங்கங்களின் பிரதிநிதிகளும் இந்த சந்தர்ப்பத்தில் வருகை தந்திருந்தார்கள். ஜெர்மனி, இத்தாலி, சீனா போன்ற நாடுகளின் மந்திரிகளும் கூட கலந்து கொண்டார்கள். எனவே பள்ளிவாசலுக்காக திரட்டப்பட்ட அந்த பணம் எங்கே சென்றது? என்று கூறக் கூடியவர்களுக்கு இதுவே பதிலாகும். அவர்கள் நன்றாக இதை நன்றாக கேட்டுக் கொள்ளட்டும்! அந்த பணம் இங்கு சென்றுள்ளது (செலவிடப்பட்டுள்ளது).

(அல்ஃபஸ்ல் காதியான் தாருல் அமான், நவம்பர் 9, 1926)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab.
And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian Distt. Gsp-143516, Punjab. India Editor: O.M.Muzzammil Ahmad